Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 22 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් மார்ச் 30-ஏப். 05, 2003

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 505

## மூண்டது யுத்தம்

## ஆறாம் சுற்றில் அடைந்தது என்ன?



## மைதானத்துக்கு வெளியே...!

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## துறவு

ஒரு நாள் ஒரு பிச்சைக்காரன் ஒரு துறவியின் இருப்பிடம் சென்றான். துறவியோ சொகுசு மெத்தையில், அழகுக் கூடாரத்தில், தங்கக் கட்டிலில் இருந்தார்.

இதைக் கண்ட பிச்சைக்காரன் "இதென்ன அநியாயம்" என்றான். பின் "ஐயா! மதிப்புக்குரிய துறவியாரே! உங்கள் ஞானம் பற்றியும், துறவு பற்றியும் பெரிதும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், உமது இந்தக் கோலம், சொகுசான சுற்றுப்புறம் என்னைக் குழப்புகிறதே" என்றான்.

துறவி சிரித்துக்கொண்டே சொன்னார்,


"இவைகளை எல்லாம் இப்படியே விட்டுவிட்டு உன்னுடன் வர நான் இப்பொழுதே தயார்" சொல்லியடிபடியே எழுந்து விறுவிறுவெனப் பிச்சைக்காரனுடன் நடந்தார். சிறிது தூரம் சென்றதும் பிச்சைக்காரன் பதைபதைத்து, "எனது பிச்சைப் பாத்திரத்தை உங்கள் கூடாரத்திலே விட்டுவிட்டேன். அது இல்லாமல் என்ன செய்வேன்? தயவுசெய்து கொஞ்சம் இங்கேயே இருங்கள். அதை எடுத்து வந்துவிடுகிறேன்" என்றான்.

துறவி சொன்னார், "தங்கக் கட்டிலும் பட்டு மெத்தையும் அங்கேதான் இருக்கின்றன. என் இதயத்தின் மேல் அல்ல. உன் பிச்சைப் பாத்திரம் உன்னை இந்தத் துரத்துத் துரத்துகிறதே"

உலகத்தில் இருப்பது பற்று இல்லை. உன் மனதில் உலகம் இருப்பதுதான் பற்று. உன் மனதிலிருந்து உலகம் மறைந்துவிட்டால் அதுதான் துறவு.

தயாபரி.

# ஆன்மீகம்



## விண்ணரசு

"விண்ணரசு" என்ற ஒரு சொல் விவிலியத்தில் திருமுழுக்கு அருளப்பனாலும், கிறிஸ்துவாலும் முன்மொழியப்படுகிறது. இது மன்னுயிர்கள் இன்புற்று வாழும் அரசு. அதாவது இதயத்தில் இறை ஆட்சி என்பதாகும்.

இந்த விண்ணரசு சொர்க்கமல்ல; பரலோக இராச்சியமல்ல. எல்லோரும் இன்புற்று வாழும் ஒரு சமூக நிலைமையைக் கொண்ட அரசு.

"மாதர் அருகூட்டும் பைங்கிளியும், ஆடற் பருந்தும் ஒரு கூட்டில் வாழும் உலகு" என்பது போல், சிங்கமும் சிறுமுயலும் ஒன்றாக வாழும் உலகு. இது ஒரு கற்பனை இராச்சியம் அல்ல; இலட்சிய இராச்சியம். அடையப்பட வேண்டிய அரசு.

பசியும், பிணியும், பகையும், போரும் இல்லாத உலகு, அரசு. நெஞ்சில் செருக்கும் மஞ்சக் கனவும் இல்லாத அரசு விண்ணரசு.

"உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்று பிரார்த்திக்கும்படி கூறும் கிறிஸ்து, அனுதின உணவை அனைவரும் பெறவும், அனுமதியுள்ள சமூகத்தைப் படைக்கவும் அழைப்பு விடுக்கிறார். "கடவுளே, எனக்கு ஏழ்மையும் வேண்டாம், செல்வமும் வேண்டாம், அன்றாட உணவே போதுமானது. அதுவும் நான் உயிரோடு இருக்கும்போதே எனக்குத் தர வேண்டும்" என்று விவிலியத்தில் பழமொழி. ஆகமக்காரன் கடவுளைப் பிராத்திப்பது இந்த விண்ணரசு பற்றிய கருத்தியலின் அடிப்படையில்தான். இந்த விண்ணரசில், உயர்வுமில்லை தாழ்வுமில்லை, ஏழை செல்வன், ஒடுக்குவோன், ஒடுக்கப்படுவோன் இல்லை. படித்தவன் பாமரன் வேறுபாடு இல்லை, பால், இன, மத, சாதி, நிற, பிரதேச, வேறுபாடு இருப்பதில்லை. அந்தக் கருத்தியலையே கிறிஸ்து தமது விண்ணரசு பற்றிய கடுகுமணி உவமையில் சுட்டிக்காட்டுகிறார். (மாற்கு 4:30-32) அன்றைய சூழலில் மட்டுமல்ல, இன்றைய சூழலிலும் இந்த விண்ணரசு அவசியப்படுகின்றது.

சாரவாகனன்

## ஷைத்தானின் தூண்டுதலே 'கொட்டாவி!'

'கொட்டாவி' விடுவது ஷைத்தானின் தூண்டுதலாகும். தொழுகையின் போது யாருக்கேனும் கொட்டாவி வந்துவிட்டால் தன்னால் முடிந்தவரை அதனைத் தடுத்துக்கொள்ளுங்கள். கொட்டாவிவிட வாயைத் திறப்பதும் ஹா!ஹா!! என்று சத்தமிடுவதும் ஷைத்தானின் தூண்டுதலே அன்றி வேறொன்றுமில்லை.

ஆதாரம்: புகாரி

அல்லாஹ் கொட்டாவி விடுவதை விரும்பவில்லை. அது சோம்பேறிகளின் கெட்டதும், அருவருக்கக் கூடியதுமான செயலாகும்.

மேலும் கொட்டாவி விடும்பொழுது வாயை ஆயாசமாகத் திறந்து பயங்கரமான சத்தம் எழுப்பினால் அது மனிதனை வழி கெடுக்கும் ஷைத்தானுக்கு உச்சாகத்தையும் உத்வேகத்தையும் கொடுக்கிறது.

எனவே கெட்ட ஆவி என வர்ணிக்கப்படும் கொட்டாவி வந்தால் அதனை நாம் அடக்க முயற்சிக்க வேண்டும். அப்படியும் அது தன்னை மீறி வந்துவிட்டால் வாயைக் கையால் மூடிக்கொள்வது நலமாகும்.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

## கவிதைப் போட்டி இல.502

### பரிசுக்குரிய கவிதை

### எமது வாழ்க்கை

ஓடி ஓடி ஓய்ந்து
போனோம்
உணவு இன்றி ஓடாய்
போனோம்
இனி இழக்க எதுவுமில்லை
ஏழை எம் உயிர் தவிர.

க.நளாயினி-நீர்கொழும்பு.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### விடி(வு)யல் எப்போது?

இழந்துவிட்டோம்-இனி...
இழப்பதற்கே இல்லை!!
ஓய்ந்துவிட்டோம்-இனியும்...
இயலாது என்று!!
இருந்தும்-ஏங்குகின்றோம்...
ஓர் நிம்மதி விடியலுக்காக!!?

மூக்கன் விஜயதீபம்-பசறை.

### கால சூரியன் நாளை நமக்கே!

"ஓடி ஓடி ஓய்ந்துவிட்டதா கால்கள்,
தேடி தேடி களைத்துவிட்டதா உடல்கள்,
தூக்கி தூக்கி தேய்ந்துவிட்டதா கைகள்..?
தொல்லைகள் தொடர்கிறதா..?
துயரங்கள் பெருகின்றதா..?
மரம் தாங்கும் நிலம் போல
மனம் தாங்க மதியுண்டு!
கலங்காதே மனமே!
கால சூரியன் நாளை நமக்கே!"

ஈா.ஜெயபாலன்-பிபில்ல.

### நிரந்தரம்

தட்டு வச்சி கட்டிய பங்களா
எல்லாம் தரைமட்டமாகிப்
போனதால் இனி மரத்தடியும்
மண்குடிசையும்தான் நிரந்தரம்
எங்களுக்கு

இராமச்சந்திரன் தவேந்திரன்-
ஹாலி-எல.

### விடியும்

உன்பாரம் சுமக்க
உனக்கு விழுதில்லை...
சூழவும் பார்
மனமெல்லாம் இருட்டு
இன்று மட்டும்
மடிந்தேன் உனக்கு
நம்பிப் புறப்படு. நாளை
விடியட்டும் கிழக்கு.

தி.கணேஷ்-காந்தியூர்.

### பரிதாபம்

சுமையோடு வருவோர்க்கு
இமை மூடிச்சாய
துணையான மரமே
உனைக்கட்சிச் சி(ன்)னமாய்
கொண்டோர்கள் இன்று
கிளையாகப் பிரிந்து
பலம் குன்றி நிற்கும்
பரிதாபம் பாராய்

ஏ.தஸ்னிம் சமீரா-மருதமுனை.

### பிரதிபலிப்பு

பல பெட்டி கொண்டு
பொதி கட்டி வந்து
நடு வீதியோரத்தில்
நலமற்று வீற்றிருக்கும்
இனந்தெரியா இவர்களின்
முகக்குறி காட்டிடும்
சோகமென்ன?

ஏ.எல்.மொஹமட் நவாஸ்-
மீறாவோடை-04.

### பூக்கவில்லை

வானத்தில்...
நட்சத்திரம் பூக்கின்றது...!
பூமியில்...
பூக்கள் பூக்கின்றது..!!
எம் வாழ்வில்
வறுமையைத் தவிர...
வேறு எதுவுமே
பூக்கவில்லை...!!

தமிழாம்பிகை எஸ்.ஜெகன்-
நானாட்டான்.

### அனர்த்தமா? வருத்தமா?

எண்ணா விளைவுகளால்
அகதிகள் ஆவதும்
உண்ணா விரதங்களால்
கைதிகள் சாவதும்
இயற்கை அளித்த அனர்த்தமா?
இல்லை;
இனங்கள் கொடுத்த வருத்தமா??


ப்ரியநேசி-களுத்துறை (தெற்கு)

### ஏன் இந்த மௌனம்?

ஊரிழந்து உறவிழந்து!
சொத்திழந்து சுகமிழந்து!
பெற்றபிள்ளை தானிழந்து!
பேதலித்து வாழும் எமக்கு!
சொந்த இடம் திரும்பியதும்!
இந்த சோகமெல்லாம்
மறைந்திடுமா?

ஹப்புத்தளையூர்-மனோ கோபாலன்.

## கவிதைப் போட்டி இல.505




எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 05.04.2003

கவிதைப் போட்டி இல.505
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### ஆதரிக்க யாருமில்லை

இளைப்பாறும் வயதில் களைப்பாறும்
நிலையில் நாம் இல்லை
பாழாய்ப் போன போருக்கு
பலிக்கடாவாகிய நாங்கள்
ஊர் இழந்தோம் வீடு இழந்தோம்
கவனிப்பார் அற்று மரத்தடியில்
தஞ்சம்-நாட்டில் இது போன்ற
நிகழ்வுகளுக்கு ஏது பஞ்சம்

ஏ.ஆர்.எம்.இக்பால்-இரத்தினபுரி.

### எங்கள் கூட்டம்!

குடியிருக்க ஒரு குடிசையில்லை!..
நிவாரணம் என்ற பெயரில்
வந்த தெல்லாம் வழிமாறி
போனதால்?...,
நிர்க்கதியாய்,! மந்தைகள் போல்
மரத்தடியில் நாங்கள்!...

சு.சுபா-தலவாக்கலை.

### தவிப்பு

போரினில் வீடுகள் அழிப்பு!
விவசாய நிலங்களிலும்
கண்ணி வெடி புதைப்பு!
பிள்ளைகளும் சந்தேகத்தின்
பேரில் சிறையிலடைப்பு!
அனைத்தையும் இழந்த
பெற்றோர்கள் கவலையுடன்
மரத்தடியில் தவிப்பு!

ரா.தமிழ்வாணன்-இரத்தினபுரி.

### சுருக்கிச் சொன்னால்...!

எம் தேசத்தின் முடிந்த
யுத்தத்தில் நாம் அநுபவித்த
துன்ப துயரங்கள்;
இழப்பு இம்சைகளை;
ஒரு நூலாக வெளியிட்டால்
இந்த வருடத்துக்கான
நோபல் பரிசு எமக்குத்தான்
கிடைக்கும்!

ஏ.எப்.எம்.றியாட்-
முள்ளிப்பொத்தானை.

# உங்கள் பக்கம்

## மன்னார் விவசாயிகளின் அவலம்

மன்னார் மாவட்டத்தில் கடந்த காலங்களை விட இவ்வருடம் அதிகமாக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலபோக அறுவடைக் காலம் தொடங்கிவிட்ட இவ்வேளையில் விவசாயிகள் தமது நெல்லை நியாய விலைக்கு விற்பனை செய்ய எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை என்பதை மாவட்ட விவசாயிகள் விசனத்துடன் தெரியப்படுத்துகின்றனர்.

தற்போது சிவப்பு அரிசி தரும் நெல்லின் விலை 700 ரூபாவிற்கும் சம்பா இனத்தின் விலை 850 தொடக்கம் 900 ரூபாவாகவும் தனியார் அரிசி ஆலை முதலாளிகள் கொள்வனவு செய்கிறார்கள். இந்நிலை தொடருமாயின் மன்னார் மாவாட்ட விவசாயிகள் நட்டமடைவதுடன், எதிர்வரும் காலங்களில் நெற்செய்கையைக் கைவிடும் நிலையும் ஏற்படலாம்.

வாக்குறுதிகளை மட்டும் அள்ளி வீசும் மன்னார் அரசாங்க அதிபர் திரு. விஸ்வலிங்கமும், விவசாயிகளின் பிரச்சினைகளைக் கண்டு கொள்ளத் தெரியாத கமநல உதவி ஆணையாளரும், ஓட்டுக் கேட்க மட்டும் விவசாயிகளைத் தேடிவரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

மண்ணின் மைந்தர்கள் என்று புகழ்பாடும், மண் வாசனையே இல்லாத மன்னாரில் பிறந்த உயரதிகாரிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? பெயருக்கு மட்டும் இருக்கும் விவசாயிகள் சங்கங்களும், கம விதானைமாரும்? விவசாய அமைப்பின் தலைவர்களும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

கண்துடைப்புக்காக கூட்டுறவுச் சங்கத்தால் நியாய விலைக்குக் கொள்வனவு செய்கிறோம் என்று கூறி, பின் இடைநிறுத்தப்பட்டதற்குக் காரணம் என்ன? ச.தொ.ச. மூலம் நியாய விலைக்கு நெல் கொள்வனவு செய்ய ஏன் ஏற்பாடு செய்யப்படவில்லை.

கடந்த வருடம் கால போக நெல்லை ச.தொ.ச. கொள்வனவு செய்ய முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அமைச்சர் றெஜிரணதுங்க ஆகியோர், நானாட்டான் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. சந்தாம் பிள்ளை அவர்களின் வேண்டுகோளின்படி உடனடியாக, நேரடியாக அரசாங்க அதிபருக்கு உத்தரவிட்டும் அதை நடைமுறைப்படுத்தாக கையாலாகாத தன்மைக்கு காரணம் யார்?

எனவே மன்னார் மாவட்ட விவசாயிகள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும். அவ்வமைப்பு சுதந்திரமாக செயற்பட வேண்டும். விவசாயிகளின் நலத்தைப் பேண வேண்டும். பாதுகாக்க வேண்டும். விவசாயிகளின் ஒருமித்த சக்தியை உயரதிகாரிகள் உணரச் செய்ய வேண்டும்.

ஆர். சுதா, பெரிய கடை, மன்னார்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசக[ர்] சாலை

### உன் மூச்சே எம் பேச்சு!

தெவிட்டாத தேன் மொழியில் சுவை மிக்க செய்திகளை எம் வாசகர் மத்தியில் அள்ளித் தரும் எம் முரசே!

நீ இப்போது 500வது இதழிலிருந்து மேலும் பல இன் சுவை அம்சங்களை ஏந்திய வண்ணம் எம் கைகளில் வந்து தவழுகிறாய், தொடர்ந்தும் சிறப்புற வரவேண்டும் என எதிர்பார்த்து வாழ்த்துகிறேன்.

ஏ.எல்.மொஹமட் நவாஸ்,
மீறாவோடை-04.

என் இனிய தினமுரசே!

ஐந்நூறாவது இதழில் காலடி வைத்து புத்தம் புதிய அம்சங்களைத் தாங்கி சூடு-சுவை- சுவாரசியம் என்ற முனைப்புடன் வாசகர்களின் இதயமெங்கும் பொங்கி வலம் வரும் உன் சேவை வளர வாழ்த்துகிறேன்.

சி.இன்பராஜ்-மீசாலை மேற்கு.

### ஐந்நூற்றைந்து இதழ்

வியாழன் விடிந்த வேளை
விழி எதிர்பார்த்திருப்பது
தினமுரசு தினமுரசு தினமுரசே!...
தரணியில் தலை நிமிர்ந்து
கரத்தினில் காத்திரமாய் தவழ்வது
தினமுரசு தினமுரசு தினமுரசே!...
மாணவர் முதல் மாவீரர் வரை
மன மகிழ்ந்து சுவைத்திடுவது
தினமுரசு தினமுரசு தினமுரசே!..
வண்ண வண்ணக் கவியுடனும்
வளமான கதை, கட்டுரை தருவதும்
தினமுரசு தினமுரசு தினமுரசே!
வனப்பு மிகு சினிமாப்பட
பக்கங்களும்
வாசகர் மனதைக் கவர்ந்திழுப்பதும்
தினமுரசு தினமுரசு தினமுரசே!
ஐந்நூற்றைந்து இதழ்தனிலும் மேலும்
நூதனமாய் நயமுடன் நற்பெயர்
பரப்புவதும்
தினமுரசு தினமுரசு தினமுரசே...!

திருமதி ஆரிபா பாறூக்-மூதூர்.

அன்பின் தினமுரசே..



உன்னை வாழ்த்துவதற்கு வார்த்தைகளின்றி என் தொண்டைக்குழி திக்குதே!...

முரசே... உணவுகள் பலவிதம்... அதன் சுவைகளும் பலவிதம்... எல்லோருக்கும் எல்லா விதமான சுவைகளும் பிடிப்பதில்லை. உன்னில் நான் அடைந்த ரசனை சுவையைப் போல்.. பல இலட்சக்கணக்கான வாசகர்களும் உன்னை சுவைக்கின்றனர். ஏன் தமிழ்நாடு (இந்தியாவின்) கூட ஒரு கணம் ஆடிப்போன வரலாறும் உண்டு. சுவைக்கத் தெரிந்தவனுக்குத்தான் அதன் ரசனையும் தெரியும்.

நம் நாட்டிலும் தற்போது பத்திரிகைகள் அதிகரித்துக் கொண்டேயுள்ளது. அனைத்தும் கட்சிகளுக்கும் அரசாங்கத்திற்கும் விலை போகின்றன. ஆனால் காலத்திற்கேற்ப தன் வாசகர்களுக்கும் சமுதாயத்திற்கும் ஏற்ற முறையில் மக்களின் நாடித் துடிப்பையறிந்து மக்களுக்காகவே வெளியாகின்ற பத்திரிகையென்றால் இவ்வுலகிலே தமிழ் பேசுகின்ற பத்திரிகைகளில் "தினமுரசு" பத்திரிகையென்று அடித்துக் கூறும் அளவு அதன் ஆக்கங்கள் அமைந்துள்ளன. இன்னும்...

வாசகர்களின் நலன்களையறிவதற்காக பத்திரிகையுடன் மடலையும் அனுப்பி வாசகர்களின் குறைநிறைகளையும் கேட்ட ஒரே பத்திரிகையென்றால் அது "தினமுரசேயாகும்"

உன் வாசகர்கள் தற்போது எதிர்பார்ப்பது, உலகில் வன்முறைகள், புதுமைகள் என்று நாளுக்கு நாள் அதிகரிப்பதால் உன்னை விட்டால் எங்களால் உண்மை விடயங்களையறிய யாருமே இல்லை. நாங்கள் இவ்வுலக இருளில் ஒளிந்துள்ள பறவைகள். உன் வியாழன் விடியலில் தான் எங்கள் சுதந்திரமே உள்ளது.

எம்.எஸ்.பரீஸ் அகமட்-ஜித்தா சவுதி அரேபியா.

# இழப்புகள் குறித்து அரபுலக, மேற்கத்தைய ஊடகங்களில் முரண்பட்ட தகவல்கள்

## ஈராக்கிற்கு ரஷ்யா உதவுவதாக அமெரிக்கா குற்றச்சாட்டு!

பக்தாத்தை நோக்கி முன்னேறிச் செல்லும் அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் மீது தீவிர எதிர்த் தாக்குதல்களை மேற்கொண்டு வரும் ஈராக்கிய குடியரசு இராணுவம் 50க்கும் மேற்பட்ட அமெரிக்கத் துருப்புக்ளைக் கொன்றும் நூற்றுக் கணக்கானோரைக் காயப்படுத்தியும் இருப்பதாக ஈராக் அறிவித்திருக்கிறது.

இரு தரப்பிலும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை குறித்து முரண்பட்ட, சில நேரம் மிகைப்படுத்தப்பட்ட தகவல்களே வெளிவருகின்றன.

மேற்குலக ஊடகங்கள் நேசப் படையணியின் இழப்புக்கள் குறைவாக இருப்பது போலவும் அவை பக்தாத்தை அண்மித்துவிட்டதாகவும் செய்திகளை வெளியிட்டு வரும் அதே நேரம் அரபுலக செய்தி ஸ்தாபனங்கள் இதற்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் கூடுதலான அளவு உயிரிழப்புக்களைச் சந்தித்ததாகத் தெரிவிக்கின்றன.

103 அமெரிக்கப் படையினர் நஸிரியா என்ற இடத்தில் நடந்த மோதலில் கொல்லப்பட்டதாக டுபாயில் இருந்து ஒளிபரப்பாகும் அரேபிய தொலைக்காட்சி சேவை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரான் தகவல்களை மேற்கோள் காட்டி வெளியிட்டுள்ள இந்தச் செய்தியில் கூட்டுப் படைகள் பலத்த சேதங்களை எதிர்கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க தற்போதைய யுத்தத்தில் இலக்ரோனிக் சாதனங்களைச் செயலிழக்கச் செய்யும் தொழில்நுட்பத்தை ரஷ்யா ஈராக்கிய இராணுவத்திற்கு வழங்கி வருவதாக வாஷிங்டன் குற்றஞ் சாட்டியுள்ளது.

இரவிலும் பகலைப்போல பார்க்க உதவும் கண்ணாடிகள், தாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் போன்றவற்றை ஈராக்கிற்கு விநியோகித்தது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ரஷ்ய அதிபர் விளாதிமீர் புடின் உடன் தொலைபேசியில் உரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா வழங்கியுள்ள தொழில்நுட்பத்தின் அடிப்படையில் ஏவுகணைகளை செயலிழக்கச் செய்யவும் அதி நவீன தொலைத் தொடர்புக் கருவிகளின் செயற் திறனை மழுங்கடிக்கவும் ஈராக்கினால் முடியும் என வாஷிங்டன் அதிகாரிகள் கருதுகின்றனர்.

எவ்வாறெனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை ரஷ்யா மறுத்துள்ளது. இது அமெரிக்காவால் நிரூபிக்க முடியாத, எந்தவித அடிப்படையும் அற்ற குற்றச்சாட்டு என ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் இகார் இவானோ தெரிவித்திருக்கிறார்.

# "அபிவிருத்தியைத் தடுக்கிறார்கள்"

## முஸ்லிம் காங்கிரஸ் மீது ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் சாடல்

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம்.பி.க்கள் சிலருக்கும் இடையில் அண்மைக் காலமாக உருவெடுத்துள்ள முறுகல் நிலை, அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸுக்குள் மீண்டும் பிளவுகளைத் தோற்றுவிக்கும் அபாயம் எழுந்துள்ளது.

சமீபத்தில் அம்பாறைக்கு விஜயம் செய்த ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்கள் அந்த மாவட்டத்தின் கீழ்மட்ட ஐ.தே.க. உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸையும் அதன் தலைமைத்துவத்தையும் கடுமையான வார்த்தைகளால் தாக்கினர்.

அம்பாறை மாவட்டத்தில் ஐ.தே.க. அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தடையாக இருந்து வருகிறது என்று ஐ.தே.க. உறுப்பினர்கள் தமது கட்சியின் முக்கியஸ்தர்களது கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதன்போது சுகாதார அமைச்சரும் அம்பாறை மாவட்ட ஐ.தே.க. எம்.பி.யுமான பி.தயாரத்ன ரவூப் ஹக்கீமை கடுமையாகச் சாடினார். தற்போது நாட்டில் நடைபெறுவது ஐ.தே.க.வின் ஆட்சியே தவிர முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அல்ல என்பதை அக் கட்சியினர் நினைவில் கொள்ள வேண்டும் என்று தயாரத்ன குறிப்பிட்டார். நாய் வாலை ஆட்டலாம், வால் நாயை ஆட்டுவிக்க நினைக்கக் கூடாது என்று அமைச்சர் தயாரத்ன கூறியிருக்கிறார்.

ஐ.தே.க. உறுப்பினர்களால் மு.கா.வுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய்ந்து பிரதருக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் நோக்குடன் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் செனரத் கபுகொடுவ அம்பாறைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதேவேளை ஐ.தே.க.வுடன் தொடர்ந்து நல்லுறவைப் பேணி அரசாங்கத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவது தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸுக்குள் இரு வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. சிலர் ஐ.தே.க தலைமையிடம் இது குறித்துக் கடுமையான ஆட்சேபம் தெரிவித்து அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுக்க வேண்டும் எனக் கூறிவரும் அதே நேரம், மற்றப் பிரிவினர் ஐ.தே.க. வுடன் தொடர்ந்து நல்லுறவைப் பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

# "உள்நாட்டு மக்களின் அநுபவத்தையும் ஆழமான அறிவையும் வைத்தே இனப்பிரச்சினைக்கு தீர்வைத் தேடவேண்டும்" - இந்திய உயர் ஸ்தானிகர்

இளைஞர்கள் வெளிநாடுகளில் சுற்றித் திரிவதால் மாத்திரம் எதையும் முழுமையாக அறிந்துகொள்ள முடியாது. இங்குள்ள மக்களின் அநுபவங்களை அடிப்படையாகக் கொண்டும், ஆழமான அறிவின் மூலமுமே தீர்வைத் தேட முடியும் என்று இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் நிருபம் சென் கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

யாழ் நூல் நிலையத்திற்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட நூல்களை அன்பளிப்புச் செய்யும் வைபவம் திங்கள் அன்று இந்திய கலாசார நிலையத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அத்தகைய ஆழமான அறிவுத் தேடலுக்கு இந்த நூல்கள் உதவுமென்று அவர் கூறினார்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்துக் கருத்துத் தெரிவித்த நிருபன் சென் ஜப்பான் பேச்சுக்களில் எட்டப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் ஜனநாயகம் பன்முகத் தன்மை என்பவற்றைச் செயலளவில் உறுதி செய்யவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

யாழ். நூல் நிலையத் திறப்பு விழா தொடர்பான சர்ச்சையில் முன்னாள் மேயர் செல்லன் கந்தையன் துணிச்சலாக நடந்துகொண்டதையிட்டு நிருபன் சென் பாராட்டுத் தெரிவித்தார்.

இந்தியா அன்பளிப்புச் செய்த இந்த நூல்களைப் பெற்றுக் கொண்டு உரை நிகழ்த்திய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா கூடுதல் பங்களிப்பு செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

நான் இப்போது மிகுந்த சர்ச்சைக்குரிய நபராக மாறியிருக்கிறேன். ஆனந்தசங்கரி சகலதையும் துணிச்சலாகப் பேசுவார் என்று சிலர் கூறுகிறார்கள் ஆனால் உண்மையில் அப்படியல்ல. என்னாலும் பேசமுடியாத பல விடயங்கள் மீதமிருக்கின்றன. எங்களுக்கும் ஆபத்து இருக்கவே செய்கிறதென்று ஆனந்தசங்கரி கூறினார்.

இந்த நிகழ்வின்போது செல்லன் கந்தையனும் உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா உட்படப் பல தமிழ் அரசியல் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

## அரச சேவை ஸ்தம்பிதம்

புதன்கிழமை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தத்தின் காரணமாக அரசாங்க செயலகங்கள், திணைக்களங்கள். வங்கிகள் அனைத்தும் முற்றாக செயலிழந்ததுடன் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

அரச ஊழியர்களின் சம்பளத்தை 4 ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்குமாறு கோரி இந்த வேலை நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அன்றைய தினம் தலைநகரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

50க்கும் மேற்பட்ட தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

# சீன நாட்டவர்களின் சடலங்களை தேடும் முயற்சி தொடர்கிறது

கடந்த வாரம் வட கடலில் தாக்குதலுக்குள்ளாகிய சீன மீன்பிடிப் படகில் இருந்து கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் ஆங்காங்கே கரையொதுங்கும் அதேவேளை திங்கள் மாலை வரை கரையொதுங்கிய 7 சீன நாட்டவர்களின் சடலங்கள் செவ்வாய்க்கிழமை மாலை கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டன.

ஏனையவர்களின் சடலங்களைத் தேடும் முயற்சியில் கடற்படை தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் குறைந்தபட்சம் 18 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. சம்பவம் இடம்பெற்ற மறுநாள் இது குறித்து தமது கவலையை கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் இலங்கை வெளிநாட்டு அமைச்சுக்குத் தெரியப்படுத்தியிருந்தது.

# அமெரிக்கத் தாக்குதலுக்கு முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம்!

ஈராக் மீது அமெரிக்கா நடத்தி வரும் தாக்குதலைக் கண்டித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அக் கட்சியின் தவிசாளர் பசீர் சேகுதாவூத் விடுத்துள்ள அந்த அறிக்கையில் சர்வதேச ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் விதத்திலும் உலகளாவிய ரீதியில் மனித தர்மத்திற்கு மாபெரும் ஆபத்தை இழைக்கும் வகையிலும் அமைந்துவிட்ட இந்தப் போர் நிச்சயம் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் லட்சோபலட்சம் மக்கள் ஈராக் மீது தாக்குதல் நடத்தப்படுவதற்கு எதிராகக் கிளர்ந்துள்ள நிலையில், அமெரிக்கா இத்தகைய கொடூரமான முடிவுக்கு வரக் காரணம் அந்த நாட்டில் இத்தகையதொரு யுத்தம் நடைபெறாமையேயாகும்.

அவ்வாறான யுத்தம் நிகழ்ந்து யுத்தத்தின் கொடுமைகளை அமெரிக்க அரசியல்வாதிகளும், இராணுவ அதிகாரிகளும், அமெரிக்க மக்களும் இதுவரை அறியவில்லை.

அதே நேரம் ஈராக் மீது தாக்குதல் நடத்தப்படுவதற்கெதிராக, அதன் கொடூரங்களை உணர்ந்து எதிர்ப்புத் தெரிவித்துவரும் அமெரிக்கர்களின் ஒரு பகுதி மக்களுக்கும் உலக மக்களுக்கும் நாம் நன்றி கூற வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# கிழக்கில் படை முகாம்கள் புனரமைப்பு

## மக்கள் மத்தியில் தலை தூக்கும் அச்ச உணர்வு!

கிழக்கு மாகாணத்தில் இராணுவ முகாம்களை அண்மித்த பகுதிகளிலும் வேறு இடங்களிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலைமை பொது மக்கள் மத்தியில் ஓரளவு அச்ச உணர்வைத் தோற்றுவித்துள்ளது.

முக்கிய படைமுகாம்களை அண்டிய பகுதிகளில் பொதுமக்களின் இரவு நேர நடமாட்டம் தடை செய்யப்பட்டு, சோதனை நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது. படையினரின் கண்காணிப்பு மற்றும் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நகரிலுள்ள வெபர் அரங்கிற்குள் மாலை 6 மணிக்கு பின்னர் செல்வதற்கும் படையினர் தடை விதித்துள்ளதுடன் உள்ளே செல்பவர்கள் நுழைவாயிலுள்ள சோதனைச் சாவடியில் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே பகல் நேரங்களில் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

வெபர் அரங்கை அண்மித்ததாகவே மட்டக்களப்பு மாவட்டப் படையணிகள் கட்டளைத் தலைமையகம் அமைந்துள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள விசேட அதிரடிப்படை முகாம்களும் மீண்டும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதேவேளை கடந்த வாரம் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்த அமைச்சர்கள் குழுவினரிடம் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் எந்தவொரு படைமுகாமும் உடனடியாக அகற்றப்படமாட்டாது என்றும் அவ்வாறு அகற்றப்பட்டால், அதற்கு மாற்று வழியிலான பாது காப்பு நடவடிக்கைகள் மேற கொள்ளப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அங்கு தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு விசேட அதிரடிப்படை முகாமை அங்கிருந்து எக் காரணம் கொண்டும் அகற்றக் கூடாது என்றும் முஸ்லிம் பிதிநிதிகளால் அங்கு வலியுறுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது.

# முரசம்

## போரில் அழியும் தேசம் ஊடகங்களின் அதர்மம்

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

கீழைத் தேசத்தவர்களுக்கு நாகரீகம் தெரியாதென்றும், பண்பு தெரியாதென்றும், நியாய-அநியாயங்கள் தெரியாதென்றும் நடுநிலைமை, பக்கச்சார்பின்மை, உண்மை, என்பவற்றைக் கடைப்பிடிக்கத் தெரியாதென்றும் தாமே பத்திரிகா தர்மத்தின் உத்தம புத்திரரென்றும் பறைசாற்றிவந்த மேலைத்தேச நவீன ஊடகங்களின் உட்கிடக்கைகளெல்லாம் சிதறுதேங்காயாக அம்பலப்பட்டுப் போயுள்ளது இப்போது நடந்தேறும் ஈராக் யுத்தத்தில்.

ஒரு தேசம் அழிகிறது. அதில் வாழும் அப்பாவி மக்கள் ஈவிரக்கமற்ற, வகை தொகையற்ற பாரிய குண்டுத் தாக்குதல்களால் தயவு தாட்சண்யமற்றுக் கொன்றொழிக்கப்படுகிறார்கள். ஆனால் இந்த உலகளாவிய தொலைக்காட்சிச் சேவைகளும் செய்தி நிறுவனங்களும் இவ் அழிவின் கொடுமையையும் அநீதியையும் பற்றி என்ன செய்தியைக் கூறுகின்றன? அவர்கள் காட்டுவதும் கூறுவதுமெல்லாம் வெறும் யுத்தப் பிரதாபங்களாகவே இருக்கின்றன.

அழிவில் சிக்கியுள்ள மக்களின் அவலங்களைப் பற்றி ஒரு அப்பட்டமான இருட்டடிப்பைச் செய்துகொண்டு, அமெரிக்க யுத்த விமானங்களின் குண்டுவீச்சுத் திறனையும் ஏவுகணைகளின் அதிசய சக்திகளையும் காட்டி, பார்வையாளர்களை மெய்மறக்கச் செய்வதையே தமது திறமை மிக்க சேவையென்பதாக நடந்துகொள்கின்றன.

யுத்தத்தை நியாயப்படுத்துவது ஒருபுறம் இருக்க, யுத்தத்துக்கு அடிபணிந்துவிடு என்ற உளவியல் பிரசாரத்தையே இவை முன்வைக்கின்றன. இந்தச் சர்வதேச ஊடகங்கள் யுத்த நாயகர்களுடன் எழுதப்படாத ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டு செயற்படுவதாகவே உணர முடிகிறது.

சதாம் ஹுசைன் இறந்துவிட்டார், அல்லது அவரின் கட்டுப்பாட்டில் ஈராக் பாதுகாப்பு இல்லை, அவரின் படைகள் சரணடைகின்றன, ஈராக்கிற்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்படப் போகின்றன, யுத்தம் விரைவில் முடிந்துவிடும், உலக நாடுகள்தோறும் நடத்தப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், நடந்தேறும் காரியங்களை ஒன்றும் செய்யப்போவதில்லை, எல்லாம் விரைவில் சரிசெய்யப்பட்டுவிடும் என்ற செய்திகளைத்தான் இவை மீண்டும் மீண்டும் காட்சிப்படுத்திக்கொண்டிருக்கின்றன.

இவற்றைக் கடந்து இங்கு நிகழ்ந்தேறும் மனித குலத்துக்கெதிரான பகிரங்கமான குற்றத்தைப் பற்றிய எந்தத் தார்ப்பரியங்களும் இங்கு கேள்விக்குட்படுத்தப்படவில்லை. கேள்விகளுக்குக் கட்டுப்படாத இந்த யுத்தம் செய்யும் அநீதியை விட, கேள்விகளையே வாயடைத்துவிடும் இந்த ஊடகங்களின் அதர்மமே மோசமானதெனத் தோன்றுகிறது.

ஒரு குழந்தையின் இரத்தம், ஒரு தாயின் கண்ணீர் என்பவற்றுக்கு முன்னால் இந்தக் கமெராக்கள் கண்களை மூடிக்கொண்டன. அவை பொழியப்படும் குண்டு மழையில் சந்தோசம் காண்கின்றன. மக்களுக்காகவே இயங்குவதாகப் பாசாங்கு செய்யும் இவ் ஊடகங்களின் உண்மை வேஷத்தை அம்பலப்படுத்துகின்ற கைங்கரியத்தையாவது இந்த யுத்தம் செய்துள்ளதென்ற ஒன்று மட்டுமே இங்கு விளைந்த நன்மை.

வாழ்க ஊடக தர்மம்!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்.*
*ஆசிரியர்.*

# ஆறாம் சுற்றில் அலசியதென்ன?

ஹக்கோனில் இம்முறை நடந்த பேச்சுவார்த்தையில், இது வரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை விடச் சில விடயங்களில் விசேட அம்சங்கள் காணப்படுகின்றன.

ஜப்பானின் சமாதானத் தூதுவர் அகாசி இதில் பங்குபற்றியது முக்கியமானவொரு அம்சமாகும்.

“ஜப்பானில் யூன் மாதம் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்னர் அரசியல் தீர்விற்கான அடிப்படை வரைபுகள் செய்யப்பட வேண்டும்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமை செயற்பாட்டாளர் இயன் மார்ட்டின் அவர்கள் “இலங்கை அரசும் புலிகளும் மனித உரிமை தொடர்பில் ஓர் உடன்பாட்டிற்கு வர வேண்டும்” என்று வலியுறுத்தியுள்ளார்.

“சமாதானச் செயற்பாட்டின் முன்னேற்றத்தைப் பொறுத்தே நிதி உதவிகள் கிட்டும்” என்று அகாசி மிகத் தெளிவாகத் தெரிவித்திருந்தார்.

இந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்னர், ரிச்சார்ட் ஆர்மிடேஜ் தலைமையில் அமெரிக்காவில் ஒரு கூட்டம் நடத்தப்பட இருப்பதாகக் கூறப்படுகிறது.

திருமலைக் கடலில் நடைபெற்ற புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அரச பிரதிநிதிகள், கடற்படை, புலிகளின் இராணுவ, அரசியல் பிரதிநிதிகள் மூன்று வாரத்தில் கலந்து பேசுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு இத்தகைய விவகாரங்களில் கூடுதல் அதிகாரம் அளிப்பது பற்றிப் புலிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

தவிர வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவதற்கும் புலிகள் அரசாங்கத்தின் கோரிக்கைக்கு உடன்பட்டனர். அதுவும் தமது கண்காணிப்பின் கீழ் தமக்கு ஆதரவான சக்திகளைத் தேர்தலில் நிறுத்துவது பற்றியே பாலசிங்கம் குறிப்பிட்டதாக பீ.பீ.சீ. தமிழ்ச் சேவையில் சொல்லப்பட்டது.

இதனையும் அரச தரப்பினர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் போல் தெரிகிறது.

அவசர மனிதாபிமானப் பணிகளுக்கான அபிவிருத்திக் குழுவின் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதில் உள்ளூராட்சிச் சபைகள் பெருந்துணை புரியும் என்றும் பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

ஆனால் சிரானின் வடக்கு-கிழக்கின் அபிவிருத்திப் பணிகளை அரச சம்பந்தமில்லாமல் தானே முற்றுமுழுதாக மேற்கொள்வதற்குப் பாலசிங்கத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கையைப் பீரிஸ் ஏற்றுக்கொள்ளவில்லை.

அது சுயாதீனமாகச் செயற்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் படையினரின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை அமைச்சர் மிலிந்த மொறகொடவினால் நிராகரிக்கப்பட்டது.

பாலசிங்கம், கருணா ஆகியோருடன் தனிப்பட்ட முறையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் கருத்துக்கள் சாதகமாகப் பரிமாறப்பட்டதாக ஹக்கீம் தெரிவித்திருந்தார். வன்னியில் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் எனவும் கூறப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் அரச தரப்பில் ஜனாதிபதி கையெழுத்திடாததால் அது தங்களைக் கட்டுப்படுத்தாது எனப் படையினர் கருதுகிறார்கள் என்று பாலசிங்கத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றிப் படைத் தரப்புடன் பேசுவதாகப் பீரிஸ் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஹக்கோன் பேச்சுவார்த்தையின் இறுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பல விவாதத்துக்குரிய விடயங்களைப் பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

அரசியல் தீர்விற்கு முன் பொருளாதார விடயங்கள், புனர்வாழ்வு விடயங்கள் முக்கியமானவை. வடக்கு-கிழக்கின் இடிபாடுகள் மறுசீரமைக்கப்படுவது முதன்மையானது என்று தெரிவித்தார். கடந்தகால இராணுவ நடவடிக்கைகளில் அரசுக்கு ஆயுதங்கள், பயிற்சிகளை வழங்கியது சர்வதேச சமூகமே. அதனாலேயே வடக்கு-கிழக்கில் பேரழிவு ஏற்பட்டன. எனவே தற்போது அந்த அழிவுகளைப் புனர் நிர்மாணிப்பதற்குச் சர்வதேச சமூகம் நிதியுதவியை வழங்க வேண்டும் என்று அவர் தெரிவித்திருந்தார்.

முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் மூன்றாவது தரப்பாகப் பங்குபற்றுவது பற்றித் தெரிவிக்கையில் “முஸ்லிம்களுடைய பிரச்சினைகள் பேசப்படும் போது மட்டும் அவர்கள் மூன்றாம் தரப்பாகப் பங்குபற்றலாமே அல்லாமல் மற்றும்படி அவர்கள் அவ்வாறு பங்குபற்ற முடியாது. 25 வருடம் புலிகள் இரத்தம் சிந்திப் போராடியது மூன்றாம் தரப்பை அனுமதிப்பதற்காக அல்ல. அதற்காக முஸ்லிம்களைப் புறக்கணிக்கவில்லை. அவர்களையும் எமது மக்களின் ஒரு பகுதியினராகவே கருதுகிறோம்” என மேலும் தெரிவித்தார்.

“மனித உரிமை என்னும் போது அது சுயநிர்ணய உரிமையைத்தான் குறிக்கிறது” என்றார்

“சிறுவர் சிறுமியரை ஏன் திரட்டுகிறீர்கள்” என்று கேள்வி எழுந்தபோது “அவர்கள் பசியின் காரணமாக எம்மிடம் வருகிறார்கள் அவர்களை போஷித்துப் பராமரிக்கிறோம்” என்றார்.

“400 சிறுவர் சிறுமியரை அவர்களின் பெற்றோரிடம் திருப்பி ஒப்படைத்திருக்கிறோம்” என்றார்.

ஆனால் “மனித உரிமை விடயங்கள் கருத்திற்கு எடுக்கப்படாவிட்டால் சர்வதேச உதவி கிட்டாது” என்பதை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் தெரிவித்திருந்தார்.

அடுத்த கட்டமாக அதிகாரப் பகிர்வு பற்றி அறிந்து வருவதற்குப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று பிற நாடுகளுக்குச் செல்லவிருக்கிறது.

யுத்தத்தில் இருந்து மீண்டு சமாதானப் பாதையில் செல்வதும் கடினமான நெடும் பயணமே. இங்கும் பல தடைகள், சந்தேகங்கள், புரிதலின்மைகள் இருக்கின்றன. அவை அகற்றப்பட வேண்டும்.

ஆனால் மக்களின் கனவுகள் கானல்நீராகி விடக்கூடாது.

வடக்கு-கிழக்கில் உள்ள மக்கள் சமாதானத்தின் பலாபலன்களை நுகர்வதற்கு ஆவலாய் இருக்கிறார்கள். தமது பிரதேசங்களில் சுயமரியாதை, கௌரவத்துடன் வாழ விரும்புகிறார்கள். புலம் பெயர்ந்த தமிழர்களிலும் கணிசமானோர் சொந்தப் பிரதேசங்களில் வந்து வாழ விரும்புகிறார்கள்.

ஆனால் அதற்கான அரசியல், பொருளாதார, ஜனநாயகம் இல்லாத நிலை காணப்படுகிறது. நம்பி எதனையும் ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

இறைவனின் படைப்பு என்று கூறப்படுபவற்றில் கூட பன்முகத் தன்மைதான் அழகானது என்பார்கள். விஞ்ஞான ரீதியானதும் அது தான். ஆனால் அந்தப் பன்முகத் தன்மை எமது பிரதேசங்களில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இது ஏற்றுக்கொள்ளப்படாத வரை வடக்கு கிழக்கில் வாழ்க்கை பிரகாசிக்காது.

மனித உரிமை, முஸ்லிம் மக்களின் தனித்துவம், வடக்கு-கிழக்கில் சுயாதீன தேர்தல்கள் நடத்துவதற்கான ஜனநாயக சூழல் என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டும்.


பாலசிங்கம் அவர்களின் பேச்சுக்களில் இவை எதிரொலிக்காதது துரதிர்ஷ்டமானது.


சமாதானத்தில் ஆர்வமாயிருந்த நாட்டின் தென்பகுதியில், பொருளாதாரச் சுமைகள் எல்லாவற்றையும் மறக்கடித்துவிடும் ஆபத்தைக் கொண்டுள்ளன. இது வரை மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புக்கள் பாரதூரமாகப் பாதிக்கப்படக் கூடிய நிலை தோன்றியுள்ளது.


இதே போல் ஈராக் யுத்தத்தையடுத்து அடியோடு மாறியுள்ள சர்வதேச சூழ்நிலை எமது பிரச்சினைகளில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதும் முக்கிய கவனத்துக்குரியதாகும்.

உலகத்தின் கவனம் எமது பிரச்சினைகளில் குறைந்துவிடலாம் என்ற அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமும் இப்போது சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஈராக்கின் புனரமைப்பில் நாட்டம் கொள்ளலாம் என்று அபிப்பிராயங்கள் நிலவினாலும், பழையபாணி காலாவதியான யுத்தவாதங்களைப் பழையபடி தூசிதட்டி எடுக்க முடியாது. ஏனெனில் சாடைமாடையாக எழும் வன்முறைகள் கூட இலங்கையைப் பொறுத்தவரை சர்வதேச சமூகத்தை முகம் கோணச் செய்கின்றன. ◻

> கடந்தகால இராணுவ நடவடிக்கைகளில் அரசுக்கு ஆயுதங்கள், பயிற்சிகளை வழங்கியது சர்வதேச சமூகமே. அதனாலேயே வடக்கு-கிழக்கில் பேரழிவு ஏற்பட்டன. எனவே தற்போது அந்த அழிவுகளைப் புனர் நிர்மாணிப்பதற்குச் சர்வதேச சமூகம் நிதியுதவியை வழங்க வேண்டும்
>
> -பாலசிங்கம்-







# மனித குலத்திற்கு எதிரான போர்

## தீயாக மாறிவிட்ட தேசம்

ஈராக்கிற்கு எதிரான கொடிய யுத்தம் தொடர்கிறது. ஈராக்கின் பழம்பெரும் நகரங்கள் எரிந்துகொண்டிருக்கின்றன. யூபிரட்டீஸ் நதிக்கரையில் செழித்தோங்கிய ஒரு நாகரீகம், ஒரு கலாசாரம், ஒரு மானிட வாழ்வு அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

2ம் உலக மகா யுத்தத்தின் பின் உலகின் ஏகோபித்த கோரிக்கையைச் செவிமடுக்காமல் உலக மகா சபையான ஐ.நா.வின் குரலைக் காதில் போட்டுக்கொள்ளாமல் அகங்காரத்துடன் ஈராக்கின் மீது யுத்தம் நடாத்தப்படுகிறது.

ஒரு விலங்கைத் தனிப்பட்ட மனித நுகர்விற்காக வேட்டையாடிப் பங்கு போடுவது போல் அல்லவா ஈராக்கின் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது. ஈரல் உனக்கு எலும்பு எனக்கு, இறைச்சி எமக்கு என்பது போல் மிக வக்கிரமாக ஈராக்கிய யுத்தம் நடைபெறுகிறது.

ஈராக்கிய மக்களின் மீது, நகரங்கள் மீது குண்டுவீசி அமெரிக்காவினாலும், பிரிட்டனாலும் எண்ணெய்க் கிணறுகள், துறைமுகங்கள், நகரங்கள் சுற்றி வளைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இந்த அயோக்கியத்தனத்திற்கு எதிராக உலகின் அத்தனை நகரங்களிலும் மக்கள் வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. முக்கியமாக, போரில் வரிந்து நிற்கும் அமெரிக்க, பிரித்தானிய நகரங்களில் லட்சோப லட்சம் மக்கள் ஒன்று திரண்டுள்ளனர். நவீன காட்டுமிராண்டித்தனங்களை உலகின் எந்தச் சமூகமும் ஏற்றுக்கொள்ளாது என்பதை இப்போது நடந்துகொண்டிருக்கும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஈராக்கிய மண்ணிலும் எல்லோரும் போல சிறுவர் சிறுமியர் வாழ்வதற்கான தமது விருப்பத்தை, தமது உருக்கமான தொலைநகல்கள், கடிதங்கள் மூலம் உலக மக்களுக்கு அனுப்பியிருந்தார்கள்.

ஈராக்கிய வைத்தியசாலைகளில் குழந்தைகளும், ஏதுமறியாப் பச்சிளம் பாலகர்களும் படுகாயங்களுடன் சுவரையும் கூரையையும் வெறித்தபடி வேதனை முனகலுடன் வீழ்ந்து கிடக்கிறார்கள். சிறுவர், சிறுமியரைக் கொலை செய்பவர்கள் உலகத் தலைவர்களாக முடியுமா? இவர்களின் வல்லமையின் அழகு இது தானா? என உலகம் கேட்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் சாந்த சொரூபியாக, மிகவும் சீரியசாக, உயிரியல் இரசாயன ஆயுதங்களை வைத்திருக்கும் ஈராக்கிய ஆட்சியாளர்களிடமிருந்து ஈராக்கிய மக்களை விடுவிப்பதற்காகவே போர் புரிவதாகத் தொலைக் காட்சியிலும், வானொலியிலும் உரையாற்றுகிறார்.


உலகின் மிகப் பெரிய நடுநிலை தவறா ஊடகங்களின் உளவியல் யுத்தத்தில், ஹிட்லரின் மந்திரி கோயபல்ஸ் கூடத் தோற்று நிற்கிறான்.

ஈராக்கைச் சூழ்ந்துள்ள மிகப் பெரிய ஆபத்தைக் களைவதற்காக அமெரிக்காவும் பிரிட்டனும் அர்ப்பணித்திருப்பதாக அவை பாசாங்கு பண்ணுகின்றன. 1000, 2000 என குரூஸ் ஏவுகணைகளும் ரொமகௌ ஏவுகணைகளும் ஈராக்கின் மீது நாளாந்தம் வீழ்ந்துகொண்டிருக்கின்றன.

ஈராக் தாக்கப்படுவதைப் பற்றி, பாக்தாத்தும் ஈராக்கிய நகரங்களும் பற்றி எரிவதைப் பற்றி ஆரவாரமாகச் செய்தி வெளியிடும் இந்த நிறுவனங்கள் ஈராக்கிய மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்களை அலட்சியப்படுத்த அல்லது இருட்டடிப்புச் செய்ய முனைகின்றன.

ஐ.நா. வின் செயலாளர் நாயகம் கொபி அனான் "ஈராக்கின் மீது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட நாள் உலகத்திற்கு ஒரு துக்கநாள்" எனத் தெரிவித்திருந்தார். பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் "இந்தப் போரை ஆரம்பித்தவர்களைக் கடவுள் தண்டிப்பார்" என்று தெரிவித்திருந்தார்.

சதாம் ஹுசைனை வேட்டையாடுவதற்கான தாக்குதல்களின் பின்னான மூன்று மணி நேரத்தில் ஈராக் தொலைக்காட்சியில் தோன்றி, "சின்ன புஷ் ஒரு கிரிமினல்" என்று சதாம் கூறியுள்ளார். ஈராக் மக்கள் இறுதி மூச்சு வரை போராட வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார்.



ஆனால் இந்த யுத்தம் ஆரம்பித்த உடனேயே அமெரிக்க ஹெலி ஒன்று வீழ்ந்து நொருங்கி 13 பிரித்தானிய, அமெரிக்கப் படையினர் பலியானார்கள். குவைத்தில் உள்ள அமெரிக்கப் படை முகாம் ஒன்றில் கிரனைட் வீசப்பட்டுப் பலர் படுகாயமடைந்தனர். ஹெலி ஒன்று வீழ்ந்து நொருங்கி 4 பேர் பலியானார்கள். பிரித்தானிய விமானம் ஒன்று அமெரிக்காவின் பற்றியோட் ஏவுகணையால் தாக்கப்பட்டு வீழ்ந்தது. சர்வதேச பத்திரிகையாளர் ஒருவர் அமெரிக்கத் துருப்புக்களால் தவறுதலாகச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சிலர் காணாமற் போயுள்ளனர். இத்தனை விபத்துக்கள் மாத்திரம் நடந்துள்ளன.

அமெரிக்க மக்களோ பிரித்தானிய மக்களோ தமது புதல்வர்களதும் புதல்வியரதும் பிணங்கள் தமது நாட்டுக்கு வருவதை விரும்பவில்லை.

1970களின் நடுப்பகுதியில் வியட்நாமிய யுத்தத்தில் அமெரிக்க இராணுவத்துக்குக் கசப்பான அநுபவம் ஏற்பட்டது. அங்கவீனர்கள், காயமடைந்தவர்கள், மரணித்தவர்களின் உடல்கள் வந்துகொண்டிருந்தபடியால் ஆத்திரமடைந்த அமெரிக்க மக்கள் வீதியில் இறங்கி அமெரிக்கப் படைகளைத் திருப்பி அழைக்குமாறு நிர்ப்பந்தித்தார்கள்.

முகம் கொடுக்க முடியாத எதிர்ப்பையும் கடுமையான கண்டனங்களையும் தொடர்ந்து வெளியிட்டுக்கொண்டிருக்கும் உலக சமூகம், அமெரிக்க, பிரித்தானியப் படைகளை விடவும் அவர்களின் பிரமாண்டமான நவீன ஏகபோக வெகுஜன ஊடகங்களை விடவும் அவர்களின் உளவியல் யுத்தத்தை விடவும் பலமிக்கது.

மிகப் பெரிய பாரம்பரியம் கொண்ட பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மனி போன்ற மேற்கத்தைய ஐரோப்பிய நாடுகளின் நிர்ணயகரமான யுத்த எதிர்ப்பு முக்கிய அம்சமாகும்.

18ம் நூற்றாண்டில் 16ம் லூயியையும் அவருடைய நிலப் பிரபுத்துவ கொடுங்கோன்மை ஆட்சியையும் தோற்கடித்த பாரம்பரியம் கொண்டவர்கள் பிரான்ஸிய மக்கள். பின்னர் 72 நாள் தொழிலாளர் ஆட்சி அதிகாரத்தை நடத்திய நாடு பிரான்ஸ். 1960 களின் பிற்பகுதியில் 70 களின் முற்பகுதியில் மாபெரும் மாணவர் எழுச்சிகளைக் கண்ட நாடு பிரான்ஸ். வியட்நாமிலும் அல்ஜீரியாவிலும் கசப்பான அநுபவங்களைப் பெற்ற நாடு. எனவே உலகின் மீது ஆதிக்கம் செலுத்த முனையும் போக்கிற்கு எதிராக நிர்ணயகரமான எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

சோவியத் யூனியனின் தலைமையிலான சோஷலிச நாடுகளின் சிதைவு உலக சமநிலையில் குழப்பத்தையும் விபரீதமான விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்ய அதிபர் விளாதிமீர் புட்டீன், ஈராக்கின் மீதான இந்த சர்வதேச விதிகளுக்கு முரணான தாக்குதலைக் கண்டித்ததோடு ஈராக்கின் இறைமையை மீறும் செயல் எனவும் வர்ணித்துள்ளார். ரஷ்யர்கள் ஏகாதிபத்திய செயற்பாட்டிற்கு எதிராக அணிதிரண்டு நிற்கிறார்கள்.

2ம் உலக மகா யுத்தத்தில் பாசிசத்தின் கொடூரங்களை அநுபவித்த ஜேர்மனிய மக்களும் அவ்வாறுதான்.

2ம் உலக மகா யுத்தத்தின் பின் உலக ஒழுங்கில் பாரிய மாற்றம், சோவியத் யூனியனின் கிழக்கு ஐரோப்பாவின் பிறழ்வுடன் 1990 களில் நடந்தது.

தற்போது உலக ஒழுங்கு இன்னொரு தடவை தீவிர மாற்றத்துக்கு உள்ளாகிறது. ஐரோப்பாவினுள் தீவிர கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது. சீனா, இந்தியா ஆகிய வலிமை மிக்க 3ம் உலக நாடுகள் ஈராக்கிற்கு எதிரான நடவடிக்கைகளை விசனத்துடன் நோக்குகின்றன. இந்தியாவில் பரவலாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.

சிதைந்து போன ஆப்கானில் கிடைத்த வெற்றி அமெரிக்காவிற்கும் பிரிட்டனுக்கும் ஈராக்கில் இலகுவாகக் கிட்டிவிடாது. ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்குள் யுத்தத்தை முடித்துவிட முடியாதென இப்போது புஷ் ஒப்புக் கொள்கிறார்.

தந்தையர் நாடுகளின் பாதுகாப்பு, வெற்றி என்ற போர்வையில் உலகைப் பங்கு போடுவதற்காக நடைபெற்ற முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களை முற்போக்காளர்கள் தீவிரமாக எதிர்த்தார்கள் மக்களை இந்தக் கோசங்களுக்குப் பின்னால் அணிதிரளாமல் தடுத்தார்கள்.

தற்போது வாஷிங்டன் போஸ்ட் போன்ற அமெரிக்கப் பத்திரிகைகள் சரி பிழைகளைப் பற்றிப் பேச முடியாது, எமது ஜனாதிபதி எடுத்த தீர்மானத்தின் வெற்றியே முக்கியம் என்று முழங்குகிறார்கள். முரண்பாடுகள் தேவையற்றவை, எல்லோரும் ஒன்றாக நிற்க வேண்டும் என்று மேலாதிக்க வெளிப்பாட்டைக் காட்டுகின்றன.

உலகளாவிய வெகுஜன ஊடகங்களின் நடுநிலை என்பது தனது முகத்திரையைக் கிழித்துக்கொண்டுள்ளது.

ஆனால் வீதியில் இறங்கியிருக்கும் கோடானுகோடி மக்களின் கடுஞ்சினத்தை மீறி எந்த வல்லாதிக்க சக்தியும் எதனையும் செய்து விட முடியாது. இது வரை காலமும் மனித குலத்தை நேர்வழியில் கொண்டு சென்ற வரலாறுகள் யாவும் உலக மக்களின் பெரும்பான்மையினரின் செயல்களின் ஊடாகவே எழுதப்பட்டன.

ஈராக்கில் ஏற்பட்டுள்ள இன்றைய நிலைக்குப் பணத்திலும், போதையிலும் மிதக்கும் மத்திய கிழக்கின் மன்னர்களது பொறுப்புணர்வற்ற போக்கும், பணம் இருந்தால் அறிவு தேவையில்லை என்ற அவர்களின் நிலைப்பாடும் இந்தப் பயங்கர விளைவுகளுக்கு ஏதொவொரு விதத்தில் பங்களித்திருக்கின்றன.

எண்ணெய் விலையை நிர்ணயிப்பதில் அவர்களுக்கு இருந்த பிடி காலாவதியாகிறது என்பதைப் புரியாமலே அவர்கள் பலியாகிக்கொண்டிருக்கிறார்கள். ஈராக்கின் தலைவிதி மாத்திரமல்ல, மத்திய கிழக்கின் தலைவிதியே நினைத்துப் பார்க்க முடியாத பயங்கரத்தில் சென்றுகொண்டிருக்கிறது.

பனாமாவின் ஜனாதிபதி நொறிக்காவைக் கைதுசெய்தவர்கள், சேர்பியாவின் ஸ்லாவிய இன ஜனாதிபதி மிலோசிவிக்கைக் கைதுசெய்தவர்கள், தற்போது ஈராக்கிய ஜனாதிபதியையும் அவரது புதல்வர்களையும் வேட்டையாடத் துணிந்துவிட்டார்கள்.

இந்த விதி இனிமேல் உலகின் எந்தப் பகுதிக்கும் பிரயோகிக்கப்படலாம்.

ஐ.நா.வை அர்த்தமிழக்கச் செய்யும் முயற்சியைத் தோற்கடிப்பதும், தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப சில நாடுகள் செயற்படும் போக்கிற்கு முடிவு கட்டுவதும் இன்றைய வரலாற்று அவசியமாக எழுந்துள்ளது.

-தாகூர்-

இந்தப் போக்கு அனுமதிக்கப்படுமானால் உலகளாவிய அளவில் மனித குலத்திற்காக உருவாக்கப்பட்ட உயர்ந்த கோட்பாடுகள், விழுமியங்கள், நடைமுறைகள் யாவும் செயல் இழந்து போகும்.

ஒரு சமூகம் அல்லது நாடு அல்லது தேசம் தனது தலைவிதியைத் தானே நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமை என்பதும் சேர்ந்துதான் அர்த்தம் இழந்து போகும்.

இதை விட உலகளாவிய அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பெண்கள் உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சிறுவர் உரிமைகள், உலக சுற்றாடல் பாதுகாப்பு, மொத்த உலக மக்களின் நலன்களுமே பேரபாயத்தில் தள்ளப்பட்டுவிடும்.

ஏதொவொரு வகையில் தனிப்பட்ட நாடுகளுக்கு அப்பால் ஐ.நா. என்ற உலக நிறுவனமே இவற்றுக்கான ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட்டு வந்தது.

ஐ.நா.வே தூக்கி வீசப்படும்போது அதனைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

நியாயமான உலக சமூகத்தின் பலத்தினால் நிலைமை சீரமைக்கப்பட வேண்டும்.

## அதிரடி அய்யாத்துரை



சங்கரியாரிட்ட இந்தியத் தூதுவர் லைபிரரிக்கு புத்தக அன்பளிப்புச் செய்த வைபவத்துக்கு மாவையாரும் வந்தவராம். யாழ்ப்பாணக் கூட்டணிக் கிளையைப் பகிஷ்கரிக்கிறவர் இங்க வந்தது ஏதும் சங்கரியாரில பாசத்திலயோவெண்டு யோசிச்சவை சிலபேர் 'இல்லையில்லை' அவற்ர மகன் தமிழ்நாட்டு யூனிவசிட்டியில படிக்கிற படியா இந்தியாவுக்குத் தன்னைக் கொஞ்சம் நல்ல பிள்ளையாக் காட்டத்தானெண்டு சொல்லினம் விஷயமறிஞ்சவை. ஆனால் வந்த வரை யாரும் வரவேற்கேல்லை. ஆளுக்கு முன்னாலயே மேயர் கந்தையன் நடந்த கதைய விலாவாரியாப் பேச... எழுந்து ஓடினவர் எங்கபோனார் எப்பிடிப் போனாரெண்டே தெரியாதாம்.

லைபிரரி எண்டவுடன சங்கரியாற்றை வீரம்தான் ஞாபகம் வருது. முதுகெலும்பு இருக்கிறதைக் காட்டிப் பேசியிருக்கு மனுசன்! "தனித்துவத்தை விட்டுக் குடுக்கேலாது, ஏகப்பிரதிநிதித்துவத்தை ஏற்கேலாது" எண்டெல்லாம் ஆரவது சுயமரியாதையோட பேசுறதைக் கேட்டால், எங்கட சனம் உடனை, "பாவம்! உந்தாளை அவங்கள் விட்டு வைக்கப் போறாங்களே?" என்டொரு பெருமுச்சு விட்டிட்டு, "எங்கட விடுதலைக்கு ஜனாதிபதியும், ஜே.வி.பி.யும், அமெரிக்காவும், இந்தியாவும்... இன்னுமின்னும் வெளிச் சக்தியெல்லாம் எப்பிடித் தடையாய் நிக்கினம் எண்டதைப் பேசவும் வா" எண்டு முற்போக்காய் நடந்து (?) முழுச் சீவியத்துக்கான வழியைப் பாக்கும். வாழ்க தமிழ் ஜனநாயகம்!

அரசியல் தீர்வைப் பேசி இணக்கத்துக்கு வந்தால்தான் நிதி தரலாம் எண்டு ஜப்பான் சொல்ல, ஆலோசகருக்கு வந்தது கொதி! பொருளாதார அபிவிருத்தி நடந்தால்தான் பேச்சு தொடருறதை யோசிக்கலாம் எண்டும் அழிவுகளுக்குக் காரணமே இந்த வெளிநாட்டு ஆக்கள் தானே... இவை இலங்கை அரசாங்கத்துக்குச் செய்த நிதி உதவியாலதான் அழிவுகள் நடந்தது. ஆனபடியால் இப்ப திருத்திறதுக்கும் அவை உதவத்தான் வேணும்" எண்டு போட்டிருக்கிறார் போடு!

பாருங்கோ இனி எங்கட பத்திரிகைக்காரர் ஜப்பானுக்கும் டோஸ் குடுக்கப் போகினம். இந்தியாவெண்டாலென்ன ஜப்பானெண்டால் என்ன, அமெரிக்காவெண்டாலென்ன எங்கடை வழிக்கு வராட்டில்... தமிழின எதிரிகள்தான்! தமிழ் மக்களுக்கு ஏதாவது விளங்குதோ?

யாழ் நூலகத்தைத் திறவாதே திறவாதே எண்டவையள் நூலகத்தைக் கட்டி முடிச்சுத் திறக்க இருந்தவையத் துரத்தியடிச்சு விட்டு இப்ப தங்களுக்குத் தோதான ஆக்களைக் கொண்டு திறக்கத் தெண்டிக்கினமாம். யாழ். பல்கலைக் கழகத்தில தமிழ்த் துறைப் பேராசிரியராயிருந்த பேராசிரியர், மோகனதாஸைக் கொண்டு திறப்பிக்கச் சொல்லி நூலக ஆலோசனைக் குழுவில குசுகுசுத்திச்சினமாம். வெளுக்குது வேஷமின்டானாம்! எங்க போச்சது உவையின்ர 'அழிவுச் சின்னக் கதையம்' திருத்த வேலை முடியேல்லையெண்ட பம்மாத்தும்! கதை இப்பிடிப் போறது தெரியாத மற்றவொரு பெரும் பேராசிரியர் லைபிரரிய அழிவுச் சின்னமாப் பேணவேணு மெண்டு பகன்று வரலாற்றுப் புத்தகத்தில உதாரண புருஷராகி நிக்கிறார். ம்... அறிவைப் பேண வேண்டியவையெல்லாம் அழிவைப் பேண வேணுமெண்டக்க... அறிவுத் தாகம் கொண்ட யாழ்ப்பாணச் சமூகம் உவையிட்டப் படிச்சால் அம்போதான்!

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்*




**Naveen Ceramic** No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

**எமது புதிய காட்சியறை**
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

## கொழும்பு–சென்னை சிங்கப்பூரில் தங்குமிட வசதி

கொழும்பு-சென்னை-சிங்கப்பூரில் விடுமுறையைக் கழிக்க, திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு, தளபாட சாமான்களோடு, சகல வசதிகளுடனான தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடுகளும், அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து இலவச வாகன வசதி. சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.

**மேலதிக விபரங்களுக்கு:**

**LINGAM WEDDING SERVICE**

10, Anson Road, # 15-14 International Plaza, Singapore-079903

எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி

**அப்பு: 0065-975 14 941**

## நீங்கள்கண்ணாடி அணிபவரானால்

எந்தரக லென்ஸ் தேவையென உணர வேண்டும்!

**55 YEARS SOLID OPTICALS SERVICES**



சாதாரணமாகப் பாவனையிலுள்ள பைபோகஸ் லென்ஸ்

**SOLA FLAT TOP**
21 ம் நூற்றாண்டுக்கு மிகச் சௌகரியமான லென்ஸ்

***நன்மைகள்***

* இடது வலது கண்களுக்கென விசேட Plastic லென்ஸ் கொண்டது
* பாரமற்றது *உடையாதது * மிகத் தெளிவானது.

ரூ 1000/-ல் இருந்து

# RAY-BAN OPTICIANS

**81, OLCOT MAWATHA, COLOMBO-11.**
**T.P:- 327003, 449762**

மருத்துவ சிபாரிசுக்கமையவோ, நமது கணனி மூலமோ பார்வையைப் பரிசீலித்து அதே தினத்தில் கண்ணாடியைப் பெறுங்கள்.

# வண்ணை ஆனந்தனுக்கு கண்ணீர் அஞ்சலி

## மறைந்தது மலையொன்று! தேவை இன்று மாலையொன்று!!

விண் முட்டும் தமிழை தன் முட்டே வைத்திருந்த. வண்ணை தந்த
ஆனந்தம். வண்ணை ஆனந்தன்.
வானுலகம் சென்று விட்டார். முறை தவறிய ஆட்சியாளரின்.
நெறி தவறிய ஆட்சியின் போது.
எம்மது. கட்டவிழ்த்துவிடப்பட்ட. காட்டுமிராண்டிச் செயல்களை எதிர்த்து.
அகிம்சை முறையில் போராடி
சிங்கள அரசுக்கே ஒரு காலத்தில் சிம்ம சொப்பனமாய்த் திகழ்ந்து.
சிறை சென்ற சிம்மக்குரலோனே!
மேடைப்பேச்சினாலே எம் மேனியெல்லாம் சிலிர்க்க வைத்து.
தமிழர் நம் உணர்வுகளைத் தட்டி எழுப்பித்
தடைதாண்ட வைத்த. தானைத் தளபதிகளில் ஒருவனே.

நான்கு முழ வேட்டி கட்டி. நாட்டுக்குள் நடமாடும் சிங்கமென
வீறு நடை பயின்றவனே. நீ வீழ்ந்ததும் ஏனோ? அசலான உன்னோடு.
கன்று சுகைவந்து திரிந்த நாடொன்று. பதவி ஆசையிலே இன்று
பரிதவிக்கும் காட்சியினைப் பார்க்கின்றபோது.
பதவிகள் உனைத் தேடி. பாத யாத்திரை வந்தபோதும். நெட்டித்
தள்ளிவிட்டு. நெடுந்தூரம் வந்த உன்னை.
நெஞ்சார வணங்குகிறோம். நிலை தடுமாறி நிற்கின்றோம்.

தாயகத்தைப் பார்க்கவென்ற. தணியாத தாகத்தினால்.
பல நாள் இடைவெளியில்.
பார்த்து வந்த தாயகத்தின் நிலை கண்டு வேதனை மிகுதியால் வெம்பி அழுது.
தாளமுடியாமல் தளர்ந்துபோய். நோய்வாய்ப்பட்டு. நீ நொடிந்து போனது.
எத்தனை பேருக்குத் தெரியும்? காலமாற்றத்தின் கண்ணியமற்ற
செயல்களால். உன் செயற்பாடுகளை. எம் தேசத்தில் செயற்படுத்த முடியாமல்
எம் தேசத்தை விட்டே நீ புலம்பெயர்ந்தது.
உனக்குப் பெரிய இழப்பாய் இருக்கிறது என்பாய். இழப்பு உனக்கல்ல.
உன் செயற்பாடுகளை வாங்கிக் கொள்ள முடியாமல்.
தடுமாறி நின்றதே எம் தேசம்!
அதற்குத்தான் பெரும் இழப்பு! இன்றைய அவசர கோலத்தில். நீ
அடையாளம் காணப்படா விட்டாலும் கூட. காலம் ஒருநாள்.
உன்னைக் கண்ணியம் செய்யும். அந்த நாளும் வரும். புண்ணியம் செய்து.

அன்னாரின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தாருக்கும் கட்சிக்கும் எமது ஆழ்ந்த அநுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழர் ஒன்றியம், சுவிஸ் – சூரிச்

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

**142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.**
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக

**Tel: 074-519754**

## லண்டன், பாரிஸ் இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

**டாக்டர் ஆர். தியாகராஜன் DHMS, AMRSH (LON)**


**24.03.2003** முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார்.

மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes), எக்ஸிமா (Eczema) மலட்டுத்தன்மை, பேறின்மை (Strillity), ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும்.

ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டு மனம் மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையை பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்கவல்லது.

முன்கூட்டிய பதிவுக்கு லண்டன்
தொலைபேசி: **07984803488 - 07833341693**
**Email: homoeocare@rediffmail.com**
தொடர்பு: **0091/9843051099** (இந்தியா), **0094-777602513**

மார்ச் மாதம் இலங்கை விஜயம் 18/03/2003 முதல் 21/03/2003வரை



## இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி

மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.





**உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள**

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையாவது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அற்புத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

**★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.**

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

**★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்.**

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி**

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்**

மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

**★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை**

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

**★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.**

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஸ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

**★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளிநாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.**

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிள்.

**★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.**

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

**★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.**

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரிகத்தின் சக்தியால் என் காதலிஎன்னை வந்து அடைந்து விட்டாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

**★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்**

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது. வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.**

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின் அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

*உலக மாந்திரீக சக்கரவர்த்தி.*

**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 342464, 344832, 342463, 470615, 431137. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 8.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலிய கிளை.

33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, Fax: 009452-22508
w.w.w. imexpo lanka . com. drpk samy.

## வசந்தத்தைச் சிறை மீட்போம்!

*மழை, இனி இம் மண்ணில் பெய்ய மறுக்கும்.*
*மா கடல்கூட இக் கரையினில் வந்து*
*மோதிடக் கூசும்.*
*ஓ! ஈழதேசத்து இனிய வாடைக்காற்றே...*
*நாறிடும் பிண வாடையைச் சுமக்கும்*
*உன் விதிகண்டு நாணிடு! நாணிடு!*
*ஒரு பூக்கூட இப் பூமியில் இனிப் பூக்குமோ...?*
*சீ...! மனித நாகரிகத்தின்*
*மரணச் சடங்குகளிங்கு அரங்கேறட்டும்!*

*ஓ பகைவர்களே!*
*உங்கள் பாசிச வெறிக்குப்*
*பச்சிளம் குழந்தையும், பள்ளிச் சிறுவனும்,*
*பொல்லுப்பிடித்து நடக்கும் கொள்ளுப் பாட்டியும்,*
*ஒரு கர்ப்பிணிப் பெண்ணும்....*

*ஆகா இது அற்புதம்! அற்புதம்!!*
*உலகம் எள்ளி நகைக்க, எள்ளி நகைக்க,*
*காறி முகத்தில் உமிழ்ந்திட, உமிழ்ந்திட,*
*நீ நடத்து உன்*
*கொலைவெறிச் சடங்கை.*

*கண்ணை மூடிச் சுட்டுத் தள்ளு.*
*செத்துவிழும் பிணங்களைக் கொணர்ந்து*
*தெருக்களெங்கும் தோரணமாய்ப் போடு.*
*மண்ணை நனைத்த இரத்தத்தின் ஈரம்*
*உன் இதயத்திற்கூட இருத்தல் கூடாது.*

*பள்ளிகள் கடைகள் கோவில்கள் தொட்டு*
*உன் ஓமத் தீயைப்போய்க் கொளுத்து, கொளுத்து.*
*ஓங்கிய சுவாலைகள் விண்ணை முட்டி*
*எட்டிப் பார்த்துத் திகைத்து நிற்கும்*
*மேகங்களைக்கூட ஓட விரட்டட்டும்.*

*ஓ காற்றே!*
*கடலலையே!*
*இளந்தூறல் மழையே!*
*ஒரு பூவே...*

*அச்சம் இல்லை, அச்சம் இல்லை.*
*மரணத்தை இனி நாம் மதிப்பதே இல்லை.*
*நாளை நிச்சயம், நாளை நிச்சயம்,*
*எம் வசந்தத்தைச் சிறையிட்ட*
*சிறைக் கதவுகள் சிதறும், சிதறும்!*

*எமது மண்ணின் புழுதியில் எங்கள்*
*ஈழக் குழந்தைகள் உருண்டு புரளும்.*

*நானும் அன்று உயிருடன் இருந்தால்...*
*ஒருபிடி மண்ணை இறுகப் பற்றி,*
*எதிரியின் சமாதிமேல் கால்களை ஊன்றி,*
*எனது கையை உயரே உயர்த்தி,*
*தொண்டை கிழிய, தொண்டை கிழிய,*
*எட்டுத் திக்கும் எதிரொலி கேட்க,*
*உலகை நோக்கி உரத்தே கத்துவேன்...*

*"இறுதியில் வென்றது எமது மக்களே!"*

*நாளை வசந்தம் இம் மண்ணுக்கு வரும்.*
*மழைத்துளி வீழ்ந்து மண்ணை முத்தும்.*
*பூக்கள் மலரும் காற்று வீசும்.*
*கடலலை கரையில் மோதிச் சிரிக்கும்.*
*புதிய சூரியன் உதயமாகி*
*இருளைக் கிழித்தே ஒளியைத் தருவான்!*

# அற்புதனின் டயரி



## உதிரம் படிந்த பாதங்கள்...



**1978**ல் இலங்கை அரசியலில் மிகப் பெரும் மாற்றமொன்று நிகழ்ந்தது. 1977 தேர்தலில் ஆளும் கட்சியாக இருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி படு தோல்வியடைந்து ஜே.ஆர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி மூன்றில் இரண்டு பாராளுமன்றப் பெரும்பான்மை ஆசனங்களுடன் ஆட்சியைக் கைப்பற்றியதையடுத்து இவ் வாய்ப்பைப் பயன்படுத்தி ஜே.ஆர். தன்னை அசைக்க முடியாத தலைவராக நிலை நிறுத்திக்கொள்ளும் திட்டங்களில் உடனடியாக இறங்கினார். 1978ல் மற்றுமொரு புதிய அரசியல் யாப்பைக் கொண்டுவந்தார். அதில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தி, பாராளுமன்றத்தின் அதிகாரங்களை நலிவடையச் செய்து ஜனாதிபதியின் கரங்களில் அனைத்து அதிகாரங்களையும் குவித்துக் கொண்டதுடன் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி, தானே நிறைவேற்று ஜனாதிபதியாகவும் ஆகிக் கொண்டார்.

கூட்டணியின் தலைமையில் நம்பிக் கையிழந்த நிலையில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் முளைவிட்டிருந்த ஆயுதப் போராட்டச் செயற்பாடுகளை ஒடுக்குமுகமாக ஜே.ஆர். பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற கொடூரமான அடக்குமுறைச் சட்டத்தைக் கொண்டு வந்தார். இச் சட்டத்தின் கீழேயே இன்றும் தமிழ்ச் சிறைக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது எதிர்க் கட்சியாயிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மற்றுமொரு காட்டிக் கொடுப்பைச் செய்தனர். ஜே.ஆருக்கு நல்ல விதமாக நடந்துகொள்வதற்காக, இச் சட்டம் தெற்கில் நிலவும் அவசர நிலைமைகளைச் சமாளிக்க ஒரு சில மாதங்களே நீடிக்கும் என்று சமாதானம் கூறிக்கொண்டு அதனைப் பாராளுமன்றத்தில் எதிர்க்காது ஒதுங்கிக்கொண்டனர்.

ஆனால் இச் சட்டம் அமுலுக்கு வந்தவுடன் முதலில் பலிகொண்டது தமிழ் இளைஞர்களைத்தான். அவர்கள் வேறு யாருமல்ல. டேவிட்சனின் ஊரைச் சேர்ந்த, டேவிட்சனுக்கு ஒரு வகையில் உந்துசக்தியாக விளங்கிய இன்பம், செல்வம், பாலா ஆகிய நவாலியைச் சேர்ந்த இளைஞர்களும் அவர்களுடன் சேர்ந்தியங்கிய கோப்பாயைச் சேர்ந்த பரமேஸ்வரன் என்பவனும் 1979ம் ஆண்டு பொலிஸாரால் இரவோடிரவாகக் கைது செய்யப்பட்டுப் படுகொலைசெய்யப்பட்டார்கள். (அற்புதனின் டயறி - 4ல் இவர்கள் 1981ல் படுகொலை செய்யப்பட்டதாக தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுவிட்டது - திருத்தம் செய்துகொள்ளவும்) இன்பம் செல்வம் ஆகியோரின் உடல்கள் பண்ணைப் பாலத்துக்கு அப்பால் மண்டைதீவுச் சந்தியில் வீசப்பட்டிருந்தன. இது அன்று முழு யாழ்ப்பாணத்தையுமே உலுக்கிவிட்ட நிகழ்வு. அது டேவிட்சனின் உணர்வுகளையும் உசுப்பியது. இதேவேளை இரகசியமாக செயற்பட்டு வந்த ஒரு ஸ்தாபனத்தின் தொடர்பு அவன் எதிர்பார்த்திராத ஒருவன் மூலம் அவனுக்குக் கிடைத்தது. அந்தத் தொடர்பு அவனுக்கிருந்த சிந்தனைப் போக்கில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

✪✪✪

டேவிட்சன் அன்றைய காலத்தில் மாணவர்கள் அனைவராலும் கவரப்பட்ட மிகச் சிறந்த மாணவர் தலைவன். மிகச் சிறந்த மேடைப் பேச்சாளன். அவனுக்கு மாணவர்களுடன் இசைந்து பழகித் தலைமை கொடுக்கக்கூடிய தலைமைத்துவப் பண்பு இயல்பாகவே இருந்தது. இவையே மற்றொரு புறத்தில் அவன் குறித்து சில முன்னெச்சரிக்கையான முடிவுகள் எடுக்க வேண்டிய அவசியத்தை அவன் சார்ந்த விடுதலை இயக்கத்துக்கு உணர வைத்தது.

பகிரங்க அமைப்பில் செயற்படுபவர்கள் அரச உளவுப் பிரிவினரின் தொடர்ச்சியான அவதானிப்பில் இருப்பர். அவர்களைப் பொதுமக்களும் ஆதரவாளர்களும் சூழ்ந்திருப்பர். அத்தோடு சமூகத்தில் உள்ள முக்கிய பிரமுகர்களுடனும் இவர்கள் தொடர்புகள் வைத்திருக்க வேண்டியிருக்கும். அதனால் தலைமறைவாகச் செயற்படுவதென்பது இவர்களைப் பொறுத்தவரை அசாத்தியமானது. அப்படி இவர்களைத் தலைமறைவாக்குவது மறுபுறம் இவர்களால் பகிரங்க அரங்கில் ஆற்றக்கூடிய செயற்பாடுகளை முடக்கிவிடுவதாவும் ஆகிவிடும். அதனால் இவர்களைக் கட்சியின் இரகசிய வேலைத் திட்டங்களுடன் நேரடியாகச் சம்பந்தப்படுத்துவது ஒருபுறம் வெகுஜன அமைப்பையும் பாதிப்புக்குள்ளாக்குவதுடன் மறுபுறம் இரகசிய அமைப்பையும் ஆபத்தில் சிக்க வைத்துவிடும் என்ற எச்சரிக்கை அவர்களிடம் இருந்தது. அதனால் தற்போதைக்கு டேவிட்சனை இரகசிய வேலைத் திட்டங்களில் தொடர்புபடுத்தாமல் பகிரங்க அரங்கில் செயற்படச் செய்வதே பொருத்தமானதென அவன் சார்ந்திருந்த விடுதலை இயக்கம் முடிவு செய்தது. அதனால் ஈழ மாணவர் பொது மன்றத்தைப் பகிரங்க அரங்கில் தலைமை கொடுக்கும் பொறுப்பை அவனிடம் விட்டிருந்தது. இதேவேளை சுகு இரகசிய ஸ்தாபனத்தின் சார்பில் ஈழ மாணவர் பொது மன்றத்தினை பின்னணியில் நின்று வழிநடத்தி வந்தான். ஈழ மாணவர் பொதுமன்றமென்பது தமிழ் பேசும் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், அதில் மாணவர்களுக்கு இழைக்கப் பட்ட அநீதிகளுக்கு எதிராகவும், மாணவர்கள் மத்தியில் செயற்பட்டு வந்த வெகுஜன அமைப்பு. அதன் பின்னணியில் ஒரு இரகசிய ஸ்தாபனம் உள்ளதென்பது அப்போது வெளியே தெரியாது.

அந்த எச்சரிக்கை உணர்வு, பின்னாளில் டேவிட்சன் கைது செய்யப்பட்டபோது பாதிப்புக்கள் ஏற்படாதிருக்கப் பெரிதும் பயனளித்தது.

ஆனால் அற்புதனைப் பொறுத்தவரையில், அவனை நேரடியாக இரகசிய ஸ்தாபனத்திற்கு உள்வாங்குவதென அவ் இரகசிய அமைப்பால் முடிவு செய்யப்பட்டது. அற்புதனின் உணர்வும் தீவிரமும் அர்ப்பணமும் அவனை அதற்குத் தகுதிவாய்ந்தவனாக அடையாளம் காண வைத்தது. அவன் தலைமறைவு வாழ்க்கைக்குச் செல்ல நேர்ந்துவிட்டதால் அவனிடம் பேச்சாற்றல், நடிப்பாற்றல் போன்ற பல திறமைகள் உள்ளூறைந்திருந்தபோதும் அவற்றைப் பொது அரங்கில் வெளிப்படுத்த அதிக சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஏனெனில் அவன் தன்னை ஸ்தாபனத்தின் இரகசிய வேலைத்திட்டங்களில் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டான்.

ஈழ மாணவர் பொதுமன்றத்தை நேரடியாக அடையாளம் காட்டிக் கொள்ளாதவாறு ஒரு சில பொதுவான மாணவர் போராட்டங்களை முன்னெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்புத்தான் மாணவர் ஒன்றியம். அப்போது ஏற்பட்ட கல்வி வெள்ளையறிக்கையென்பது இலங்கையின் சகல மாணவர்களுக்கான பொதுப் பிரச்சினையாக இருந்ததால் அப் போராட்டத்தை முன்னெடுப்பதென முடிவு செய்து, ஒவ்வொரு பாடசாலையின் உயர்தர மாணவர் சங்கத்தின் இவ்விரு பிரதிநிதிகளை அங்கத்தவராகக் கொண்டு இம் மாணவர் ஒன்றியம் அமைக்கப்பட்டது.

அதன் இரண்டாவது கூட்டம்தான் (சென்ற இதழுக்கு முந்திய இதழில்) முன்னர் குறிப்பிடப்பட்ட யாழ். பெருமாள் கோவிலருகே வாகீசன் என்ற இளைஞனின் வீட்டில் நடந்த கூட்டம். அதில்,

யாழ். திறந்தவெளி அரங்கிலேயே மாணவர் ஒன்றியத்தின் பொதுக்கூட்டத்தை நடத்துவதென டேவிட்சன் தலைமையில் முடிவு செய்யப்பட்டது. டேவிட்சனும் அற்புதனும் மாணவர்களுக்கு உற்சாகம் கலந்த வார்த்தைகளால் நம்பிக்கையூட்டினர்.

பொதுக்கூட்டமொன்றை நிகழ்த்துவதென்பது அந்தக் காலத்தில் சுலபமானதல்ல. அதுவும் மாணவர் ஒன்றியம் போன்ற மாணவர் அமைப்புக்கு அதற்கான நிதி, மற்றும் இதர ஏற்பாடுகளைச் செய்வது மிகவும் சிக்கலான காரியம். மாணவர் அமைப்பிடம் இருந்த ஒரேயொரு பலம் அவர்களது உற்சாகமும் அர்ப்பணமும்தான். ஆனால் ஒரு துண்டுப்பிரசுரம் அடிப்பதற்கோ, சுவரொட்டிகள் ஒட்டுவதற்கோ, போக்குவரத்துகளுக்கோ, அல்லது மேடையமைத்து, ஒலிபெருக்கிகள் பிடித்து, மின் விளக்குகள் பொருத்தி கூட்டத்தை நடத்துவதற்கே சாதாரண பாடசாலை மாணவர்களின் நிலையில் பெருந் தொகை நிதி தேவை. வெறும் உற்சாகமும் அர்ப்பணமும் நிதியாக மாட்டாது. அத்துடன் இத்தகைய கூட்டத்தில் அசம்பாவிதங்கள் ஏதும் நிகழ்ந்துவிடும் என்ற அச்சத்தில் ஒலிபெருக்கிகள், மின்சார விளக்குகள் வழங்க எவரும் முன்வர மாட்டாத நிலை.

ஆனால் அந்தப் பிரமாண்டமான வேலைத்திட்டத்தைச் செய்து முடிப்பதென அவர்கள் முடிவெடுத்துவிட்டனர். அதற்கான பணிகள் துரிதகதியில் திட்டமிடப்பட்டன. மாணவர்களை

தருவது
கொம்ரேட்


தொகுதிவாரியாகக் குழுக்களாகப் பிரித்து சகல பாடசாலைகளுக்கும் டியூட்டரிகளுக்கும் அனுப்பிப் பொதுக் கூட்டத்துக்கான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. நிதி சேகரிப்பு வேலைகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர். இதேவேளை பொது நலனில் அக்கறை கொண்ட பிரமுகர்களையும், வர்த்தகர்களையும் அற்புதனும் டேவிட்சனும் அணுகி அவர்களின் ஒத்துழைப்புக்களையும் நிதியுதவிகளையும் திரட்டினர். மாணவர்கள் போராட்டத்துக்கு ஆதரவாக, பல்வேறு தொழிற் சங்கங்கள், பொது அமைப்புகள் என்பவற்றையும் அணிசேர்த்தார்கள். அற்புதனின் நண்பர்களாயிருந்து அவனுடன் இரகசிய ஸ்தாபனத்தில் இணைந்து கொண்ட டென்சில், றோகன், ஆகியோர் இப் பொதுக்கூட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் முன்னின்று உழைத்தனர்.

*பாதங்கள் இன்னும் படியும்...*



கவலை துறந்திங்கு வாழ்வது வீடென்று
காட்டும் மறைகளெல்லாம்- நீவிர்
அவலை நினைந்துமி மெல்லுதல் போலிங்கு
அவங்கள் புரிவீரோ?

சுப்பிரமணிய பாரதியார்-



பாப்பா முரசு சிறுகதை

# மூன்று பானைகள்!



**பூ**தலூரில் பணக்காரக் கிழவன் ஒருவன் வசித்து வந்தான். அவனுக்கு ஏராளமான சொத்து இருந்தது. சரியான கஞ்சன். கருமித்தனம் பண்ணியே இவ்வளவு சொத்துக்களையும் சேர்த்து வைத்தான். கிழவனுக்கு வயதானது. தன்னுடைய சொத்துக்களில் பாதியைத் தங்கமாக மாற்றி மூன்று பானைகளுக்குள் போட்டுப் பூமிக்கு அடியில் புதைத்து வைத்தான்.

கிழவனுக்கு மூன்று மகன்கள் இருந்தனர். அவன் இறக்கும் தறுவாயில் மூன்று மகன்களையும் கூப்பிட்டு ஆளுக்கு ஒரு பானை எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு இறந்தான்.

மூன்று பேருக்கும் இந்த விஷயம் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆனாலும் யாருக்கு எந்தப் பானை என்று எதுவுமே சொல்லாமல் அப்பா செத்துப் போய்விட்டாரே என்று கவலைப்பட்டனர்.

"நிச்சயமாக பானை சிறியதும், பெரியதுமாக இருக்கும். எனவே பெரிய பானை எனக்குத்தான். நான்தான் வீட்டுக்கு முத்த மகன்." என்றான் பெரியவன்.

"அதெல்லாம் கிடையாது. வியாபாரத்தின் முக்கிய பொறுப்பை நான் தானே கவனித்து வந்தேன். அதனால் எனக்குத்தான் பெரிய பானை. அண்ணனாக இருந்தாலும் உனக்குச் சாமர்த்தியம் போதாது என்று அப்பா சொல்வார். அதனால் என்னை நம்பித் தானே வியாபாரத்தை ஒப்படைத்தார். எனவே, எனக்குத்தான் சொந்தம்," என்றான் நடுவிலான்.

"நான் கடைக்குட்டி. நான் பிறந்தவுடன்தான் அப்பாவுக்கு வியாபாரத்தில் அதிர்ஷ்டம் அடித்தது என்று சொல்லி அப்பா என்னைத்தானே மிகவும் செல்லமாக வைத்திருந்தார். என்னைக் கொண்டுதானே எந்தக் காரியத்தையும் துவங்கினார். எனவே எனக்குத்தான் பெரிய பானை," என்றான் கடைக்குட்டி.

இப்படியே வாய்ச் சண்டை முற்றி, கைச் சண்டை ஆகி அடிதடியில் மூவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது. ஒருவழியாகச் சண்டை ஒய்ந்தது.

பிறகு மூவரும் அப்பா சொன்ன இடத்திற்குச் சென்று பூமியைத் தோண்டிப் புதைக்கப்பட்ட மூன்று பானைகளையும் எடுத்தனர். மூன்று பானைகளுமே ஒரே அளவாக இருந்தது. உள்ளே இருந்த தங்கமும் சமபங்காக இருந்தது. அதைக் கண்ட மூன்று சகோதரர்களும் தாங்கள் போட்ட வீண் சண்டையை நினைத்து வெட்கமடைந்தனர்.

குட்டிப் பாப்பாக்களே!... நீங்கள் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் பேசியே தீர்த்திடலாமே. அநாவசியமாகச் சண்டை போட்டு உங்க பேரை எதற்காக கெடுத்துக்கணும்? நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே...

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **05.04.2003.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **490**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 487

பரிசுக்குரியவர்:
**வைதேகி தேவராசா,**
37, 3ம் ஒழுங்கை, கண்ணகிபுரம், உவர்மலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **செல்வி அபிநயா வாலசிங்கம்,** 20/08, பெயிலி குறுக்கு வீதி, மட்டக்களப்பு. | **எம்.வை.எம். ஹுஸைன்,** 42சி, ஹிரும்புற குறுக்கு வீதி, காலி. |
| **எஸ். சோபிதா,** ஏ1,எஃப்24, புளூமெண்டல் தொடர்மாடி, கொழு.-13. | **என்.டி. பாத்திமா ஆஸிகா,** 50, பிரதான வீதி, மாதம்பை. |
| **கு. துஸ்யந்தன்,** 17/8, கன்னாரத் தெரு, கொழும்பு-13. | **சி. சரண்ய தீபா,** பு/ஆண்டிமுனை மகா வித்தியாலயம். உடப்பு, சிலாபம். |
| **கோ. ஆர்த்தி,** பரமன் ஒழுங்கை, ஆரையம்பதி-01. | **எம். பிரகாஷினி,** த.ம. கல்லூரி, பண்டாரவளை. |
| **தே. அமில்டன் தேவராஜ்,** திருவள்ளுவர் வீதி, உக்குளாங்குளம், வவுனியா. | **எம்.எஸ். பாத்திமா ஷகீலா** 348/5 சேனக ஒழுங்கை, பலகஹமுல, பலாங்கொட. |

## விடுகதைகளும் விடைகளும்


1) உசி போட்ட வைத்தியர் பாடிக் கொண்டு போகிறார். அவர் யார்?
2) வரும்போது வெண் சிவப்பு! வளர வளரத் தகதகப்பு! போகும் போது கடும் சிவப்பு! அது என்ன?
3) உயிரில்லாத நீதிபதி உரிய தீர்ப்பு வழங்குவார். அவர் யார்?
4) மழைக்காலம் வந்துவிட்டால் மகராசி பாட்டெடுப்பாள். அவள் யார்?
5) தலையைச் சீவினால் தாளில் நடப்பான். அவன் யார்?
6) தீக்குளித்தாலும் திடமாக இருப்பவர் அவர் யார்?
7) வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை. அவன் யார்?
8) புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தங்குவதோ ஒராண்டு. அவன் யார்?
9) வெயிலில் மலரும் காற்றில் உலரும். அது என்ன?
10) கல்வீட்டுத் தாத்தா மெதுவாகத்தான் நடப்பார். அவர் யார்?

### விடைகள்

(10) [illegible] (9) [illegible]
(8) [illegible] (7) [illegible]
(6) [illegible] (5) [illegible]
(4) [illegible] (3) [illegible]
(2) [illegible] (1) [illegible]

எஸ்.கே.ருஸ்னி குறைஸ்-
தரம் 10A
பு/மு.ம.வி., நுரைச்சோலை.

## அதிசய உலகம்!



**எ**லி போல் உருவம்கொண்ட கொறித்துத் தின்னும் பிராணியான இதன் பெயர் ஜேர்பில். இப் பிராணி மத்திய ஆசியா, ஆபிரிக்காவின் வறண்ட பகுதிகளில் வசிக்கிறது. இது தனது பின்னங்கால்களில் உட்கார்ந்துகொண்டு, முன்னங்கால்களைத் தரையில் தட்டும் வழக்கமுடையது. அதுவும் ஒரு விநாடிக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் டிரம்ஸ் வாசிப்பது போல் தட்டிக் கொண்டிருக்கும். சிலநேரங்களில் மிகவும் வேகமாக டிரம்ஸ் வாசிப்பது போல் தட்டிக்கொண்டிருக்கும.

### குட்டி குட்டி விஷயம் பேசுவோமா?



குட்டீஸ், கடலில் சுறா மீன்கள் இருப்பதும், அவை ரொம்பஆபத்தானவை என்பதும் உங்களுக்குத் தெரியும். சுறா மீன்கள் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்காத இன்னொரு விஷயம் உண்டு. சுறா மீன்கள் 24 மணி நேரமும் நீந்தியபடிதான் இருக்கும். அவை ஒரே இடத்துல இருக்காது. ஏன் தெரியுமா?

சுறா மீன்களின் உடல் அமைப்புப்படி அவை நீந்திக்கொண்டு இருந்தால்தான் அவற்றின் வாய் வழியாகத் தண்ணீர் போய் சுறா மீன்கள் சுவாசிக்க முடியும். சுறா மீன்கள் ஒரே இடத்தில் நின்றுகொண்டிருந்தாலோ பாறை இடுக்குகளில் மாட்டிக்கொண்டாலோ சுவாசிக்க முடியாமல் செத்தே போயிடும். ஆச்சரியமா இருக்குதல்லவா?

சுறா மீன்கள் பற்றி இன்னொரு தகவல். இந்த மீன்களுக்கு காதும், மூக்கும் ரொம்பக் கூர்மை. பல மீட்டர்களுக்கு அப்பால் கொஞ்சம் ரத்தம் கடலில் சிந்தினாலும் அதை மோப்பம் பிடித்து அந்த இடத்துக்குப் போயிடும். தவிர ரொம்ப தொலைவில சத்தம் ஏற்பட்டாற்கூட அதைச் சுறா மீன்களால் கேட்க முடியும்.

## வாரம் ஒரு TOP TEN

இவ்வாரம்:- நிலத்தில் வாழும் நீளமான உயிரினங்கள்

| உயிரினம்* | நீளம்# | |
|---|---|---|
| | மீற்றர் | அடி |
| (1) ராஜ மலைப்பாம்பு | 10.7 | 35 |
| (2) நாடாப் பூச்சி | 10.0 | 33 |
| (3) ஆபிரிக்க யானை | 7.3 | 24 |
| (4) முகத்துவார முதலை | 5.9 | 19 |
| (5) ஒட்டகச் சிவிங்கி | 5.8 | 19 |
| (6) வெள்ளைக் காண்டாமிருகம் | 4.2 | 14 |
| (7) நீர்யானை | 4.0 | 13 |
| (8) அமெரிக்கக் காட்டெருமை | 3.9 | 13 |
| (9) அரேபிய ஒட்டகம் | 3.5 | 12 |
| (10) சைபீரியப் புலி | 3.3 | 11 |

* ஒவ்வொரு இனத்திலும் நீளம் கூடியது.
# தலையில் இருந்து பாதம் வரை அல்லது தலையில் இருந்து வால் வரை.


## அறிவுத் தேடல்

**சென்ற வாரப் புதிரின் விடை:**

**இரண்டாவது முக்கோணி**

(முக்கோணத்தில் உள்ள புள்ளி முதலில் இடம் சுழியாக அடுத்த கட்டத்திற்குச் செல்கிறது. ஒரு சுற்று பூர்த்தியானதும் மீண்டும் வந்த திசையிலே (இப்போது வலஞ்சுழியாக) அடுத்தகட்டத்திற்கு மாறுகின்றது.)

## இந்த வாரப் புதிர்





கேள்விக்குறியிட்ட இடத்தில் வரவேண்டிய எண்ணைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.



## விஷ வியாபாரம்

முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் என்பது போல் விஷத்தை விஷத்தால் அகற்றும் சீன மருத்துவமுறை மிகவும் பிரபலமானது. விஷ எதிர்ப்பு மாத்திரைகளைத் தயாரிக்க விஷம் தேவைப்படுகிறது. இதற்கென சீனாவில் ஆபத்தான விஷப் பாம்புகளை வளர்க்கும் பண்ணைகள் பல இயங்குகின்றன. அத்தகைய தொரு பண்ணையில் கொடிய நாகம் ஒன்றிட மிருந்து விஷம் எடுக்கப் படுகிறது.



## கவனம்

ஆசிய நாடுகளில் வேகமாகப் பரவிவரும் ஒரு வகை மூளைக்காய்ச்சல் குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது. விரைவில் தொற்றக்கூடிய இந்தக் காய்ச்சல், நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்த தாதிமார், ஊழியர்கள் பலரையும் ஆட்கொண்டிருக்கிறது.

ஹொங்கொங், கம்போடியா, வியட்நாம், சிங்கப்பூர் மருத்துவமனைகளில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும், சத்திரசிகிச்சை செய்யும் மருத்துவர்கள் போல பாதுகாப்பான உடையணியப் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தக் காய்ச்சல் எதனால் ஏற்படுகிறது என்று இன்னமும் கண்டறியப்படவில்லை.



## வசதி

குழந்தைகளை அமர வைத்துத் தள்ளிச் செல்லும் சக்கரக் கதிரை பெரும்பாலும் ஒரு குழந்தைக்கு ஏற்ற விதத்தில்தான் தயாரிக்கப்படுவதுண்டு. தப்பித்தவறி இரட்டைக் குழந்தை பிறந்துவிட்டால்...

பிரிட்டனில் வசிக்கும் ரிச்சட்சன் தம்பதிகளுக்கு முதல் பிரசவத்திலேயே 4 குழந்தைகள் பிறந்தன. எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் தவித்தார்கள். இந் நிலையில்தான், 4 குழந்தைகளையும் ஒன்றாக வைத்துத் தள்ளிச் செல்லக்கூடிய சக்கரக் கதிரை ஒன்றைப் பிரத்தியேகமாகத் தயாரித்துக் கொண்டால் என்ன என்ற யோசனை ரிச்சட்சனுக்குத் தோன்றியது...

# தகவல் பெட்டி



## சுயம்வரம்

எதற்கெல்லாம் திருமணம் முடித்து வைப்பதென்ற விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது. தாய்லாந்தின் தலைநகரமான பாங்கொக்கில் கடந்த வாரம் ஒரு ஜோடி முயலுக்கும் ஒரு ஜோடி கோழிக்கும் திருமணம் செய்து வைத்தார்கள். இந்த விசேட திருமண வைபவத்தில் நாய், பூனை ஜோடிகள் பலவற்றுக்கும் சுயம்வரம் நடந்தது. மாங்கல்யம் தந்துனா... எனும்போது மறுபக்கத்திலிருந்து 'மியாவ் மியாவ்' என்று சவுண்ட் வருமோ...!



## அரிதான 'க்ளிக்'

சிறைக்கைதிகள் தப்பித்துச் செல்லும் காட்சிகளை எளிதில் புகைப்படம் பிடிக்கக் கிடைப்பதில்லை. ஏனெனில் பெரும்பாலும் கைதிகள் தப்பிச் சென்ற பின்னர்தான் விஷயம் பொலிஸாருக்கே தெரியவருகிறது.

ஆனால் இத்தகைய சம்பவம் ஒன்றைத் தன் கமராவுக்குள் அடக்கும் அரிய சந்தர்ப்பம் ராய்ட்டர் செய்தியாளர் ஒருவருக்குக் கிடைத்தது.

கோதமாலா நாட்டின் சிறைச்சாலை ஒன்றில் சுவரை உடைத்துக்கொண்டு கைதிகள் தப்பிச் செல்லப்போகும் தகவல் முன்கூட்டியே கசிந்துவிட்டது.

பொலிஸார் சிறைச்சாலைச் சுவர்களுக்கு வெளியே காவல் நிற்க அவர்களுக்குப் பின்னால் புகைப்படப்பிடிப்பாளர்கள் நின்றிருந்தார்.

ஒருவர் சுவரை உடைத்துக்கொண்டு வெளியே வர தலைக்கு மேலாகப் பொலிஸ் துப்பாக்கி!

# அபிநயஸ்ரீ வேதனை

"கடைசியில் என்னையும் என் அம்மா அனுராதா மாதிரி கவர்ச்சி டான்ஸ் ஆடறதுக்கு மட்டும் கூப்பிட்றாங்களே! என் நடிப்புத் திறமையை யாருமே புரிஞ்சுக்க மாட்டேங்கிறாங்களே..." என்று மிகவும் வேதனையுடன் புலம்பும் அபிநயஸ்ரீ, தனது தாயாரை சொந்தப் படம் தயாரிக்கும்படி வற்புறுத்தி வருகிறார். இதில் அபிநயஸ்ரீ கதாநாயகியாக நடித்து, இந்த உலகத்துக்கே தனது நடிப்புத் திறமையை வெளிச்சம் போட்டுக் காட்டப் போகிறாராம்!



# ரொம்பத்தான் மாறி...

ஷகீலா ரொம்பத்தான் மாறிக்கொண்டு ... தெரிந்தவர், இப்போது முக்காடு போட்டுக்கொ... பித்துள்ளார்.

சமீபத்தில் வந்த 'அன்புத் தொல்லை'யில் ... பதில் ஹீரோயினாக நடித்த ரவளிதான் ...

இப்போது 'துளித் துளியாய்' என்ற படத்தி... கிறாராம். எப்படித் தெரியுமா?

ஆபாசப் படங்களைப் பார்த்துப் பார்... வர்களுக்கு அறிவுரை புத்திமதி கூறித் ...

# 'நியூ'விலிருந்து வி... சிம்ரன் முடி...

'நியூ' படத்தில் கமலுக்குப் போட்டி... டர் சூர்யாவும் 'சூப்பர் கிஸ்' கொ... பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இப்போது இப் படம் குறித்து ... பரப்பு. 'நியூ' படத்திலிருந்து சி... ராம். படம் குறித்து சூர்யா, சொ... ஒன்றாக இருந்ததாம். இதனா... ஆகிவிட்டாராம்.

மேலும் ஏகத்துக்கும் சூடான ... படம் பூராவும் வைத்து சிம்ரனை ... கொண்டு போய்விட்டாராம்.

தன்னை 'வாலி' படம் ... டைரக்டர் என்பதா... கொடுத்தார் ... தன்னை ...

# நல்ல 'பிள்ளை யாகிவிட்ட' கார்த்திக்

நிஜமாகவே கார்த்திக் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்து நடித்ததால், 'காஷ்மீர்' படத்தின் இறுதிக் கட்டப் படப்பிடிப்பு நடைபெறுகிறது. ஊட்டிக்கும், அவருக்கும் நல்ல ராசி என்பதாலேயே இவ்வளவு பரபரப்பாக உழைத்துக்கொண்டிருக்கிறார். 'காஷ்மீர்' படத்தில் நடித்துக் கொண்டே 'இன்று' படத்துக்கும் கால்ஷீட் கொடுத்து நடிக்கிறார். இதனால் இரண்டு படங்களும் பரபரப்பாக உருவாகி வருகிறது.

"ஒரு சாதாரண இசைக் கலைஞனாக இருக்கும் நான், படிப்படியாக வளர்ந்து உலக சாதனை படைக்கிறேன். அப்போது போலீஸ் என்னைக் கைது செய்து சிறையில் அடைக்கிறது! அப்படி என்ன பெரிதாகத் தவறு செய்தேன் என்று கேட்கிறீர்களா? ஸாரி, கதையை இதற்கு மேல் நான் சொல்லக் கூடாது. 'காஷ்மீர்' பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்" என்று மிகவும் உற்சாகமாகப் பேசிய கார்த்திக், சொன்ன நேரத்துக்கு முன்பாகவே படப்பிடிப்புத் தளத்துக்கு வந்து காத்திருக்கிறாராம்! பழைய இடத்தை எப்படியும் பிடித்துவிட வேண்டும் என்ற முனைப்புடன் நடிக்கும் அவர், 'இது நம்ம பூமி' படத்துக்குப் பிறகு ராதாரவி தயாரிக்கும் புதிய படமொன்றில் நடிக்கிறார். இதில் அவரது ஜோடியாக மீனா நடிக்கிறார்!

# மினி சினி

★ 'இன்று முதல்' என்ற படத்தில் ஒரு காட்சியில் நாயகி நந்திதாவின் மார்புக்குள் ஐஸ்கிரீம் விழுந்துவிடுகிறது. ஐஸ் குளிர் தாங்க முடியாத நந்திதா முன்னழகைக் குலுக்கி நெளிந்து இரசிகர்களைக் குளிர வைத்திருக்கிறார்.

★ "கவர்ச்சியாக நடிக்க வாய்ப்பிருந்தால் கொடுங்கள்" என்று இயக்குநர்களிடம் நேரடியாகக் கேட்டு வருகிறார் உமா. 'சொக்கத் தங்கம்' படத்தில் விஜயகாந்தின் தங்கையாக நடித்தவர் இவர்.

★ கிரண் கேட்கும் சம்பளத்தால் அதிர்ந்து போயிருக்கிறது தயாரிப்பாளர்கள் வட்டாரம். கிரணைக் காரணம் கேட்டால் பதில் தயாராகவே வைத்திருக்கிறார். இது வரை முன்னணி நடிகர்களுடன் மட்டுமே நடித்திருக்கிறாராம். இது வரை அதுபோல் யாருடனும் நடித்ததில்லை. பிறகு ஏன் நான் சம்பளத்தை உயர்த்திக் கேட்கக் கூடாது என்கிறார்.

★ "ஆஸ்கார் விருது என்ன பெரிய ஆஸ்கார் விருது? மற்ற விருது மாதிரி அதுவும் ஒரு விருது. அவ்வளவுதான். படம் நமக்குத் திருப்தியா, நல்ல படமா இருந்து அது போய் மக்களிடம் சேரணும். அவ்வளவுதான். அதுக்கு விருது கிடைச்சதுன்னா வெரிகுட். அமெரிக்காவில் கொடுக்கிறதால ஆஸ்கார் விருதை பெரிய விருதா நினைச்சுக்கிறதா?" என்று பொரிந்து தள்ளுகிறார் மணிரத்னம்.

★ மன உறுதி பெறவும் தன்னம்பிக்கை ஏற்படவும் நீச்சல்தான் சுலபமான வழி. மிகச் சிறந்த எக்சர்சைஸ் எதுவென்று யாரைக் கேட்டாலும் அவர்கள் நீரைத்தான் நிச்சயம் கை காட்டுவார்கள். பசி எடுக்கும்; அண்டா நிறைய சாப்பிடத் தோன்றும்; சத்துள்ள உணவுகள் சுலபமாக ஜீரணமாகும்; உடல் வலுவாகும்; தசைகள் இறுகி 'ரதி' போல் ஷேப்புக்கு வரும் என்று கூறுகிறார் நடிகை ரதி.



அர்ஜுன் -ஜோதிகா
படம்: மணிகண்டா

# ஆண்குழந்தைக்கு அம்மாவானார் மாதுரி தீட்ஷித்

ஹிந்தி திரையுலகில் நீங்காத இடம் ஒன்றைத் தனதாக்கிக்கொண்ட நடிகை மாதுரி தீட்ஷித் ஆண் குழந்தை ஒன்றுக்குத் தாயாகியிருக்கிறார்.

மார்ச் 18ம் திகதி அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள மருத்துவமனை ஒன்றில் மாதுரிக்கு ஆண்குழந்தை பிறந்தது. தாயும் சேயும் நலமாக உள்ளனரென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகப் பெரும்புள்ளி ஒருவரை இரண்டாண்டுகளுக்கு முன்னர் திருமணம் செய்துகொண்ட மாதுரி தீட்ஷித் திருமணத்தின் பின்னர் குறைந்தளவிலான திரைப்படங்களிலேயே நடித்தார்.

ஏற்கனவே ஒப்புக்கொண்ட சில படங்களில் நடிக்கும் போது மாதுரி கர்ப்பமாக இருந்தார் என்று முன்னதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

அண்மையில் நடந்து முடிந்த சினிமா எக்ஸ்பிரஸ் விருது வழங்கும் நிகழ்வில் 'தேவ்தாஸ்' திரைப்படத்தில் 'சந்திரமுகி' என்ற விலைமாதுவின் பாத்திரத்தில் நடித்ததற்காக மாதுரி தீட்ஷித்துக்குச் சிறந்த துணை நடிகைக்கான விருது கிடைத்தது.

# லேட்டாகப் புரிந்துகொண்ட விந்தியா

கதாநாயகியாக மட்டுமே நடிப்பேன் என்று சொன்னால் வீட்டில் உட்கார வைத்துவிடுவார்கள் என்பதை லேட்டாகப் புரிந்துகொண்ட விந்தியா, தற்போது படத்துக்குப் படம் தன் கவர்ச்சி எல்லையை விரிவுபடுத்திக்கொண்டே வருகிறார். இதனால் அவருக்கு நிறைய புதுப்பட வாய்ப்புகள் கிடைத்துள்ளது. 'ஒரேயடியாக கவர்ச்சி நடிகைகளுக்குச் சவால் விடும் வகையில் துணிந்துவிட்டீர்களே, ஏன்?" என்று கேட்டபோது, "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வதுதான் புத்திசாலித்தனம். என் நடிப்புத் திறமையைப் பல படங்களில் வெளிப்படுத்தியபோது கிடைக்காத வரவேற்பு, கவர்ச்சி காட்டி நடித்தபோது அளவுக்கதிகமாகக் கிடைத்தது" என்று யதார்த்தமாகப் பதில் கூறுகிறார்.



விந்தியா

## …றிவிட்டார் ஷகீலா

… மலையாளப் படங்களில் 'முழுக்க முழுக்க' … குறையாக தமிழ்ப் படங்களில் நடிக்க ஆரம்…

… காட்டுவார் என்று எதிர்பார்த்தால் அவருக்குப் …சியில் திக்குமுக்காட வைத்தார்.

… ஷகீலா படு வித்தியாசமான கேரக்டரில் நடிக்…

… பல்வேறு கலர் கனவுகளில் திளைக்கும் மாண… ஆசிரியை வேடத்தில் வருகிறாராம் ஷகீலா.



## … விலக … வு?

… சிம்ரனும் டைரக் … புகைப்படம் … இன்னொரு பர… விலகிவிட்டா… ஒன்று செய்தது … அப்செட் … காட்சிகளை … ரேஞ்சுக்குக் … தூக்கிவிட்ட … முதலில் விட்டுக் … சிம்ரன். ஆனால், … ரொம்ப அதிகமா … சூர்யா 'மிஸ் யூஸ்' செய்துவிட்டதாக சிம்ரன் கருதினாராம். இதனால் படத்தில் இருந்து விலகிவிட்டதாகக் கூறுகிறார்கள்.

சிம்ரன் விலகிவிட்டதால் முதலில் கொஞ்சம் கவலைப்பட்ட சூர்யா அவருக்குப் பாடம் புகட்டவும் தயாராகிவிட்டதாகத் தெரிகிறது. முதலில் சிம்ரனின் டூப்ளிகேட்டைப் போட்டு ஓவர் செக்ஸைப் புகுத்த நினைத்தாராம்.

அந்த யோசனையை ஒதுக்கிவிட்டு சிம்ரனை விடச் சூடான கிரணை அணுகியுள்ளாராம்.

பணம் என்றால் எதற்கும் தயார் என்ற நிலையில் இருக்கும் கிரண் மட்டும் தலையாட்டிவிட்டால் 'சூப்பர் டூப்பர்' செக்ஸ், கிஸ்களை வைத்து 'நியூ' படத்தை படு சூடாக' எடுக்கத் திட்டமிட்டுள்ளாராம் சூர்யா.

## விவேக்குடன் இணைகிறார் மும்தாஜ்

விவேக் இப்போது தமிழ் சினிமாவில் பிஸியாக இருக்கிறார். சுமார் பத்துக்கும் மேற்பட்ட படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர் மிகவும் எதிர்பார்ப்பது ஷங்கரின் 'பாய்ஸ்' மற்றும் விக்ரமின் 'சாமி' "இவ்விரு படங்களிலும் வித்தியாசமான கோணத்தில் நகைச்சுவை படமாக்கப்பட்டுள்ளது" என்கிறார் விவேக்.

'பாய்ஸ், சாமி, காதல் சடுகுடு, த்ரீரோஸஸ், அன்பே அன்பே, தித்திக்குதே, லேசாலேசா, எனக்கு 20 உனக்கு 18, பார்த்திபன் கனவு மற்றும் 'காதல் கிசுகிசு' உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறார்.

மேலும் த்ரீரோஸஸில் மும்தாஜுடன் இணைந்து நடிக்கிறார் விவேக்.

விவேக்குடன் நடிக்க முதலில் மும்தாஜ் மறுத்தாராம். இயக்குநரின் வற்புறுத்தலின்பேரில் நடிக்கச் சம்மதித்திருக்கிறார்.

## காதோடு சொல்கிறோம்

தனது 'கவர்ச்சிகளுக்குப் போதிய மவுசு இல்லை என்று பெருங்கவலையில் இருக்கிறார் அல்போன்ஸா. திரைக்கு முன்னால் இரசிகர்களுக்கும், திரைக்குப் பின்னால் இயக்குநர், தயாரிப்பாளர்களுக்கும் என்னதான் அள்ளி வழங்கினாலும் ஆன பயன் எதுவுமில்லை என்ற ஆதங்கத்தில் ஷகீலாவைப் போல் குணசித்திர வேடங்களை வேட்டையாட ஆரம்பித்திருக்கிறார் அல்போன்ஸா, இதற்காக இன்னொரு ரவுண்ட் திரைக்குப் பின்னால் சேவை செய்யத் தயாராக இருப்பதைப் பலருக்கும் சூசகமாகத் தெரியப்படுத்தி வருகிறார்.

'ஏ வெண்ணிலா' படத்தில் நீச்சல் உடையில் கிறங்கடித்திருக்கிறார் ரதி. இந்தப் படத்தின் வாய்ப்பைப் பெற படக்குழுவில் முக்கியமில்லாத ஒரு மீசைக்காரருக்குக் கம்பனி கொடுக்க வேண்டி ஏற்பட்டதாகப் பேசிக்கொள்கிறார்கள்.

## என் என்றால் எண்ணெயாக நிற்கும் சங்கவி

'இரண்டு பேர்' படத்துக்காக உரித்து வைத்த கோழி போல போஸ் கொடுக்கும் சங்கவி, படப்பிடிப்பில் கவர்ச்சி காட்டுவதில் எள் என்றால் எண்ணெயாக இருக்கிறாராம்! இந்தப் படத்துல ராதிகா சவுத்ரி ஒரு பாட்டுக்கு கிளாமரா ஆடறாங்கன்னு தெரிஞ்ச மறுநிமிஷமே, "நானும் அவருக்குப் போட்டியா படுகவர்ச்சியா ஆடுவேன்" என்று அடம் பிடித்து இந்த வாய்ப்பைப் பெற்றாராம் சங்கவி! இப்படி இரண்டு நடிகைகளும் போட்டி போட்டுக்கொண்டு ஆடியிருப்பதால் இரசிகர்களுக்குக் கொண்டாட்டம்தான்.

## ரஜினி படத்தில் மீனா

வருகிற ஜூலை மாதம் கே.எஸ்.ரவிகுமார் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிக்கும் புதிய படத்தின் அறிவிப்பு வெளியாகிறது. 'நாட்டாமை' மற்றும் 'படையப்பா' படத்தின் கதை ஸ்டைலில் இந்தப் படத்தின் கதை அமைந்துள்ளது. இதில் மூன்று கதாநாயகிகள் நடிக்கின்றனர். அவர்களில் ஒருவர் மீனா என்பது நம்பகமான தகவல்!

**முகப்பில்** சரத்குமார்–சிம்ரன்


ரம்யாகிருஷ்ணா

படம்: —ஜூலி கணபதி



## ஸ்ரீகாந்தும் த்ரிஷாவும் காதலிக்கிறார்களா என்று புரியவில்லை!

சமீபத்தில் பின்னணி இசை சேர்ப்புக்காக 'மனசெல்லாம்' படத்தைப் பார்த்து இரசித்த இளையராஜா, "படத்தோட கதை ரொம்ப பிரமாதம். இதுக்கு முன்னால எந்த பொண்ணையாவது நீங்க காதலிச்சு இருக்கீங்களா?" என்று இயக்குநர் சந்தோஷ் பற்றி ஜாலியாகக் கிண்டல் அடித்துள்ளார். படத்தின் கிளைமாக்ஸ் காட்சி வரை ஸ்ரீகாந்த், த்ரிஷா இருவரும் ஒருவரை ஒருவர் காதலிக்கிறார்களா? இல்லையா? என்பதை ஒரு இரசிகரால்கூட யூகிக்க முடியாது. அந்தளவுக்குக் கதை புதுமையானது என்று சொல்கிறார்கள். இவர்கள் காதலிக்கிறார்களா என்பது இயக்குநருக்கு மட்டுமாவது தெரிந்தால் சரி!



சி னி வி சி ட்

தேன்கிண்ணம்

## எல்லாமே கனவுகள்...

கனவுகளை மெல்ல
கலைத்து விட்டுத்தானே
வாழ வேண்டும்... என
வருகிறது கனவுகள்.
பணம் தேடும் மனமும்
பிணமாகு முடலும்
பறிபோகும் வாழ்வும்
பறிபோய் விடட்டும்.
*
பண்பட்ட இதயம்
புண்படா நிலையொன்று
தோன்றிட வேண்டும்...
என்பதுவும்
கனவாகிப் போகிறது.
*
கனவுகளைக் கலைப்பதற்கு
வழியேது தேடி
வருந்தவே முடிகிறது.
*
காதலிற் கனவு... பின்
கற்பனை பலதானும் கனவு.
காதல் கழிகையில்
வாழ்க்கை தேடிக் கனவு
வாழ்வது வந்தபின்
ஏதேதோ கனவு...,
*
எப்படிக் கனவிற்கு
எல்லை சமைப்பது?
காவி தரிப்பதோ
காலம் கடப்பதோ?
மிண்டும் கனவு
மீளாத கனவால்
மாண்டதே மனமும் .
மனமதன் மகிழ்வும்!

சி.மதியழகன்-அல்வாய்.

## எனக்குள்...

என் இதய வாசலிலே
நங்கூரமிட்டு
நிற்கின்றது உன் நினைவு.
*
உன்னை என் கண்களும்
தேடவில்லை,
என் கால்களும் உனக்காய்
அலையவில்லை.
*
அப்படி இருந்தும்
நீ எப்படி என்னுள்
புகுந்தாய்!
*
வேறு எவரும் வந்து
விடக்கூடாது என்பதற்காய்
நீ-புகுந்தாயா?
அரை அங்குலம் ஏனும் நகர
மறுக்கின்றாயே!
*
பாழடைந்து போனதனால்
புனரமைப்பு செய்வதற்கு
புகுந்தாயா?
*
என் இதயம் கனக்கின்ற போது
தான்-நீ இருப்பதை நானே
உணர்கின்றேன்.

கொழும்பு-கவி.

## இன்னொரு தேவதாஸ்

ஒவ்வொரு
நிலாப் பொழிவிலும்
சலனங்களைப்
பேசவேண்டிய
நிர்ப்பந்தம் எனக்கு...
*
மனப்பாடலின்
மகிழ்ச்சிப் பிரவாகம்
தோற்றுப்போன பிறகு
வாழ்வதற்கான ஆவல்
துளியேனும் இல்லை
என்னிடத்தில்...
*
இந்த பூமியின்
புறக்கணிக்கப்பட்ட
பாகங்களில்
கைவிடப்பட்டிருக்கிறது
நமது நிலாச் சோறு...
வெட்டவெளித் தனிமையின்
விஷப்பற்களில்
காதலித்துக் காய்ந்துபோன
கனவுகள்...
*
எந்தக் கல்லறையில்
கிள்ளியெறிவது
முரட்டுத் துயரத்தின்
முணுமுணுப்பை..
*
பூக்களுக்குப்
பதிலளிக்கத் தெரியாமல்
பூகம்ப இடைவெளியில்
தலைகுனிந்து
நிற்கிறேன்
ஒரு மயானத்துப்
புல்லாங்குழல்
என் மனசைக்
குடைகிறதே...
*
நரம்புகள் அறுந்து
நாதியற்றுக் கிடக்கும்
இத்துப்போன ஹிருதயத்தில்
இம்சிக்கப்பட்ட
ஞாபகங்கள்..
ஆமாம்
நான் இன்னொரு
தேவதாஸ்...

நியாஸ் முஸாதிக்-
கிண்ணியா-05.

## மரணமே வா....

இன்றோ நாளையோ
நிச்சயம் வரும் மரணம்..!
என்
ஆத்மாவை காவிச் செல்ல...!
*
எந்தவிடத்தில்
எந்ரூபத்தில்
எவரும் அறியார்
அவரைத் தவிர...
ஆனால்
நிச்சயம் வரும்
ஓர் நாள்...
உயிரை கிள்ளிச் செல்ல..!
*
அன்று
வெற்றுடலாய் நான் கிடக்க
சுற்றி
சூழ்ந்தழும் சொந்தங்களை
பாராமலே போய் விடுவேன்
மரணத்தின் கரம் பற்றி...!
*
அந்தம் தெரியும்
ஆதியும் தெரியும்
நடுவில்
வாழ்ந்துவிட்ட என்னை
மரணமது கை
கொள்ளும்போது
காலச் செடியில்
பூத்திருக்கும்
எனக்கான கவிதை..
*
ஓ..
மரணமே வா... வா..
காத்திருக்கிறேன்
என்னை உனக்குள்
புதைத்து
முளைவிட...!


சண்முகம் சிவகுமார்-
பத்தனை.

## வளமான வாழ்வைத் தேடுவார் யார்?

ஆயிரம் காலம் வாழும் பயிரென
ஆன்றோர் கருதிய வாழ்க்கையை
நோயிலும் பிணியிலும் நொந்துள்ளவர்களை
நன்முறையில் நடாத்திடும் நாள்களிது.
***
வேதங்கள் ஓதி வெந்தணல் சுற்றி
வேண்டிய தேவதையின் ஆசிகள் பெற்று
பாதகமற்ற பயன் பெறு நாளொன்றில்
பண்பாட்டுடன் பலபேர் வாழ்த்தும் அரங்கேற்றம்
***
உண்மையேயன்றி வேறொன்றில்லை என
உருக்கமாய் பேசிடும் உத்தமராம்
கண்கண்ட தெய்வமாம் கணவரென
கருதியே வாழும் பெண்கள் காலம்
***
எடுபிடி வேலையென மாற்றுநாட்டுப்
பிரசாவுரிமையும் பெற்றவரென்றே
தடுத்திட முடியா தகுதியில் அவர்
தாலிகட்டிட தலை குனிவாள் பெண்
***
எங்கிருந்தாலும் வாழ்க என எண்ணிக்
கலங்கிடும் காதலன் உள்ளூர அழுதிட
தங்கக் கட்டியுடன் தரமான தம்பி என
தரகர்கள் சொல்லில் தடுத்திடார் தந்தை
***
வெற்றி நடை போடும் வாழ்வு
வந்திடாதா என ஏங்கிய கன்னியை
பற்றிப் பிடித்திடும் பால்வினை நோய்
பாரம்பரியத்தில் இல்லாத எயிற்சென்பர் இதை
***
பாசத்தால் பொங்கிய பந்தங்கள்
பழிச் சொல்லில் சேர்த்திடக் கூடாதென
பதுக்கியே வைப்பர் நோயின் நிலையை
தேசத்தின் மூலையெலாம் தென்றலாய் பரவிடும்.
***
ஆசைக்கும் அன்புக்கும் அழிவிலா
வாழ்வுக்கும் வளத்துக்கும் வழங்கிய
நேசக் கரங்களை நேசிக்க மறுத்ததன்
நேர்மையற்ற வாழ்வின் துயரன்றோ இது.

கோவையூர் வசந்தன்.

## பேனா நண்பர்கள்



பெயர்:
கலைச்செல்வன்
வயது: 23
முகவரி:
18, பெனி குயிக் லேன்,
வெள்ளவத்தை,
பொழுது போக்கு:
கிரிக்கெட்.



பெயர்: க.சிவகுமார்
வயது: 22
முகவரி: 905-டி,
யாழ் எலக்ரோனிக்
கண்டி வீதி,பாலையூற்று,
திருகோணமலை,
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்:
முகமது பைசல்
வயது: 18
முகவரி:
11/1, பலல்ல வீதி, புதிய
தெரு, வெலிகம
பொழுது போக்கு:
ரி.வி., பத்திரிகை.

## ஹைக்கூ

**குளம்!**
குண்டு மழை பொழிந்தாலும்
உடையாத கண்ணாடி
*
**காதலர் தினம்!**
பெப்ரவரி மாதத்தில்-"காதலருக்கு"
பிறக்கும் ஐந்தாம் எண் குழந்தை
*
**புன்னகை!**
தேவைப்படும் நேரத்தில்
உதட்டில் மலரும் பூ
*
**சூதாடுபவர்கள்!**
பணம் கொள்ளையிடும்
கண்ணாம்பூச்சி கொள்ளையர்கள்
*
**கண் "கள்"!**
விண் சென்று திரும்புவதில்
விண்வெளி ஓடத்தை மிஞ்சும் இயந்திரம்
*
**ஒழுக்கம்!**
பிணமாகும் வரை இருக்கணும்
பிறப்புடன் கிடைத்த ஆடை
*
**ஒப்பந்தம்!**
போரை கட்டி வைக்க
பேனா நெய்த கயிறு
*
**காதலித்து பிரிதல்!**
சிந்தை கருகாமல்
சுட்டு வேதனை செய்யும் நெருப்பு
*
**இரவு!**
உலகில் அனைத்தையும்
உறங்க வைக்கும் தூக்கமாத்திரை
*
**உதடு!**
புன்னகை(க்)கையில் விரியும்
இரு ரோஜா இதழ் "கள்"

தமிழ்ப்பிரியன்-யாழ்ப்பாணம்.

## பெற்ற மனம் பித்து

பெற்ற மனம் பித்து
பாசமேலிட்டால்
பசி கிடந்தே
பணத்தைச் சேமித்தேன்-உன்
நல்வாழ்வுக்காக!
பதவிகள் தேடிவந்தன
பகட்டான வாழ்வுடன்
மனைவி வந்ததும்
பலத்தை தொலைத்துவிட்டாய்!
பரிதவித்து இறைவனிடம்
இறைஞ்சுகிறேன்
எதிர்காலத்தில்-என்
பிள்ளை
அவன் பிள்ளையால்
அநாதை ஆசிரமத்துக்கு
வந்துவிடக்கூடாதே!

சித்தி நிஹாரா-
தெஹிவளை-கொழும்பு.

## தேடிப் பெற்றவை

## புதுக் கவிதை என்றால் என்ன?

இவ் வினாவுக்கு விடையளித்தல் மிகமிகக் கடினமேயாகும். கவிதை என்றால் என்ன? இலக்கியம் என்றால் என்ன? என்னும் வினாக்களுக்கே இன்னும் விடை கண்டாகவில்லை. இனியேனும் விடை காண்போம் என்னும் நம்பிக்கையும் இல்லை. ஆனால் இவற்றிற்கு விடை காண்பதைவிட இவை விளங்கிக் கொள்ளப்படுதலே இன்றியமையாதது. கவிதை என்றால் என்ன என்பதை உணர்த்துவதைக் காட்டிலும் ஒரு கவிதையை உணர்ந்து சுவைப்பது எளிமையான பணியாக விளங்குகிறது. இதனால்தான் 'கவிதை' என்பதை வெறும் வரிவடிவத் தொகுதியாக அமைந்த எண்ண வார்ப்புகளாகக் கருதாமல் மனித மனம் பெறுகின்ற அநுபவமாகக் கருதுகிறார்கள். ஒரு கவிதையைப் படிப்பதனால் ஏற்படும் இன்பம் ஒரு குழந்தையின் புன்சிரிப்பைக் காண்பதனாலும் ஏற்படலாம். இளைஞர்களுக்கு அவர்களது காதலிகளே கவிதையாகவும், தாய்மார்களுக்குத் தமது குழந்தைகளே கவிதையாகவும் காட்சி தருவதில்லையா! இதனால்தான் கவிதையை "சுயத்தின் கசிவு" **(The Sweating self)** என்றார் ஒருவர். ஃபிளேபர் என்னும் கவிஞர் தன்னையே "மனித வடிவத்தில் அமைந்த ஒரு பேனாவாகக்" குறிப்பிட்டார். **(I Am a Pen in human form)** உணர்வின் நெகிழ்வால் விளங்கிக் கொள்ள வேண்டிய கவிதையை வரிவடிவப் பாகுபாட்டால் வரையறை செய்வது அறிவுடைமை ஆகுமா? உரைநடை, கவிதை என்ற இரண்டுமே தமது புற உறுப்புகளாகச் சொற்களைக் கொண்டமைகின்றன. ஒரு சொற்கூட்டம் "கவிதையா?" உரைநடையா? என்பதனை மனத்தின் அநுபவமே தெரியக் காட்டவல்லது.

உணர்வின் உந்துதல்களின்றிச் செய்திகளை வழங்குவதற்குக் கவிதை வடிவத்தைப் பயன்படுத்திய யாப்புப் பயிற்சியாளரும், சமகால வாழ்வைத் திறனாயும் முகத்தானும் தமது பட்டறிவைப் பிறரொடு பகிர்ந்து கொள்ளும் வகையிலும் உணர்வுத் தெறிப்புகளை உரைநடையில் வழங்கிய எழுத்துக் கலைஞர்களும் இருபதாம் நூற்றாண்டில் பல்கிப் பெருகினர். இதன் விளைவாகக் கவிதைத் தன்மை மிக்க உரை நடையும், உரைநடைத் தன்மை மிக்க கவிதையும் தோன்றின. கவிதை, உரைநடை இரண்டிற்கும் வேறுபாடு காண்பது மேலும் கடினமாகிவிட்டது. இத்தகைய காலச் சூழலிலேயே புதுக் கவிதை ஓர் இலக்கிய வகையாக எழுச்சியுற்றது.

**டாக்டர் சி.இ.இறைமலை**
**புதுக் கவிதையின் தேக்கநிலை என்ற நூலிலிருந்து.**

## சிறப்புக் கவிதை

**கவிதை நெஞ்சங்களுக்கு!**

நவின தமிழ்க் கவிதையின் ஒரு தனித்துவ வளர்ச்சிப் போக்கின் முன்னோடிகளில் முக்கியமான ஒருவர் மகாகவி என்கிற து.உருத்திர மூர்த்தி.

பேச்சோசைப் பண்பும், அங்கதமும் மிளிர யாப்பினுள்ளேயே கவிதையை இலகு செய்தவர். சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை நெரிசல்களுக்குக் கலை வடிவம் கொடுத்ததோடு, புதிய புதிய வடிவங்களாலும் கவிதைக்குச் சுவை கூட்டியவர்.

அந்த வகையில் அவர் பயன்படுத்தி வெற்றிகண்ட குறும்பா, கிண்டலுக்கென்றே பிரத்தியேகமாக அமைந்த கவி வடிவம்.

இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக மகாகவியின் குறும்பாக்கள் சில.

1. சொந்தத்திற் கார், கொழும்பிற் காணி
சோக்கான வீடு, வயல், கேணி
இந்தளவும் கொண்டுவரின்
இக்கணமே வாணியின்பாற்
சிந்தை இழப்பான் தண்டபாணி.
*
2. சிவபெருமான் இந்நிலத்தில் வந்தார்
சில்லாலைப் பக்கம் நடந்தார்
அவர் உடை கண்டால் விடுமா
அவ்விடத்து நாய்? அப்பன்
அவசரமாய்த் தம்விடை இவர்ந்தார்.
*
3. பாரி என்ற பாரிய பணத்தர்
பண்புடைய மெல்லிய உளத்தர்
ஊரில் ஒரு தந்தி மரத்து
ஓர் தளிரும் காணாராய்
வேரினிலே வார்ப்பித்தார் அத்தர்.
*
4. பாஞ்சாலி ஆடையை உரிந்தார்
பாண்டவரோ கல்லாய்ச் சமைந்தார்
"ஏஞ்சாமி!" என்றழுதாள்
இவள் களிக்கக் கண்ணபிரான்
ஆம், சேலை ஆயிரமாய்த் தந்தார்!
*
5. காதலரின் ஓவியம் வரைந்தான்
கன்னியம் உள்ளார் என நினைந்தான்
மாதம் உருண்டோட மறு
கண்காட்சி வந்தது 'ஆ,
தீது புரிந்தார்!'
என உணர்ந்தான்.
*
6. நல்லையர் நெஞ்சுருகி நைந்தார்
நம் பெருமான் "வா!" என்று வந்தார்
"நில்லையா!" என்றடியார்
நேரே போய்த் தம் மனைவி
செல்லம்மாள் சேலையுள் மறைந்தார்.
*
7. தொலைபேசியிற் பேசிப் பேசித்
தொந்தரவுக் குள்ளானான் காசி
மலரை மணந்தான்! எனினும்
வாழ்கின்றான், மீண்டும் அதே
தொலைபேசியிற் பேசிப் பேசி.
*
8. கம்பர் காவியத்தைச் செய்தார்
கண்டபடி ராவணனை வைதார்
எம்போல்வார் இன்றெடுக்கும்
இவர் விழாவுக்கு இங்குவர
நம்பிக்கையாக விசா எய்தார்.
*
9. குலோத் துங்கன் வாகையொடு
மீண்டான்
குவலயமே நடுங்க அரசாண்டான்
"உலாத் தங்கள் பேரில் இதோ!".
ஒரு புலவர் குரலெடுத்து
"நிலாத் திங்கள்..."
எனத் தொடங்க மாண்டான்.

# காதலர் நல்லவரா கெட்டவரா...?

விரும்புபவை அனைத்தும் நல்லவைதான் என்று அர்த்தமில்லை. காதலும் அப்படித்தான். உங்களுக்குப் பிடித்திருக்கிற காரணத்தினாலேயே உங்கள் காதலர் நல்லவராகத்தான் இருப்பார் என்பதற்கில்லை.

காதலர் எப்படிப்பட்டவர் என்று தெரிந்துகொள்ள இதோ சில டிப்ஸ்...

இதயத்தில் தொடங்கிக் கண்களில் முடிகிற காதலெல்லாம் கதைகளுக்குத்தான் சரி. நிஜ வாழ்க்கைக் காதல்களில் உடற் கவர்ச்சியே பிரதானம். உங்கள் காதலர் கண்களைப் பார்த்துப் பேசுவதில்லையா? சதா சர்வ காலமும் செக்ஸ் பேச்சுக்கே முக்கியத்துவம் தருகிறாரா? எதேச்சையாகத் தொடுகிற மாதிரி உங்களிடம் சில்லறை சில்மிஷங்கள் செய்கிறாரா? காதலர்களின் மன நெருக்கத்துக்கு செக்ஸ் அவசியம் என்கிற ஆண்களின் ரகமா உங்கள் காதலர்? அவரிடம் கல்யாணம் வரை ஜாக்கிரதையாகவே இருங்கள். அவருக்கு உங்களை விட உங்கள் உடல் மீதும், இளமையின் மீதும்தான் மோகம் அதிகம்.

* காதலிக்க ஆரம்பித்த புதிதில் அதைப் பற்றி வெளியே சொல்ல எல்லாருக்கும் தயக்கம் இருக்கத்தான் செய்யும். ஆனால் வருடக் கணக்கில் காதலித்தும், தன் காதலை நண்பர்கள், உறவினர்கள் என யாரிடமுமே சொல்லாமல் மறைத்துக் கொண்டிருக்கிறாரா? உங்கள் காதலர் உங்களுக்கு எந்த நிமிடமும் குட்பை சொல்லலாம். ஜாக்கிரதை!

* ஜன நடமாட்டம் அதிகமில்லாத இடங்களுக்கும், வெளிச்சமில்லாத பகுதிகளுக்கும் மட்டுமே உங்களை அழைத்துச் செல்ல ஆசைப்படுகிறாரா? அவர் உங்களைக் கவுக்கப் பார்க்கிறார் என்று தெரிந்து கொண்டு, அவருடன் தனிமையில் செல்வதைத் தவிருங்கள்.

* உங்கள் காதலரைப் பற்றி உங்களுக்கு என்னவெல்லாம் தெரியும்? அவரது வேலை, குடும்பப் பின்னணி, நண்பர்கள் வட்டம் என எதையுமே உங்களிடம் சொல்லாமல் மழுப்புகிறாரா? அவர் நம்பிக்கையானவர் இல்லை எனப் புரிந்துகொண்டு விலகுங்கள்.

* உங்கள் வேலை, சம்பளம், சொத்து விவரங்கள் போன்றவற்றைப் பற்றியே அதிகம் பேசுகிறாரா? அவருக்கு நீங்கள் முக்கியமில்லை.



நீங்கள் கொண்டு வரும் பணம்தான் முக்கியம். இப்படிப்பட்ட நபர் உங்களுக்கு ஏற்றவர் இல்லை.

* உங்கள் காதலுருக்கு உங்களைப் பிடிக்குமா? அப்படியானால் உங்களுக்குப் பிடித்த எல்லாமும் அவருக்குப் பிடிக்க வேண்டும். உங்கள் உறவினர்களையும், நண்பர்களையும் வெறுத்து ஒதுக்கும் ஆசாமியாக அவர் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் மட்டும்தான் வேண்டும் என நினைத்தால் அது சுயநலம். அந்த எண்ணம் பிற்காலத்தில் உங்கள் வாழ்க்கையின் அமைதியைக் குலைத்துவிடும்.

* காதலிக்கிற காலத்தில் எல்லாக் காதலர்களுக்கும் பொஸஸிவ்னஸ் இருக்கும். அதில் தப்பில்லை. ஆனால் பொஸஸிவ்னஸின் அடுத்தக் கட்டம் சந்தேகம். அது அத்துமீறினால் ஆபத்து என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அண்ணனிடம், அப்பாவிடம், உறவுக்கார ஆண்களிடம் பேசினால் கூட சந்தேகப் புத்தியுடன் பார்க்கும், பேசும் ஆள் உங்கள் எதிர்கால நிம்மதியைக் கெடுக்கப்போகிற எமன் என முன்னாடியே தெரிந்து கொண்டு விலகுங்கள்.

* நீங்கள் வேலை பார்க்கும் இடத்துக்குத் திடீர் விசிட் அடிக்கிறாரா? நீங்கள் இல்லாத நேரமாகப் பார்த்து அலுவலகத்துக்கு ஃபோன் போட்டு உங்களைப் பற்றி விசாரிக்கிறாரா? இந்த மாதிரி வேவு பார்க்கிற ஆசாமியுடன் உங்களால் காலத்துக்கும் நிம்மதியாகக் குப்பை கொட்ட முடியுமா? அவர் நல்லவரில்லை என்று கண்டுகொள்ளுங்கள்.

* விட்டுக் கொடுக்கிற மனப்பான்மை காதலிக்கும் போதிலிருந்தே அவருக்கு இருக்க வேண்டும். நீங்கள் அவர் வலையில் விழுந்துவிட்டது தெரிந்து, எந்த விஷயத்துக்கும் உங்களை மிரட்டியே பணி வைப்பதோ, எல்லா விஷயங்களுக்கும் நீங்கள்தான் விட்டுக் கொடுக்க வேண்டும் என்பதோ சரி வராது. அப்படிப்பட்ட காதலைக் கண்ணை மூடிக்கொண்டு தூக்கி எறியுங்கள்.

* காதல் என்றால் அது கல்யாணத்தில் முடிய வேண்டும். ஆனால் கல்யாணப் பேச்சை எடுக்கிற போதெல்லாம் உங்கள் காதலர் கழுவுற மீனில் நழுவுகிற டைப்பா? அப்போது அவருக்குக் காதல் என்பது டைம் பாசிங். ஒரு வேடிக்கை. விட்டு விலகிடுதல் உங்களுக்குப் பாதுகாப்பு.

* காதலைத் தூக்கியெறிந்தவுடன் சில நாட்களுக்கு இதயத்தில் முள் தைத்த மாதிரி வலிக்கத்தான் செய்யும். அந்தக் காதலிலிருந்து நீங்கள் தப்பித்திருக்காவிட்டால் என்னாகியிருக்கும் என யோசித்துப் பார்த்து, ஆறுதலடையுங்கள். பெட்டர் லவ் நெக்ஸ்ட் டைம்!


செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர் தரமான சல்வார்களுக்கு தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



* ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
* கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
* ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் Bn

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 05- 04-2003

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு சல்வார்?
## செட்டிகுளம் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

க. சத்திய கௌரி,
இல'. 11, முகத்தான் குளம், செட்டிகுளம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



# இள நரை போகட்டும்....

இந்த வாரம் நெல்லிக்காயை எப்படி வீட்டு வைத்தியத்துக்குப் பயன்படுத்தலாம் என்று தெரிந்துகொள்வோம்.

* சோகை உள்ளவர்கள் தினமும் நெல்லிக்காயைத் துவையல் செய்து சாப்பிட்டால் குணம் பெறலாம். இரவில் சாப்பிடக் கூடாது.

* உங்களுக்குப் பசியே இல்லையா? நெல்லிக்காயை வேகவைத்து



கொட்டை நீக்கி அப்படியே ஒரு நாளைக்கு ஐந்து நெல்லிக்காய் வீதம் பத்து நாள் சாப்பிட்டால் போதும்.

* வாந்தி வருவது மாதிரி இருப்பவர்கள், பிரயாணத்தின்போது குமட்டல், வாந்தி வருபவர்கள் ஒரு நெல்லிக்காயை மென்று தின்றால் வாந்தி வராது.

* நெல்லிக்காய் இரண்டு, கொஞ்சம் துளசி, ஒரு கொத்து வேப்பிலை மூன்றையும் அரைத்து பத்து நாட்கள் தேமல், படை சொறி, சிரங்கு இருப்பவர்கள் மேலுக்குப் பூசி ஒரு மணி நேரம் கழித்து அரப்புத் தூள் போட்டுக் குளிக்க வேண்டும்.

* நெல்லிக்காயைக் காய வைத்து தூள் செய்து வைத்துக்கொண்டு அந்த தூளில் ஒரு கரண்டி அளவு தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டு ஒரு டம்ளர் சுடுநீர் அருந்தினால் இரத்தக் கொதிப்பு மட்டுப்படும்.

* நெல்லிக்காய், வெற்றிலை 3, பத்து மிளகு மூன்றையும் அரைத்து சிறு சிறு அடை போல தட்டி வெய்யிலில் காயவைத்து எடுத்து தேங்காய் எண்ணெயில் போட்டு வைத்து, அந்த எண்ணெயைத் தினம் தலைக்குத் தடவி வந்தால் முடி உதிரல், இள நரை போன்றவை அகலும்.

# சன் ஸ்ட்ரோக்...

நமது உடலுக்குள் அளவுக்கு மீறிய வெப்பம் ஊடுருவும் போது இரசாயன மாற்றம் ஏற்படுவதைத்தான் சன்ஸ்ட்ரோக் என்கிறோம். உடலிலிருந்து அதிகமான வெப்பம் வியர்வையாக வெளியேறுவதால் உடலில் இருக்கும் நீர் ஆவியாகும். தோலின் வெப்பம் தணியும்போது உடலின் வெப்பமும் குறைந்து விடுகிறது. நாம் சுவாசிக்கும் காற்று சூடாக இருப்பது, அதிக வெப்பம் தோலில் படுவது, காற்றில் ஈரப்பதம் குறைவாக இருப்பது போன்ற காரணங்களால் உடலிலிருந்து வெப்பம் வெளியேறுவது குறைகிறது. இத்தகைய சூழ்நிலையில் காற்றோட்டம் இல்லை என்றால் நிலைமை மோசம் அடைகிறது. ஆகையால் உடலில் வெப்பம் தங்கி அதிகமாக வெப்பத்திற்கு ஆளாகி அந்த வெப்பம் தணியாமல் சிலர் இறந்து போகவும் கூடும்.

* இந்த சன் ஸ்ட்ரோக்கால் பாதிக்கப்பட்டவர் நீண்டநாள் வியாதியில் உள்ளவராக இருந்தாலும் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து சிகிச்சை அளிக்க வேண்டும். வெப்பத் தாக்குதல் மூன்று விதமாக நம்மை தாக்கும்.

1. நீண்ட நேரம் கடுமையாக வெயிலில் வேலை செய்யும்போது அதிகமான வியர்வையுடன் உப்புச் சத்து வெளியேறுவதால் தசை இழுக்கப்படுகிறது. இதனால் நோயாளியின் மற்ற உறுப்புக்களும் பாதிக்கப்பட்டு



மோசமாகிறது.

2. உடலில் அதிகமாக வெப்பம் இருக்கும்போது தோலில் இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. ஆகையால் வெப்பம் தோலிலிருந்து வெளியாகும். இந்த பாதிப்பு வெய்யிலில் அதிக நேரம் வேலை பார்ப்பவர்களுக்கு ஏற்படும்.

* மூன்றாம் நிலையில் சன் ஸ்ட்ரோக்கால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் கவலைக்கிடமான நோயாளிகளாக இருப்பார்கள். இது சாதாரணமாக கடும் வெய்யிலில் ஏற்படும். இந்த நிலையில் உள்ளவர்களை உடனே மருத்துவமனையில் சேர்க்க வேண்டும்.

* சன் ஸ்ட்ரோக்கின் அறிகுறிகள், தலைவலி, தலைசுற்றுதல், மயக்கம், பேச்சு இழப்பு, கண்பார்வை கலக்கம் போன்ற அறிகுறிகள் தோன்றும். மேலும் மூச்சுத் திணறலும் தோல் பகுதியில் வறட்சியுடன் நாடித் துடிப்பும் அதிகமாகும்.

### முதலுதவி

வெப்பத்தால் பாதிக்கப்பட்டவரை நிழலான இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். உப்பு கலந்த தண்ணீர் அல்லது எலக்ட்ரால் பவுடர் கலந்து கொடுக்கலாம். உடம்பு முழுவதும் தசைகள் இழுத்துக்கொள்ளாமல் இருக்க மசாஜ் செய்யலாம். தலையில் நெற்றியில் இரத்தக் குழாய்களில் வெடிப்பு ஏற்படுவதைத் தடுக்கத் துணியை உடல் மீது போடலாம். இத்தகைய முதலுதவிக்குப் பிறகு நோயாளியை உடனே அருகில் இருக்கும் மருத்துவமனையில் சேர்க்க வேண்டும்.

### சன் ஸ்ட்ரோக் வராமலிருக்க

* கோடையில் இரண்டு வேளை குளிப்பது நன்மை தரும். வெறும் வயிற்றுடன் வெய்யிலில் வேலை செய்ய வேண்டாம். நடக்க வேண்டாம். தலைக்குத் தொப்பியும், குளிர் கண்ணாடி அணிவதும், பருத்தி ஆடை அணிவதும் வெப்பத்தைக் குறைக்கும். இளநீர், மோர், பழரசம் போன்றவை வெய்யிலுக்கு நல்லது. நீண்ட நேரம் வெய்யிலைத் தவிர்ப்பது நல்லது. அதிகம் தண்ணீர் குடிக்க வேண்டும்.

*படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.*

## சிந்தித்துப் பார்க்க...

# அறிவில் சமத்துவம் வேண்டும்!

மனித சமுதாயம், சகல துறைகளிலும் சகல வழிகளிலும் சமமாக வளர்ச்சி பெற்று சகலரும் உயரும் வரை, அறிவு ஜீவிகளிலிருந்து தப்ப வழியில்லை. அப்படிப்பட்ட வளர்ச்சி எந்தக் காலத்திலும் வரப்போவதில்லை. உடலாலும், உள்ளத்தாலும் எல்லாரும் ஒரேவிதமான வளர்ச்சி பெறுகிற சமுதாயம் உப்புச்சப்பற்றது. முட்டாள்தனமானது.

ஒரு சமுதாயத்தில் ஏதாவது ஒருவர் சிறப்பாகத்தான் இருப்பார். ஒரு திறமை மிக்க சித்தார் கலைஞர் மற்றவரை மிஞ்சி வாசிக்கக் கூடும். இதைத் தடுக்க வழியே இல்லை. ஒரு நாட்டியக் கலைஞர் மற்றவர்களை விட உயர்ந்து விளங்கக் கூடும். அதை ஒன்றும் செய்ய முடியாது. இரண்டையும் இரண்டையும் கூட்டத் தெரியாதவர் கூட்டத்தில் ஒரு ஈன்ஸ்டீன் தோன்றக் கூடும். எந்தச் சூழலிலும் அறிவாளிகள் மேலோங்கித்தான் இருப்பார்கள்.

நாம் பழைய அறிவாளிகள் விஷயத்தில் சலித்துப் போய், புதிய அறிவாளிகளை உருவாக்குகிறோம். இது இயற்கை, மாறிவரும் சமுதாயச் சூழலில் சிலவகை அறிஞர் கூட்டம் பயனற்றுப் போய்விடும். புதுவகை அறிஞர்களை நாம் பதிலுக்குக் கொண்டு வருவோம்.

ஒரு இரத்தப் புரட்சி மூலம் ரஷ்யா அப்படிப்பட்ட மாற்றத்தைக் கொண்டு வந்தது. பழைய அறிஞர் கூட்டத்தை அது ஒழித்துக் கட்டியது. ஒரு புதிய வர்க்கம் அங்கே தோன்றியது. அது ஆளுமை கொண்டது. பழைய எந்தக் கூட்டத்தையும் விட, இந்தப் புதிய வர்க்கம் அதிக அதிகாரம் பெற்றது. சீனாவிலும் இதே கதைதான்.

அறிவக் கூர்மையில் வேறுபாடு இருக்கும் வரை, திறமையில் வித்தியாசம் இருக்கும் வரை, அறிவும் திறமையும் மிக்க சிலரால் சமுதாயம் ஆளப்படுவது தவிர்க்க முடியாதது. அவர்களால் ஆளப்படும் கூட்டமும் இருக்கவே செய்யும். இரு வகையினரும், ஒருவருக்கு மற்றவர் கட்டாயத் தேவை. பழைய அறிஞர் போய்ப் புதிய அறிஞர்கள் வருவார்கள். காரணம், பழைய அறிவை நாம் மடத்தனம் என்று நினைக்கிறோம். கதை இப்படியே போய்க்கொண்டுதான் இருக்கும்.

இன்றும் கூட, புத்திசாலித்தனத்தில் சமத்துவம் வேண்டுமென்று யாரும் சொல்வதில்லை. அறிவில் குறைந்தவர்கள், அறிவாளிகளுக்குச் சமமாகத் தாம் உயர வேண்டுமென்று கேட்பதில்லை. இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு அப்படிப்பட்ட முழக்கத்தை நாம் கேட்கலாம்! ஏனென்றால் விஞ்ஞானம், ஐம்பது ஆண்டுகளில், அறிவக் கூர்மையை அப்படி வளர்க்கும் திறமையைப் பெற்றுவிடும்.

அப்போது ஒவ்வொரு குழந்தையும் தான் முட்டாளாக இருக்கப் போவதில்லையென்றும், எல்லாரையும் பேல அறிவு பெறத் தனக்கும் உரிமை இருப்பதாகவும் கூறும். ஆனால், அதை இன்று சொல்ல முடியாது. அதற்கான வாய்ப்பு இப்போது இல்லை.

*ஓஷோவின் ஆனந்த நடனம் நூலிலிருந்து....*

**இலக்கிய நயம்**

**தருவது முழடிஸ்யன்**

பளிச்சென்றிருந்தது பகல். அருணனுக்கு விவரிக்க முடியாத உற்சாகம் தோன்றியது. மனது ஒளிமயமாக இருந்தது. இப்படியான உற்சாகப் பொழுதுகளுக்கு எப்போதும் காரணத்தைக் கண்டுபிடித்துச் சொல்லிவிட முடியாது. அது அப்படித்தான். சில சமயம் மனதில் இருள் மூடிக் கிடக்கும். சில சமயம் மனது நிறைய வெளிச்சமாக இருக்கும்.

ஆனால் இப்போதைய வெளிச்சத்துக்குக் காரணம் அவன் எதிரே இருந்த அக்ஷயா.

இருவரும் நெடுநேரம் எதுவும் பேசாமல், இயற்கையின் ஆன்மாவிலிருந்து பொங்கியெழும் மௌனத்தின் மொழிகளைக் கேட்டுக்கொண்டும், ஒருவரையொருவர் விழிகளால் பருகியபடியும் இருந்தார்கள்.

வெகு சமீபத்திலிருந்ததால் அவள் அழகின் அம்சங்கள் அருணனைப் பைத்தியமாக அடிக்கும் நிலைக்குக் கொண்டுவந்திருந்தன.

வெளியேறிய கண்களுடன் அவளைப் பார்த்தான்.

அவள் சந்திர வதனமும், கன்னங்கரேலென்ற குழல்களும் அவை கலைந்திருந்த நிலையிலும் மிகைப்பட்ட கவர்ச்சியைக் காட்டின. மூங்கிலை நினைவுபடுத்துபவையாக அவள் தோள்களிலிருந்து நீண்ட கைகளும், சிறுத்துத் தளதளத்திருந்த இடையும், தரையில் படிந்திருந்த பின்னெழில்களும் பார்க்கும் எவரையும் உன்மத்தம் கொள்ளும்படி அமைந்திருந்தன.

கருவண்டுக் கண்கள் இரு கறுப்பு விற்களுக்குக் கீழே விஷமமாகப் பார்த்தன.

அருணன் மூளைக்குள் விஷம் போல் ஏறிக்கொண்டிருந்த காமத்தை, எதையாவது பேசிச் சமப்படுத்திக்கொள்ள விழைந்தான்.

"இரண்டு பிள்ளைகளுக்கிடையில்தானே இடைவெளி வேண்டும் என்கிறார்கள். நமக்குள்ளும் எதற்காக இந்த இடைவெளி?"

அக்ஷயாவின் அழகிய நயனங்கள் சற்று விரிந்தன. நீரோட்டம் மிகுந்த அவள் செவ்விய அதரங்களிலிருந்து மிக மதுரமாகச் சொற்கள் உதிர்ந்தன. "விவாகம் முடியும் வரை இந்த இடைவெளி இருக்கட்டும்!"

அருணன் விழிகள் அவளது அழகிய உருவம் பூராவிலும் சஞ்சரித்தன. சற்றே நகைத்த கண்களோடு சொன்னான்:

"கல்யாணம்தான் நமக்குள்ளே தடை என்றால் அதை இப்போதே முடித்துவிடலாம்."

அவனை ஏறெடுத்து நோக்கிய அவள் விழிகளில் வியப்பு விழிகளில் வியப்பு வழிந்தது.

"பெற்றோரும் பெரியவர்களும் மற்றோரும் மந்திரங்களும் சடங்குகளும் இல்லாமல் கல்யாணமா? என்ன விளையாடுகிறீர்களா?"

"விளையாடவில்லை. நீ சொல்வது அங்கீகரிக்கப்பட்ட திருமண முறைகளில் ஒரு வகைதான். வேறும் இரு திருமண முறைகள் நம் தமிழர் வாழ்வில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது."

## குவளை மலரிலும் அழகிய கண்ணாள்... மயிலின் சாயலின் அழகிய பெண்ணாள்....

"வேறும் முறைகளா?"

"ஆமாம் அக்ஷயா7 காந்தர்வ விவாகம், ராக்ஷச விவாகம் என்று மேலும் இரு விவாக முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.நீ கேள்விப்பட்டிருப்பாய். யாருமறியாமல் இரகசியமாக மணம் புரிந்து கொள்வதற்குப் பெயர் காந்தர்வ விவாகம். அது போல, பெண்களை அவர்கள் இருப்பிடங்களிலிருந்து தூக்கிச் சென்று மணம் புரிவது ராக்ஷச விவாகம்.."

"ம.. நீங்கள் என்ன செய்துகொள்வதாக உத்தேசம்?" குறுகுறுவென அலைந்த அவள் விழிகளில் இகழ்ச்சி வழிந்துகொண்டிருந்தது.

"உன்னைத் தொட விவாகம் அவசியமென்றால் இரண்டில் ஒன்றை இப்போதே செய்துகொண்டு..."

"செய்துகொண்டு...?" உதடுகளை மடித்துக் கண்களில் சிரிப்பை உதிர்த்துக் கேட்டாள் அக்ஷயா.

அவளை நெருங்கிச் சென்ற அருணன், தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அவளைத் தொடாமல், "தேவையென்றால் இப்போதே நாம் விவாகம் செய்துகொண்டுவிடலாம்..." என்றான் இரகசியமான குரலில்.

அக்ஷயா சிரித்தபடியே எழுந்து அவன் பின்புறமாக வந்தாள். அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. மெல்லக் குனிந்து இரு பூங்கரங்காலும் அருணன் கழுத்தை வளைத்தாள். இரு பூச்செண்டுகள் முதுகில் அழுந்தியதை அவன் உணர்ந்தான்.

அவ்வளவுதான் அருணன் வேகமுற்றான். பின்புறமாகத் தன் கைகளை ஏவி அவள் முதுகை வளைத்து எதிர்ப்புறமாக அவளை இழுத்தான். அப்படிச் சுற்றி இழுக்கப்பட்ட அக்ஷயாவின் மென்மையான உடற்கூறுகள் அவன்மீது தவழ்ந்து திரும்பியதால் உணர்ச்சியலைகளில் திக்குமுக்காடிய அருணன் பெருமூச்சு விட்டு, அவன் முன்னே வந்துவிட்ட அந்த எழில் தேவதையைத் தனது இரு கைகளாலும் வளைத்து இறுக்கினான்.

அவன் கை படப் பட அவள் அங்கங்கள் துடித்தன.

உடலோடு உடல் நெரிந்த நிலை; உணர்ச்சிகள் அத்துமீறித் தெறிக்கும் நிலை; அறிவு பறிபோன நிலை; ஆசை அலைகள் உடலெங்கும் ஊடுருவி மயக்கமூட்டிய விவரணத்திற்கு அப்பாற்பட்ட தனி சொர்க்கம்....

அச் சொர்க்கத்திற்குள் ஈர்க்கப்பட்ட இருவருக்கும் வாய்ச் சொற்கள் பயனின்றிப் போயின. சொல் இல்லையே தவிர செயல் நின்றுவிடாத நேரம் அது.

உடல்கள் இரண்டும் மேலும் மேலும் இறுகிக்கொண்டதால் ஏற்பட்ட இன்ப வலியில் இருவரும் சுகத்தின் சுனையில் ஆழ்ந்து கிடந்தனர்.

எத்தனை மணித்துளிகள் கடந்தனவோ... இருவரும் சுய நினைவிற்கு மீண்டபோது சூரியன் மேற்கில் சாிந்துவிட்டிருந்தான்.

அக்ஷயா அவசரமாக அவனிடமிருந்து விடைபெற்று வீடு நோக்கி நடந்தாள்.

நீண்ட கூந்தல் பின்புறம் அசைய அவள் நடந்து செல்லும் அழகைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தான் அருணன்.

'மலைச்சாரலின் வளப்பத்தால் அங்கேயுள்ள சுனைகளில் பூத்திருக்கும் அகன்ற இதழ்களையுடைய குவளை மலரும் கூட, அதோ கூந்தலசைய நடக்கும் அவளின் கண்களைப் போல் அழகாய் மலர்ந்து விழிக்க முடியாது. அந்த மலைகளில் உலவும் அழகிய மயில்களுக்கும் இவள் சாயலைப் பெற்றுக்கொள்ளுதல் சாத்தியமில்லை...'

ஆழ்ந்த பெருமூச்சொன்று வெளிப்பட்டது அருணனிடமிருந்து.

**குன்றநாடன் குன்றத்துக்**
**கவாஅன், பைஞ்சுனைப்**
**பூத்த பகுவாய்க் குவளையும்**
**அஞ்சலோதி யசைநடைக்**
**கொடிச்சி கண்போன்**
**மலர்தலு மரிதிவள் தன்போற்**
**சாயன் மஞ்ஞைக்கும் அரிதே.**

(ஐங்குறுநூறு-299)

## சிந்தியா பதில்கள்

**★ மீண்டும் சண்டை துவங்குமாக இருந்தால் அதற்கு யார் காரணமாக இருப்பார்கள்?**

ஏ.எல்.எம். நிசாத், காத்தான்குடி-06.

*துவங்குகிறவர்களுக்கு எதிராக ஹர்த்தாலும் கடையடைப்பும் நடத்த முடியாமலிருக்கும் நாம்!*

⊠✍⊠

**★ எட்டாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் ஹைலைட் என்ன?**

பி.எம்.எம். பைசல், கரம்பை.

*இறுதிப் போட்டி. நாணயச் சுழற்சியில் கங்குலி வென்றுவிடுகிறார். துடுப்பாட்டமா? களத்தடுப்பா? கங்குலி சொல்ல வேண்டும். அவுஸ்திரேலியாவையே முதலில் துடுப்பெடுத்தாடும்படி சொல்கிறார் கங்குலி. அப்போது பொன்டிங் சிரித்தாரே ஒரு சிரிப்பு. அதுதான் ஹைலைட்!*

⊠✍⊠

**★ உங்கள் சின்ன வயது ஆசைகளில் ஏதாவது நிறைவேறியிருக்கிறதா?**

கே. ஜெகஜீவன், பூண்டுலோயா.

*நிறைவேறியிருக்கிறது. அம்மா என் தலைமுடியைச் சீப்பால் இழுத்து வாரும்போது, தலைமயிர் இல்லாமல் இருந்தால் நல்லாயிருக்குமே என்று சின்ன வயதில் நினைத்திருக்கிறேன்.*

⊠✍⊠

**★ ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளைப் பார்க்காமல் ஒருநாள் கூட இருக்க முடியவில்லை. என் காதலியை அடிக்கடி பார்ப்பதற்கு ஏதேனும் உபாயங்கள் சொல்லுங்கள்.**

மயூரன், நீர்கொழும்பு.

*திருமணம் செய்துகொள்ளுங்கள்!*

⊠✍⊠

**★ திருமணம் முடித்தவர்கள் தேனிலவு போவது ஏன்?**

க.அஜந்தகுமார், அக்கரைப்பற்று-07.

*ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் எங்காவது போய் மறந்துவிட்டு வருவதற்காக இருக்கும்!*

⊠✍⊠

**★ நடிகர் கமல்ஹாசன், இயக்குநர் கமல்ஹாசன்-உங்கள் வாக்கு யாருக்கு?**

ஏ.ஜீவா பிரியதர்ஷி, மட்டக்களப்பு.

*அவருக்குள்ளே இருக்கின்ற நடிகரை இயக்கிக்கொண்டிருக்கும் கமல்ஹாசனுக்கு!*

⊠✍⊠

**★ ஈராக் யுத்தில் சி.என்.என்.னும், பி.பி.ஸி.யும் தரும் செய்திகளைப் பார்த்தீர்களா?**

கே.எஸ்.பேரின்பன், கந்தளாய்-02.

*அன்று நடுநிலை ஊடகங்கள் என்று நம்பச் சொன்னவை. இன்று எந்த அரசாங்கங்களின் ஊதுகுழல்கள் என்று காட்டிவிட்டன.*

⊠✍⊠

**★ மேற்கத்தியப் பாடல்களில் என்ன இருக்கிறதென்று அந்த இரசிகர்கள் இப்படி உருகுகிறார்கள்?**

பி.விக்னேஸ்வரன், ஹட்டன்.

*ஒரு உராணம்: 70கள் 80களில் உலகைக் கலக்கிய பொப் இசைக் குழுவினர் 'அபா' (ABBA). இவர்களது பிரபலமான ஒரு பாடலில், காதலில் தோற்ற பெண், இன்னொருத்தியோடு போய்விட்ட காதலனைக் கேட்பதாக வரும் வரிகள்:*

"அவள் முத்தமிடுகிறாளா?
அது என் முத்தத்தைப் போலிருக்கிறதா?
அவள் உன் பெயரைக் கூப்பிடும் போது
நான் கூப்பிடுவது போல உணர்கிறாயா?"

⊠✍⊠



**★ ரம்பா என்னவானார்?**

இ.தவக்குமரன், திருகோணமலை.

*முன்னாள் நடிகையானார்!*

⊠✍⊠

**★ ஆசையை ஒழித்துவிடுங்கள் வாழ்வு சிறக்கும் என்கிறார்கள். திரைப்படப் பாடல் ஒன்று கூட, "ஆசை துறந்தால் அகிலம் உனக்கு..." என்கிறது. ஆசையை விட்டவர்களுக்குத்தானா இந்த உலகம்?**

எம்.எம்.எம். மிஹ்லார், குருநாகல்.

*ஆசையைத் துறந்துவிட்டால் பின் அகிலம் எதுக்கு?*

⊠✍⊠

**★ இப்போதெல்லாம் விவகாரமான ஜோக் எதுவும் நீங்கள் சொல்வதில்லையே?**

எச்.எம்.நிபாஜி, திருகோணமலை.

*இந்த விவகாரம் போதுமா பாருங்கள்.*

*சிநேகிதி: உன் கணவர் நித்திரையில் குறட்டை விடுவாராமே!*

*புதிதாய்க் கல்யாணமானவள்:*

*தெரியவில்லையே! கல்யாணம் ஆகி ஒரு கிழமைதானே ஆகிறது.*

⊠✍⊠

**★ பின்னணிப் பாடகி ஸ்வர்ணலதாவைப் பிடிக்காதா சிந்தியாவுக்கு? அவரை மறந்துவிட்டீர்களா?**

கி. அருள்ராஜ், கொக்காகலையூர்.

*மாலையில் யாரோ மனதோடு பேசவும், போறாளே பொன்னுத்தாயி பொல பொலவென்று கண்ணீர் விட்டும்... நெஞ்சை உருக்கிக் கொண்டிருக்கும் வரை அந்தக் கணீர்க் குரலுக்குரியவரை எப்படி மறக்க முடியும்.*

⊠✍⊠

**சமீபத்தில் என்ன வாசித்தீர்கள்?**

எஸ்.ரேணு, சூசைப்பிள்ளையார்குளம்.

*அமெரிக்க எழுத்தாளர் ஜாக் லண்டனின் 'கானகத்தின் குரல்'. 1958 இலேயே பெ.தூரன் அவர்களால் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்ட இந்த நாவலைப் புதுமைப்பித்தன் பதிப்பகத்தினர் இப்போது மறுபதிப்பாக வெளியிட்டிருக்கிறார்கள்.*

*பக் என்ற ஒரு நாயைப் பற்றிய கதை. அன்பு, கோபம், வன்முறை, பழிவாங்கும் உணர்வு, குரோதம், நயவஞ்சகம், மகிழ்ச்சி, சகோதர பாசம் போன்ற பல்வேறு குணங்களும் உருவாகும் சூழ்நிலையையும், தொல்லைகள், கொடூர அடக்குமுறைகளுக்கு ஆட்படும் போது என்னதான் அமைதியும், மேன்மையுமாக வாழ்கிற ஜீவனும் தவிர்க்க இயலாமல் மீண்டும் ஆதி குணங்களுக் குத் திரும்ப நேர்வதையும் அருமையாக வெளிப்படுத்தியிருக்கும் நாவல்.*

⊠✍⊠

**★ சிந்தியா, தொலைக்காட்சித் தொடர்கள் பார்ப்பதுண்டா?**

ஏ. சிவராகினி, திருகோணமலை.

*டெல்லிச் சிறைச்சாலையில் உண்மையில் நடந்த சம்பவம் என்று எங்கோ படித்தேன். யாரோ ஒரு வள்ளலின் உபயத்தில் ஒரு நாள் முழுவதும் சிறைக்குள் கைதிகள் தொலைக்காட்சி பார்ப்பதற்கு ஒழுங்கு செய்திருந்தார்கள். அடுத்த நாள், எப்படியிருந்தது என்று கேட்டதற்கு ஒரு கைதி சொன்ன பதில்: "இதுவும் தண்டனையின் ஒரு பகுதி என்று நினைத்தேன்."*

# ரயில் பயணங்களில்

**கிரான்ட்பாஸ் ச.இரா.பாலகிருஷ்ண ஐயர்**

வினோத்துக்குப் பொழுது போகவில்லை. அன்று அவனது காரியாலயத்தில் வேலைகளும் நெருக்கடியில்லை. சனக்கூட்டமும் இல்லை. அந்நேரம் சிந்தித்துப் பார்த்தான். தனது இலவச புகையிரதப் பயணச்சீட்டு ஞாபகம் வந்தது. அவன் ஒரு அரச ஊழியன். அதனால் அவனுக்கு வருடத்துக்கு மூன்று செற் புகையிரத இலவச பயணச்சீட்டு உண்டு. அவன் இந்த வருடம் இன்னும் எவ்வளவு பயணச்சீட்டு உள்ளது என அறிய அது சம்பந்தமாக கடமையாற்றும் ரகுவிடம் போனான். ரகுவும் பதிவேட்டில் பார்த்துவிட்டு அந்த வருடத்துக்குரிய பயணத்துக்கு ஒரு செற்தான் (போக வர) இருக்கிறது என்று சொன்னான். வினோத் இதற்கு முன் இரண்டு செற் பாவித்தது அப்போதான் அவனுக்கு ஞாபகம் வந்தது. வருட இறுதி ஆகிவிட்டதால் மீதி இருந்ததையும் பாவிக்கலாம் என்று யோசித்து அன்று மாலை வீடு வந்தான். வினோத்துக்கு இரண்டு பிள்ளைகள் பத்து வயதிலும் பதினொரு வயதிலும். வீடு வந்தபின் தன் மனைவி கோகிலாவிடம் புகையிரத பயணச்சீட்டைப் பற்றிக் கூறி "இம்முறை எங்கு போகலாம்" என்று கேட்டான். அவன் மனைவி கோகிலா மிகவும் சிக்கனமானவள். வீட்டுச் செலவு மற்றும் வேலைகள் எல்லாம் திட்டமிட்டே செய்வாள். அதனால் அவனிடம் "நாங்கதானே இரண்டு முறை பயணம் செய்துவிட்டோம் கண்டி கதிர்காமம் என்று கிட்டடியில். அந்தச் செலவைக் கூட ஈடு செய்ய முடியவில்லை. கடன்கள் இன்னும் தீர்த்து முடியவில்லை. அதனால் இம்முறை பயணம் வேண்டாம். என் அண்ணாவும் அண்ணி கனகாவும் கண்டி பார்க்க வேணும் என்று நெடுக சொன்னபடி இருக்கிறார்கள். பேசாமல் நீங்கள் விடுமுறை போட்டுவிட்டு இந்த இலவச பயணச்சீட்டை அவர்களுக்குக் கொடுங்கள். கஷ்டமான நிலையில் அண்ணா அண்ணி இருக்கிறார்கள்" என்றாள். வினோத்துக்கு அப்படிச் செய்ய விருப்பமில்லை. ஒருவருடைய இலவசப் பயணச்சீட்டை இன்னொருவர் பாவிப்பது குற்றமாகும். அதுவும் ஒருவரின் அரச சலுகைகளாக அந்த ஊழியருக்குக் கொடுக்கப்படுவது. அப்படிப் பாவிப்பது தெரிந்தால் விபரீதமாகிவிடும் என்பது அவனுக்கு தெரிந்ததே. என்றாலும் கோகிலாவின் பேச்சைத் தட்ட அவனால் முடியவில்லை. அரை மனதுடன் ஒப்புக்கொண்டான். மறுநாள் கரியாலயத்தில் இரண்டு நாள் விடுமுறை போட்டுவிட்டு குடும்பத்துடன் போவதாக இலவச பயணச் சீட்டுகளையும் பெற்றுக்கொண்டு வந்தான். கோகிலாவுக்கு மகிழ்ச்சியாயிருந்தது. தனது அண்ணன் ரகுவிடம் அதைக் கொடுத்து அண்ணியையும் பிள்ளைகளையும்



கூட்டிப் போகச் சொன்னாள் கண்டிக்கு. அவளின் அண்ணி கனகாவுக்கும் சந்தோஷம். தன் அடுத்த வீட்டுச் சினேகிதி உஷாவிடம் தாங்கள் கண்டி போவதாயும் வினோத் தங்களுக்குப் போக இலவச பாஸ் தந்ததையும் பெருமையாகக் கூறினாள். இதை உஷா தனது கணவன் வீடு வந்தபோது கூறினாள்.

உஷாவின் கணவன் ரமேசுக்கு வினோத்தை அவ்வளவு பிடிக்காது. நீண்டகாலமாக ஏதோ விடயத்தில் தகராறு. இருவரும் பேசுவதில்லை. இதைக் கேட்டதும் அவனுக்கு இப்போ அவனைப் பழிவாங்கும் எண்ணம் வந்துவிட்டது. அதற்கான சந்தர்ப்பம் இதுதான் என அவன் மனது கூறியது. வினோத் அவனுடைய இலவச அரச பயணச்சீட்டை மற்றவருக்குக் கொடுத்து துஷ்பிரயோகம் செய்வது தெரிந்ததும் அவனுடைய மச்சானும் குடும்பமும் பயணம் செய்யும் முதல் நாளே புகையிரதத் திணைக்களத்துக்கும் புகையிரத நிலைய அதிபருக்கும் இரகசியமாக அருகில் இருந்த கொம்யுனிகேஷன் நிலையத்துக்குப் போய் போனில் தகவல் அறிவித்துவிட்டான். மறுநாள் காலை கடுகதி வண்டியில் கோகிலாவின் அண்ணா குடும்பம் கண்டிக்குப் புறப்பட்டது. ரமேசும் புகையிரத நிலையம் வரைபோய் அவர்களுக்குத் தெரியாமல் அவதானித்துவிட்டு வீடு வந்தான். அன்று பகல் அவன் சாப்பிட்டுக் கொண்டே தன் மனைவி உஷாவிடம் தான் செய்த திட்டத்தைக் கூறினான். அதைக் கேட்ட அவன் மனைவிக்கு அவன் செய்த காரியம் பிடிக்கவில்லை. அவனை ஏசித் தீர்த்தாள். ரமேசும் அதைப் பொருட்படுத்தாமல் இந்நேரம் நடு வழியில் வகையாகச் சிக்கியிருப்பார்கள், எங்கே போய்ச்சேரப் போகிறார்கள் கண்டிக்கு என்று குதூகலத்துடன் சாப்பிட்டுவிட்டுப் படுக்கப் போனான்.

ஆனால் ரமேஷ் கொடுத்த தகவலைப் பெற்ற அந்தப் புகையிரத நிலைய அதிபர் வினோத்தின் மாமா என்றும் முன்னெச்சரிக்கையாக, பயணம் செய்யவந்த கோகிலாவின் அண்ணன் குடும்பத்துக்கு விஷயத்தைக் கூறித் தன்செலவில் அவர்களுக்கு அதே வகுப்புக்கு டிக்கட் எடுத்துக் கொடுத்துப் புத்திமதி கூறி அந்த விபரீதத்திலிருந்து காப்பாற்றி அனுப்பி வைத்ததும் ரமேசுக்கு எங்கே தெரியப்போகிறது?

---

# நீங்காத நினைவுகள்

**எஸ். மனோகரன்**


*ஸ்ரீபாத கல்விக் கலாசாலை*

புரண்டு புரண்டு படுத்தும் தூக்கம் கண்களைத் தழுவ மறுக்கின்றது. நடு இரவின் நிசப்தத்திலே கடந்த கால கசப்பான நினைவுகள் தொடந்து துரத்துவதால் தூக்கத்தைத் தொலைத்து எத்தனை இரவுகள் இம்சிக்கப்படுவது. நாளைய விடியலாவது வாழ்வில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்துமா? என்ற சிந்தனையோடு தூங்கிப் போனான் சந்தோஷ்.

வானகத்தில் நடக்கும் அற்புத இயக்கம் தொட்டு வையகத்தில் விளைகின்ற விசித்திர நிகழ்சிகளெல்லாம் கருணை வடிவான கடவுளின் செயல்கள் என்றால் அப்பாவிகளை அவஸ்தைப்படுத்துவதும் அவன் செயலே... மனித நேயத்தை மலிவாய் விற்கும் மனிதனோ... வலிமையினால் எளியவனை அடக்கி, ஒடுக்கி அல்லற்படுத்திக் கொண்டிருக்கிறான். இறைவனின் படைப்பில் பேதங்கள் கிடையாது. துன்பம் செய்தோரைச் கூட தூசிக்காத அவனின் படைப்புகள் மட்டும் ஏன் இப்படி விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது என்று சந்தோஷ் சிந்தனை செய்யாத நாளே கிடையாது.

அவரவர் தோற்றங்களை மனிதன் விரும்பித் தேர்ந்தெடுப்பதில்லை. அந்தளவுக்கு மனிதனுக்கு வசதி வாய்ப்புகளும் வழங்கப்படவில்லை. உடலும் உள்ளமும் இனிமையுடைய நல்லவர்கள் எம்மிடையே சிலர். அந்த வகையில் சந்தோஷ் உடலால் மட்டுமே ஊனமானவன். ஆனால் மனதால் மகத்துவமானவன். புறவடிவத்தில் அழகிய தோற்றம் பெற்றிருந்தாலும் உள்ளடகத்தில் கசப்பான 'தீய பழக்கங்கள் கொண்டவர்கள் அநேகம் பேர். தோற்றத்தையும் தோலையும் பார்த்த நிவேதா அவனின் உள்ளத்தை ஒரு தடவை எண்ணிப் பார்த்திருந்தால் மனதளவில் இவன் இப்படியெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கமாட்டான்.

சந்தோஷ், நிவேதா இருவரும் ஒரே கிராமத்தவர்கள். ஒரே பாடசாலையிலே கல்வி கற்றார்கள். நிவேதா மீது ஆழ்ந்த அன்பை மட்டுமல்லாமல் நல்ல அபிமானத்தையும் வைத்திருந்தான் சந்தோஷ். அங்கவீனமாகப் பிறந்ததாலோ என்னவோ அவனுடன் அதிகமாக யாரும் பழகுவதே கிடையாது. இதனால் பல்வேறு மன உளைச்சல்களுக்கு உள்ளாகிப் போனான் சந்தோஷ். இவ்வாறான சூழ்நிலையில் தன் காதலை எப்படி அவளிடம் சொல்வது. சொன்னால் தன்னை ஏற்றுக்கொள்வாளா.. என்று பல்வேறு சிந்தனைகளால் குழம்பிப் போன சந்தோஷ் காதலை சொல்லாமலே இரண்டு வருடங்களைக் கழித்தான்.



அப்போதுதான் சந்தோஷிற்குத் தன் நண்பனின் ஊக்க வார்த்தைகள் கிடைத்தது.

"இங்கு பார் சந்தோஷ்! நமக்கு உள்ள குறைகளை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பது முட்டாள்தனம். உலகம் அழகானது, அதிசயமானது, விநோதமானது, விந்தையானதுதான். அதே நேரம் அசிங்கமானது. விகாரமானது. நிலையற்றது. நொடிக்கு நொடி மாறிக்கொண்டிருப்பது. மெய்யிலே பொய் கலந்திருப்பது போல அழகிலும்கூட விகாரம் கலந்துள்ளது. எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு உன் காதலை அவளிடம் சொல். நிச்சயம் ஏற்றுக் கொள்வாள்." என்று தைரியம் கொடுத்தான் நண்பன் நிகில்.

மறுநாள். "ஹலோ நிவே! குட் மோனிங். உங்களோட கொஞ்சம் கதைக்கணும்...

"என்ன சந்தோஷ் சொல்லுங்க."

"அது ஒண்ணும் இல்ல.."

"அப்ப நான் போறேன்" என்று போக முயன்றவளை "நிவே நான் உன்ன லவ் பண்ணுறேன் இரண்டு வருடமா. நல்லா யோசித்து ஒரு முடிவு சொல்" என்று பட்டெனச் சொல்லி முடித்தான் சந்தோஷ்.

"பேசி முடிந்துவிட்டதா, இல்ல இன்னும் ஏதாவது பாக்கி இருக்கா..? இல்ல எனக்கு தெரியாமல்தான் கேக்குறேன் உனக்கு என்ன மனசுல பெரிய அரவிந்தசாமி அஜித்துனு நினைப்பா...? உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாக முடியாது தெரியுமா...? கைகால் எல்லாம் நல்லா இருக்கிறவங்களுக்கே வாழ்க்கையைச் சரிவர அமைத்துக்கொள்ள முடிவதில்லை. உனக்கு... இங்க பாரு சந்தோஷ். கனவுகளையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு வேலையைப்பாரு. என்ன புரியுதா" என்று விடைபெற்றுக் கொண்டாள் நிவேதா.

ஒரு கணம் ஆடிப் போனான் சந்தோஷ். அழுது புலம்பினான். காலங்கள் உருண்டோடின. நினைக்கத் தெரிந்த மனதிற்கு மறக்கவும் தெரியும் என்றால் சந்தோஷ் விடயத்தில். அம்மொழி பொய்த்துப் போனது. முதல் காதலோடு முதுமையும் பெற்றான்.

தனது மீதிக் காலத்தைக் கழிப்பதற்கு முதியோர் இல்லத்தை நாடினான். சற்றும் எதிர்பாராமல் நிவேதாவை அங்கு சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது சந்தோஷிற்கு. "மனம்போல வாழ்வு" என்பார்கள். மனதிற்குப் பிடித்தவனையே திருமணம் முடித்தும் மரணம் அவனை வெகு விரைவில் தழுவிக்கொள்ள, விதவையாகிப் போன நிவேதா பிள்ளைகளை வளர்க்கப்பட்ட கஸ்டங்கள் ஏராளம். இழப்புகள் அதிகம். அதில் ஒன்றுதான் விபத்தொன்றில் இரண்டு கால்களையும் இழந்தது.

பிள்ளைகள் நல்ல நிலையில் இருந்தும் ஊனமான தாயை வைத்துப் பார்ப்பதற்கு எவரும் முன்வரவில்லை. முடிவு முதியோர் இல்லத்தில் முடங்கிக்கொள்ள வேண்டிய சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டாள் நிவேதா. "கால மாற்றத்தை பார்த்தாயா நிவே. கசப்பான நினைவுகளைக் களைந்து எறி. உனக்காக நானிருக்கிறேன்" என்றான் சந்தோஷ். ஊன முற்ற மனத்துடன் வெட்கித் தலை குனிந்தாள் நிவேதா. ■

## அண்டை மண்டலத்திலிருந்து...

# ஈராக் அழிகிறது

அமெரிக்கா உக்கிரமான போரினைத் துவக்கி விட்டது. சிறிது சிறிதாக ஈராக் அழிந்துகொண்டிருக்கிறது. பி.பி.சி., சி.என்.என். போன்ற தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் அமெரிக்க அரசிற்கும் எழுதப் படாததோர் ஒப்பந்தம் இருப்பதாகவும், அதன்படி, எந்தத் தொலைக் காட்சியிலும், அமெரிக்கக் குண்டு வீச்சின் காரணமாக ஏற்படும் அழிவுகள் பற்றிய காட்சிகள் ஒளி பரப்பப்படாது என்றும் மூத்த பத்திரிகையாளர்கள் வெளிப்படையாகவே எழுதுகிறார்கள்.

பொதுமக்கள் குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளிலுள்ள முஸ்லிம்கள், ஈராக் சந்திக்கும் கொடுமைகள் பற்றிய காட்சிகளைச் சின்னத்திரையில் கண்டு கொதித்தெழுவார்கள். இது பின்னர் தேவையில்லாத பிரச்சினைகளை அமெரிக்காவிற்குக் கொடுக்கலாம். எனவே ஈராக் நிகழ்ச்சிகளை உலகின் கண்களிலிருந்து மறைக்கும் ஒரு மன்னிக்க முடியாத சதிச் செயலில் அமெரிக்கா இறங்க, புகழ் பெற்ற செய்தி நிறுவனங்களும் அதற்குத் துணை போகின்றன. ஆனால் செய்தி நிறுவனங்களைச் சொல்வானேன்? உலகளாவிய அளவில் பெரிய அளவில் அமெரிக்காவினை எதிர்த்துக் கண்டனக் குரல்கள் எழுந்துவிடவில்லையே.

ஐக்கிய நாடுகள் அவையில் அமெரிக்காவைக் கடுமையாக எதிர்த்த பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யாவும் கூட ஏதோ சடங்கிற்கு தாக்குதலைக் கண்டித்துவிட்டு வாயை மூடிக்கொண்டுவிட்டன.

ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்றாலும், எந்த அரசும் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. இதைக் கண்டெல்லாம் அஞ்சப்போவதில்லை என்றுதானே புஷ்ஷும், பிளேயரும் முழங்கிக்கொண்டிருக்கின்றார்கள்.

அவுஸ்திரேலியாவில்தான் மிகப் பெரிய ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன. ஆனால் அந்நாட்டுப் பிரதமர் தீவிரமாகப் போரினை ஆதரிக்கிறார்.

மக்கள் எதிர்ப்பைப் பற்றி இன்றைய காலகட்டத்தில் எந்த அரசுமே கவலைப்படுவதில்லை. அதிகார இயந்திரம், பொலிஸ் மற்றும் இராணுவ பலம் தங்கள் கையிலிருக்கும்போது எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பதுதான் பரவலான அணுகுமுறையாக இருக்கிறது.

குறிப்பாக, துருக்கி நாட்டை எடுத்துக்கொள்ளுங்கள், மிக அதிக அளவில் முஸ்லிம்கள் வாழும் நாடு. ஈராக் மீதான போருக்குக் கடும் எதிர்ப்பு அங்கு. துருக்கியிலிருந்து ஈராக்கை அமெரிக்கா தாக்க அனுமதிக்கக் கோரும் தீர்மானம் ஒரு கட்டத்தில் நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது. ஒத்துழைக்காவிட்டால் பொருளுதவி கிடையாது என அமெரிக்கா மிரட்ட உடனேயே எங்களது விண் பகுதியைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என நாடாளுமன்றம் வேறொரு தீர்மானம் இயற்றியது. உதவியினால் பயன் பெறப்போவது மக்களா என்ன, அரசியல்வாதிகள்தானே. பல மில்லியன் டாலர்களை விட்டுவிடுவார்களா? நுனி நாக்கைச் சப்புக்கொட்டிக் கொண்டு களத்தில் இறங்கி விட்டார்கள்.



மக்கள் எதிர்ப்பார்களேயானால், இருக்கவே இருக்கிறது பொலிஸும் இராணுவமும். நிலை கட்டுக்கடங்காமல் போனால் புஷ்ஷே உதவிக்கு வருவாரோ. முஸ்லிம்கள் அதிகமாக வாழும் ஒரு நாட்டிலேயே இப்படியொரு நிலையானால் மற்ற நாடுகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

180க்கும் மேலான நாடுகள் ஐக்கிய நாடுகள் அவையில் அங்கம் வகிக்கின்றன. அந்த அவை போருக்கு ஒப்புக்கொள்ளவில்லை. சதாம் ஹுசைனிடம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக வைத்துக் கொண்டாலும், அதைக் கண்டு பிடித்து அழிக்க நிறையக் காலம் தேவைப்படும், எடுத்துக்கொள்ள வேண்டும், பத்தாண்டுகளுக்கும் மேலாக ஈராக் மக்கள் பல்வேறு துயரங்களைச் சந்தித்து வருகிறார்கள். இன்னுமொரு போரை



அவர்கள் மீது திணிக்க வேண்டாம் எனப் பல்வேறு நாடுகள் கதறியும் புஷ் கேட்கவில்லை. சண்டியர் வேலை செய்கிறார். ஐ.நா.வே ஒரு ஏமாற்று வேலை, வலிமை மிக்க நாடுகளின் எடுபிடி என்ற பொதுவான கருத்து உண்டு. ஆனால் அதனுடைய சட்டதிட்டங்களைக் கூட மதிக்கமாட்டேன். என் நாட்டு மக்களைக் காப்பற்ற எது வேண்டுமானாலும் செய்வேன் எனக் கொக்கரிக்கிறார் புஷ்.

# யாருக்கும் துணிச்சலில்லை

இந் நிகழ்வுகளுக்கு இந்தியத் தலைவர்களும் தமிழ் நாட்டுத் தலைவர்களும் என்ன கூறுகிறார்கள்? கடந்த ஈராக் போரின் போதே யாரும் சிலிர்த்தெழுந்திடவில்லை. இன்னுஞ் சொல்லப்போனால் அப்போதைய சந்திரசேகர் அரசு அமெரிக்க விமானங்கள் சென்னையில் இறங்கிப் பெற்றோல் நிரப்பிக் கொள்ள அனுமதித்தது.

அப்போதாவது குவைத்தை மீட்பதே சரி என்ற சூழலில் ஈராக்கைத் தண்டித்தது நியாயமே.

ஆனால் இப்பாது என்ன? ஆதாரங்கள் ஏதும் இல்லாமலேயே புஷ் ஈராக்கின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை வைக்கிறார். அதனை நிர்மூலமாக்கிவிடத் துடிக்கிறார். இதென்ன அயோக்கியத்தனம் எனக் கேட்க இந்தியாவில் எவருக்கும் துணிச்சலில்லை.

வாஜ்பேயி அரசு வருத்தம் தெரிவித்திருக்கிறது. தாக்குதல் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல எனக் கூறியிருக்கிறது.

சில நாட்களுக்கு முன்பு எதிர்க்கட்சிகளுடன் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பிரதமர் நமக்கு வாஷிங்டனோடும் பாக்தாத்தோடும் நல்லுறவு நிலவுகிறது. அதை நாம் கெடுத்துக்கொள்ளக் கூடாது. எனவே எவரையும் பகைத்துக்கொள்ளாமல் நாம் செயற்படுவோம் எனக் கூறிவிட்டார். தாக்குதலைக் கண்டித்துத் தீர்மானம் இயற்றுவோம் என்ற எதிர்க்கட்சிகளின் ஆலோசனையை அரசு நிராகரித்தது.

பொதுவாகவே சதாம் ஹுசைன் அரசிற்கும் இந்தியாவிற்கும் தொடர்ந்து இணக்கமான உறவு இருந்து வந்ததன் காரணமாக, முஸ்லிம் எதிர்ப்பாளர்களாக இருந்தும் சங்க பரிவாரத்தினர் ஈராக் மீதான போரினை எதிர்த்தே குரல் கொடுத்து வருகின்றனர். சென்னையிலே சங்க பரிவார அமைப்பொன்று ஈராக்கின் இந்தியத் தூதரை அழைத்துக் கருத்தரங்கமொன்றை நடத்தியது.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் அமெரிக்காவை வன்மையாகக் கண்டித்திருக்கிறார். எவ்வளவு பெரிய வல்லரசாக இருந்தாலும் சரி. ஐ.நா.வின் அனுமதியில்லாமல் வேறொரு நாட்டினைத் தாக்கக் கூடாது என்று கூறுகிறார்.

தமிழகத்தைப் பொறுத்தவரை வேலூர்ச் சிறையிலிருக்கும் வை.கோ.தான் வளைகுடா வாழ் இந்தியர்களுக்கு ஆபத்து ஏதுமின்றித் திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டுமென வலியுறுத்திப் பிரதமருக்குக் கடிதம் எழுதினார். போகிற போக்கில் சதாம் நமது நண்பர் என்று கூறியிருக்கிறார். அவ்வளவுதான்.

கலைஞர் கருணாநிதி ஏதோ ஒரு கேள்வி-பதில் பகுதியில் போரை எதிர்த்து இரண்டு வார்த்தை உதிர்த்திருக்கிறார். மற்றப்படி தி.மு.க. எதிர்க்கட்சிகளுடன் இணைந்து அமெரிக்காவைக் கண்டித்து நாடாளுன்றத்தில் தீர்மானம் இயற்ற வேண்டும் எனக் கோரியிருக்கிறது. முதல்வர் ஜெயலலிதா பிரச்சினையில் ஆர்வம் ஏதும் காட்டுவதாகத் தெரியவில்லை. தமிழ்நாட்டிலும் சரி, அகில இந்திய அளவிலும் பொதுமக்களைப் பொறுத்தவரை ஈராக் யுத்தம் அர்த்தமானது என்ற மனப்பான்மை நிலவுகிறது.

நீடித்தால் பெற்றோல், டீசல் விலை உயரும், விலைவாசி எகிறும் என்ற கவலை அதிகமாக இருப்பது அவர்களுடன் பேசும்போது தெரிய வருகிறது. அதற்கு அப்பாற்பட்டு தார்மீக ஆவேசம் ஒன்றும் காணோம்.

இளைஞர்கள் சென்னையில் சச்சின் டெண்டுல்கரின் கட்டவுட்டுக்கு ஐயரை அழைத்துப் பூஜை செய்து, இந்திய வெற்றிக்காக மனமுருகி வேண்டிக்கொண்டிருக்கிறார்கள்.

**கானகன்**

அந்த அளவுதான் உலக விவகாரங்களில் மக்களுக்கு ஆர்வம்.

அமெரிக்கத் தூதுவர் அலுவலகத்தின் முன் விசா வேண்டித் தவம் கிடப்போரின் எண்ணிக்கை குறையவே இல்லை என்பதும் குறிப்பிடத் தக்க விஷயம்.

நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனுமின்றி, ஜீவிப்பதில் மட்டுமே உலகெங்கும் மாந்தர்கள் கவனம் செலுத்தி வருகையில் புஷ் போன்றோரின் அராஜகங்கள் வளரத்தானே செய்யும். ●

# தனித் தரப்பு என்ற தப்புக் கணக்கு

"இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலம் இரத்தம் சிந்திப் போராடியது மூன்றாம் தரப்பொன்றையும் சேர்த்துக்கொண்டு பேச்சு வார்த்தை நடத்துவதற்காக அல்ல" என்று புலிகள் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் ஜப்பானில் வைத்துத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

அடுத்த சுற்றுப் பேச்சில் தனித் தரப்பு, அதற்கடுத்த சுற்றுப் பேச்சில் தனித் தரப்பு என்று கூறிக்கொண்டு காலம் கடத்தி வந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைமை வாயடைத்துப்போயிருக்கிறது.

முஸ்லிம்களுக்காக எந்த நேரத்திலும் கிளர்ச்சி செய்யக் காத்திருக்கிறோம் என்பது போல் சில காலம் வாய் வீச்சு அரசியல் நடத்திக்கொண்டிருந்த கிழக்கு மாகாண இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இப்போது தானுண்டு தன் வேலையுண்டு என்ற கையறு நிலையில் மௌனித்துவிட்டார்கள் போல் தெரிகிறது.

> **முஸ்லிம்களுக்காக எந்த நேரத்திலும் கிளர்ச்சி செய்யக் காத்திருக்கிறோம் என்பது போல் சிலகாலம் வாய்வீச்சு அரசியல் நடத்திக் கொண்டிருந்த கிழக்கு மாகாண இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இப்போது தானுண்டு தன் வேலையுண்டு என்ற கையறு நிலையில் மௌனித்துவிட்டார்கள் போல் தெரிகிறது.**

புலிகளின் தலைவருடன் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் செய்து கொண்ட 'புரிந்துணர்வு' ஒப்பந்தம் இன்னமும் உயிருடன்தான் இருக்கிறதா என்பது அவர்கள் இருவரைத் தவிர வேறெவருக்கும் வெளிச்சமில்லை. ஆனால் அந்தப் 'புரிந்துணர்'வில் உருப்படியாகச் செயலில் காட்டிய ஒரு அம்சத்தைக் கூறுங்கள் என்று கேட்டால் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.க்கள் திருதிருவென்று முழிக்க வேண்டிய நிலையில்தான் இன்று காணப்படுகிறார்கள்.

"புலிகளின் கப்பல் கிழக்குக் கடலில் தாக்கப்படாதிருந்தால், நான் இம்முறை தனித் தரப்பாக ஜப்பான் சென்றிருக்க முடியும். கப்பல் பிரச்சினைதான் விஷயத்தைக் கெடுத்து விட்டது" என்று விமான நிலையத்தில் வைத்து ஒரு போடு... போட்டிருக்கிறார் ரவூப் ஹக்கீம்.

(ஒரு வேளை அரசாங்கக் குழுவுடன் ஒரே விமானத்தில் போகாமல் தனியாக வேறொரு விமானத்தில் ஜப்பான் செல்வதைத்தான் ஹக்கீம் அவ்வாறு அர்த்தப்படுத்தினாரோ தெரியவில்லை!)

எவ்வாறெனினும் புலிகள் தரப்பினர் தற்போது வெளியிட்டுவரும் கருத்துக்கள் ஒன்றும் புதியவையல்ல. அவர்கள் ஆரம்பம் முதலே கூறியதைத்தான் இப்போதும் சொல்கிறார்கள்.

"முஸ்லிம் மக்களை நாம் தமிழ் மக்களிலிருந்து பிரித்துப் பார்க்கவில்லை. முஸ்லிம்களை நாம் புறந்தள்ள மாட்டோம்" என்றுதான் புலிகள் திரும்பத் திரும்பக் கூறிவருகின்றனர்.

உண்மைதான்! போராட்டத்திற்காக நிதி சேகரிக்கும் விஷயத்தில் புலிகள் முஸ்லிம்களைத் தமிழ் மக்களில் இருந்து பிரித்துப் பார்க்கவில்லை. ஆட்களைக் கடத்துவதில், உடமைகளை அபகரிப்பதில், வரி அறவிடுவதில்... என்று எதிலுமே முஸ்லிம்களுக்கென்று வடக்கு-கிழக்குப் பகுதியில் விசேட சலுகை கிடையாது.

ஆனால் யதார்த்தம் என்னவெனில் முஸ்லிம் சமூகம் தன்னை மத, கலாசார ரீதியில் தனித்துவமான ஒரு சமூகமாகக் கருதுகிறது. தனது தனித்துவ உரிமைகளைக் கோரி நிற்கும் ஒரு சமூகத்திடம் உங்களை நாங்கள் பிரித்துப் பார்க்கவில்லை எனப் புலிகள் கூறுவது, சிங்கள அரசியல் தலைவர் ஒருவர் "நாம் தமிழ் மக்களைச் சிங்களவர்களிலிருந்து பிரித்துப் பார்க்கவில்லை. சமஷ்டி, சுயநிர்ணயம் என்றெல்லாம் ஏன் கேட்கிறீர்கள்? நாம் எல்லோரும் ஒன்றாக வாழ முடியும்தானே" என்று கேட்பது போல இருக்கிறது!

பூனை பையில் இருந்து வெளியில் வரத் தொடங்கிவிட்டது. தனித்தரப்பாக பங்குபற்றுவோம். முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளை வென்று தருவோம் என்று கூறிவந்த முஸ்லிம் காங்கிரஸும் அதன் தலைவரும் இன்று என்ன சொல்கிறார்கள்? ■

# நெஞ்சினில் என்ன காயமோ...?

உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உளநோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாகக் காணப்படும் இன்றைய காலகட்டத்தில், உள நலம்; உளப் பாதிப்புக்கள்; உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றிற்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது.

எனவே மேற்படி உளவளத் துறையில் அநுபவம் பெற்றவர்களும், நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு.த.கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ், எம்.டி, உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு.தி.சுவீந்திரன். (பி.ஏ,எம்.ஏ, எம்.பில், உள மருத்துவத் துறை விரிவுரையாளர்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களைப் பகிர்வதுடன் உளவியல் சம்பந்தமான வாசகர்களின் கேள்வி களுக்கும் பதிலளிக்க முன்வந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப் படுத்திக் கொள்கிறோம்.

## உள மருத்துவம்

"சமந்தி, 23 வயது, பல்கலைக் கழக மாணவி. இவள் பல்கலைக் கழகத்திற்குச் செல்ல மறுத்ததன் காரணமாகப் பெற்றோரினால் உளமருத்துவப் பிரிவுக்கு அழைத்துவரப்பட்டாள். இவளுடன் நடந்த உரையாடலில் பின்வரும் மேலதிக தகவல்கள் கிடைக்கப் பெற்றன. இவளின் பெற்றோருக்கு இவள் ஒரேயொரு பிள்ளை. சிறுவயதிலிருந்து இவள் இசை, வலைப்பந்து என்பவற்றில் ஆர்வம் கொண்டிருந்தாலும் பெற்றாரின் விருப்பம் வேறு வகையில் இருந்தது. பெற்றோர் இவள் ஒரு வைத்தியராக வரவேண்டும் என்ற ஆவலைக் கொண்டிருந்தனர். மூன்று முறை உயர்தரப் பரீட்சை எழுதிய பொழுதும் அவளால் வைத்திய பீடத்துக்கான அனுமதியைப் பெற முடியவில்லை; விஞ்ஞான பீடத்துக்கான அனுமதியே கிடைத்தது. சமந்தி தான் ஒரு ஆசிரியையாக வரவே விரும்பினாள். ஆரம்பத்தில் பெற்றார் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காத போதும், பின்னர் கணனி வகுப்புக்களுக்குப் போகும்படி நிர்ப்பந்தித்தனர். பல்கலைக் கழக வகுப்புகளுக்கு மேலாக வெளிவாரியிலான கணனி வகுப்புகளுக்கு அவள் சென்றாள். ஆரம்பத்தில் அதற்கு முகம் கொடுக்க முடிந்த போதிலும், பின்னர் அவளால் முடியாது போகவே அவளின் ஊக்கம் குறைந்தது. பரீட்சைப் பெறுபேறுகளும் குறைவடைய ஆரம்பித்தன. பெற்றோர் இதன் காரணமாக அவளைக் கூடிய நேரம் படிக்கும்படி நிர்ப்பந்தித்தனர். அவளின் சாதாரண பொழுதுபோக்குகளையும் அவளால் கைவிட நேர்ந்தது. மகிழ்ச்சி குறைய ஆரம்பித்தது. அவளின் தன்னம்பிக்கை குறைய ஆரம்பித்தது. பரீட்சை என்றாலே பயப்பட ஆரம்பித்தாள். இறுதியாக ஒரு நாள் பல்கலைக் கழகத்துக்கே செல்ல மறுத்தாள். எவ்விதமான உற்சாகமூட்டலும் பயமூட்டுதலும் பிரயோசனமற்றுப் போயின. நண்பர் ஒருவரின் ஆலோசனைப்படி அவளின் பெற்றோர் வைத்திய ஆலோசனையை நாடினர். இவள் ஒரு மனநோயாளியா? இவளின் இன்றைய நிலைக்குக் காரணங்கள் யாவை? இவளின் சுயகௌரவத்தை வளர்ப்பது எப்படி?

இப்படியான எத்தனையோ சம்பவங்களை நீங்கள் அறிந்தும் கேட்டும் இருப்பீர்கள். இவள் ஒரு "மனநோயாளி" என நீங்கள் கருதினால் எத்தனை "மனநோயாளிகளை" உங்கள் அயலில் அல்லது உறவில் அல்லது உங்கள் கிராமத்தில் உங்களால் எண்ண முடியும்.

> **அவள் உளநோயாளியல்ல; உள ஆரோக்கியம் பாதிக்கப்பட்டவள். பெற்றோரின் அளவுக்கதிகமான நெருக்கீடுகளும், பெற்றோரைக் கவலைக்குள்ளாக்கக் கூடாது எனத் தனது விருப்பத்தை வெளிப்படுத்தத் தயங்கியமையுமே இதற்குக் காரணங்களாகும்.**

ஆம், இவள் ஒரு உள நோய்க்குட்பட்ட பெண் அல்ல. மாறாக உள ஆரோக்கியம் பாதிக்கப்பட்ட ஒருவர். பெற்றோரின் அளவுக்கதிகமான எதிர்பார்ப்பு இதற்கு ஒரு காரணமாக அமையினும், தனது விருப்பத்தை வெளிப்படுத்துவதில் தயக்கம் காட்டியதும், பெற்றோரைக் கவலையுறச் செய்யக் கூடாது என்ற எண்ணத்தில் தன்னை மேலும் வருத்தியதும் காரணங்களாக அமைகின்றன. அவள் தனது எதிர்பார்ப்புகளை, ஆலோசனைகளை வெளியிட முனைந்தபோது காலங்கடந்து விட்டிருந்தது.

உண்மையில் வைத்தியருடன் நடந்த உரையாடலின் பின்னர் அவள் உள்ளத்தின் பாரிய சுமை ஒன்று குறைந்ததாக உணர்ந்தாள். பெற்றோரும் தங்கள் பக்கத்தில் நடைபெற்ற தவறுகளை உணர்ந்தனர். குடும்ப உளவளத்துணை முறை மூலம் சமந்தியின் உள ஆரோக்கியம் மட்டுமல்ல, அக்குடும்பத்தின் உள நலத்தையே விருத்தி செய்ய முடிந்தது.

அவளின் தேவைகளை முதன்மைப்படுத்துதல் மூலம் முதலில் பல்கலைக் கழகத் தேர்வுக்குத் தோற்றுவதென இணக்கம் காணப்பட்டது. மேலதிகமாக கிழமைக்கு ஒரு தடவை கணனி வகுப்புகளுக்குச் செல்வதாகவும், பல்கலைக் கழகப் பரீட்சையின் பின்னர் வெளிவாரிக் கணனி பரீட்சைக்குத் தோற்றுவதா, இல்லையா எனத் தீர்மானிப்பதாயும் இணக்கம் காணப்பட்டது.

இவற்றை விட அவளின் வெகு நாளைய விருப்பின்படி வீணை கற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டன.

அவளின் நிகழ்காலப் பிரச்சனைகளுக்குச் சுமுகமான, பெற்றோரின் ஒத்துழைப்புடனான முடிவு கிடைக்கப் பெற்றதால் சமந்தியின் மனம் மகிழ்ச்சியில் திளைத்தது. அவள் பல்கலைக் கழகம் செல்லுவதற்கும், பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்வதற்கும் சம்மதம் தெரிவித்தாள். பெற்றோரும், தாங்கள் இவ்வளவு காலமும் எந்த நேரமும் துக்கத்திலும் விரக்தியிலும் வாழ்ந்ததாகவும், வெகு நாட்களின் பின்னர் தங்களால் மனம் மகிழ முடிகின்றது என்றும் கூறினார்கள்.

நீண்ட காலமாக விமர்சனங்களுக்கு உள்ளாகியதாலும் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்ததாலும் சமந்தியிடம் தன்னம்பிக்கை அற்றுப்போயிருந்தது. இவளின் தன்னம்பிக்கையை வளர்ப்பதென்பது பெரிய சவாலாக மாறியது.

தொடர் உரையாடல்களின் மூலம் இவளின் தன்னம்பிக்கையைச் சிறிது சிறிதாக அதிகரிக்க முடிந்தது. அவளைச் சந்தோஷமடைய வைக்கும் வகையில் சுயமாக செயல் அட்டவணை ஒன்றைத் தயாரிக்கும்படி ஆலோசனை கூறினோம். மேலும் அவளின் ஆற்றல்களை எழுதும்படியும் அதனை நாளாந்தம் அதிகரிக்கும்படியும் கூறினோம். பெற்றோரிடம் அவளுடன் சிறிது நேரத்தை அவளுக்காகப் பயனுள்ள முறையில் செலவிடும்படி ஆலோசனை பகர்ந்தோம். படிப்படியாக இம் முறைகளின் மூலம் அவளின் தன்னம்பிக்கையை வளர்க்க முடிந்தது.

இப்போது இவள் மூன்று வெவ்வேறு துறைகளில் பிரகாசிக்கும் ஒருத்தியாக மாறிவிட்டாள். பல்கலைக் கழக விரிவுரையாளரான சமந்தி கணனி தொடர்பான விடயங்கட்கு மற்றவர்களுக்கு ஆலோசகராக இருப்பது மட்டுமல்ல; சமந்தியினது வீணாகானம் கேட்காத பல்கலைக் கழக இசை நிகழ்ச்சிகள் இல்லை என்றே கூறலாம்.

சமந்தி ஒரு வகையில் அதிர்ஷ்டக்காரி. பெற்றோருடைய. நண்பர் மட்டும் தகுந்த ஆலோசனையை வழங்கியிருக்காவிடில், தொடர்ந்து நெருக்கீடுகளுக்கு முகம் கொடுக்கக் கூடிய ஆற்றலை இழந்துவிட்ட நிலையில் மனச்சோர்வு நோய்க்கு இவள் உட்பட்டிருக்கக் கூடும். சில வேளைகளில் தாங்கொணா வேதனையில் உயிரை மாய்த்திருக்கக் கூடும். பல்கலைக் கழக சமூகம் ஒரு திறமையான விரிவுரையாளரையும், இசையுலகம் ஒரு வீணை மேதையையும் இழந்திருக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கும்.

மேலும் உயர் அதிகாரிகளாயிருந்த சமந்தியின் பெற்றோர்கள் தத்தமது அலுவலகங்களிலிருந்த, பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களால் உள ஆரோக்கியம் பாதிக்கப்பட்டவர்களைச் சிகிச்சைக்காகவும் உளவளத்துணைக்காகவும் உளமருத்துவத் துறைப் பிரிவுக்கு அனுப்பும் அளவுக்கு அவர்களின் உள ஆரோக்கியமும் விழிப்புணர்வும் வளர்ந்தது எனக் கூறாதுவிடில் சமந்தியின் இச் சரிதம் பூரணத்துவமடையாது.

(தொடர்ந்து வரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்கு கொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 10க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

ஆயிஷா எம். இக்பால், மே/பா என். பளீல், 57ஏ, பெருந்தெரு, கிண்ணியா — 06.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. எஸ். சைலு, திருச்செந்தூர், கல்லடி, மட்டக்களப்பு.
2. செல்வி எஸ்.எம். எவஹிஸ்ரா அனோஜா, பள்ளிமுனை, மன்னார்.
3. தேவராஜன் ஆனந்த குமரன், ஹேகித்த, வத்தளை.
4. செல்வி ப்ரணவீ. ஞா. உட்துறைமுக வீதி, திருகோணமலை.
5. எஸ். ஜோர்ஜ், நியூன்ஹம் சதுக்கம், கொழும்பு—13.
6. எம்.ஜே. றஸா ஹுஸைன், பியரத்னாராம இடம், தெஹிவளை.
7. எஸ். ஜெயச்சந்திரராசா, இராசேந்திரன்குளம், வவுனியா.
8. க.கமால்தீன், புன்னக்குடா வீதி, ஏறாவூர் — 03.
9. ஏ.ஆர்.எம். அபூபக்கர், அலு த் வீதிய, வெலிகம.
10. ரட்ணம் கிருஸ்ணகுமார், பிற்றத்மலை மேற்பிரிவு, அப்புத்தளை.

## குறுக்கெழத்துப் போட்டி (12)

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | ■ | ■ | 7 | 8 |
| 9 | 10 | 11 | ■ | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ |
| ■ | 17 | 18 | ■ | 19 |
| 20 | 21 | ■ | 22 | 23 |

### இடமிருந்து வலம்

(1). பின்லேடன் குறி வைத்த அமெரிக்கக் கட்டடம்.
(7). நிறை உணவு (திரும்பியுள்ளது).
(9). ஓடுமீனோட உறுமீன் வரும் வரை வாடி நிற்குமாம். (குழம்பியுள்ளது)
(13). மனிதன் இதிலிருந்துதான் தோன்றினான் என்கிறது விஞ்ஞானம்.
(17). இனம்.
(20). பூமி.
(22). துவாரம்

### மேலிருந்து கீழ்

(1). ஒல்லாந்தர் வருகையின் நினைவுச் சின்னமான மரம்.
(4). சிலை செய்யப் பயன்படும்.
(5). அங்குசத்தைக் கையில் வைத்திருப்பவன் (குழம்பியுள்ளது)
(10). வழிபடத்தக்க பெரியோர்.
(11). தனம்.
(19). ஆண்மகன்.

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 02.04.2003க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி

**குறுக்கெழுத்துப் போட்டி இல-12**
**தினமுரசு வாரமலர், த.பெ. இல. -.1772, கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250/= ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 10 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| சீ (1) | தே (2) | வி (3) | ■ | ■ |
| றா (4) | ■ | ■ | ள் (5) | எ (6) |
| பு (7) | ழ (8) | ல் (9) | ■ | ரு (10) |
| ரா (11) | ■ | செ (12) | ம் (13) | மை (14) |
| ண் (15) | ஓ (16) | ம் (17) | ■ | ■ |
| ம் (18) | ■ | வ (19) | ய (20) | து (21) |

# ஸ்போர்ட்ஸ்

## சரியாகக் கணித்த கிரிக்கெட் இரசிகர்கள்

உலகக் கிண்ணப் போட்டியை முன்னிட்டு முரசு நடத்திய போட்டியில் நாம் கேட்ட கேள்விகளுக்கு ஏராளமான வாசகர்கள் மிகச் சரியான விடைகளை அனுப்பியிருந்தனர்.

நாம் கேட்ட ஆறு கேள்விகளில் முதல் ஐந்துக்கும் சரியான பதிலை எழுதி இறுதிப் போட்டியில் ஆட்டநாயகனாகத் தெரிவாகுபவர் யார் என்ற கடைசிக் கேள்வியில் கோட்டைவிட்டவர்களின் எண்ணிக்கைதான் மிக அதிகம்.

பிரமித்துப் போகும் அளவு தபாலட்டைகள் வந்து குவிந்தன. போட்டியில் பங்குபற்றிய அனைத்து வாசகர்களுக்கும் முரசின் பாராட்டுக்கள். சரியான விடையெழுதியவர்களுள் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்பட்ட மூன்று பேர் இவர்கள்தான்.

**எச்.எம்.இஸ்மாயில்,**
**தபாற்கந்தோர், ஏறாவூர்.**

**கே.ரவிகுமார்**
**நையின்சா டிவிசன்,**
**மவுசாக்கலை குரூப், மஸ்கெலியா.**

**எம்.முருகானந்தன்**
**ஆனந்தவாச**
**12/12, உடப்பு, சிலாபம்.**

பரிசைப் பெற்றுக்கொள்ளத் தகவல் தபால் மூலம் அறிவிக்கப்படும்.

இப்போது சகலருக்கும் விடைகள் தெரிந்திருக்கும் இருந்தாலும் ஒரு ஞாபகமூட்டலுக்காக...

1) அவுஸ்திரேலியா- இந்தியா
2) அவுஸ்திரேலியா
3) சச்சின் டெண்டுல்கர்
4) சமிந்த வாஸ்
5) சச்சின் டெண்டுல்கர்
6) ரிக்கி பொண்டிங்

## இந்தியா சரிந்தது ஏன்?

மிகுந்த எதிர்பார்ப்பு, மிகையான பதற்றம், உணவையும் தூக்கத்தையும் மறக்கக் கூடிய கிறக்கநிலை, இப்படித்தான் இந்திய இரசிகர்களின் உணர்வு, மார்ச் மாதம் 23ம் திகதி வரை இருந்தது. 20 வருடங்களின் பின் மீண்டும் இறுதிப் போட்டியில் தோன்றும் தங்கள் வீரர்கள் எப்படியும் சாதிப்பார்கள் என்று அவர்களின் கனவுக் கோட்டையின் மீது முதலாவது பந்துவீச அழைத்தார் என்றே சொல்ல வேண்டும். புதிய பந்தில் பந்துவீசத் தடுமாறிய சகீர்கானை, பந்து கொஞ்சம் பழுதான நிலையில், கில்கிறிஸ்ட்டும், ஹெய்டனும் ஆட்டமிழந்திருந்த போது பொண்டிங்கும், மார்ட்டினும் புதுத் துடுப்பாட்ட வீரர்களாய் இருக்க, பந்துவீச அழைத்திருந்தால் முடிவுகள் மாறியிருக்கலாம். இரண்டாம் தடவை சகீர்




வெற்றி நாணயச் சுழற்சியிலேயே தீர்க்கப்பட்டுவிட்டது. "ஒருநாள் போட்டிகளில் நாணயச் சுழற்சியில் வென்றால் பாதிப்போட்டியை வென்றது போன்றுதான்" என்ற கோட்பாட்டிற்கமைய கங்குலியின் உதடுகள் மூலம் பொண்டிங் பாதிப் போட்டியை வென்றுவிட்டார். சரிவின் தொடக்கம் இதுதான். கங்குலிக்குக் கிடைத்த தங்க வாய்ப்பை விதி பொண்டிங்கின் பொக்கற்றுக்குள் திணித்துவிட்டது. சரி, ஏதோ சில காரணங்களுக்காக (ஒப்பீட்டளவில் அது பலவீனமான காரணங்களாய் இருந்தால் கூட) இப்படி ஒரு முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது என ஆசுவாசப்பட்டுக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தால், முதற்கோணலாய் சகீர்கானின் பந்துவீச்சு, முதல் ஓவரிலேயே 15 ஓட்டங்கள். இந்திய இரசிகர்கள் உள்ளங்களில் ஓங்கி, ஓங்கி அலை அடிக்கின்றது. மீண்டும் முடிவு பற்றி குறுகுறுப்பு, முணுமுணுப்பு. தடியைக் கொடுத்து அடி வாங்குபவன் கதையாய் கங்குலியின் நிலை. யாவும் ஸ்தம்பித்துப் போனது போன்ற நிலையில் பந்துவீச்சாளர்களுக்கு ஆலோசனை வழங்கக்கூட மறந்து போய்.. ஓட்டங்களை வாரி வழங்கிக்கொண்டிருந்த சகீர்கானை, மூன்றாவது ஓவருடன் இடை நிறுத்தியது, புத்திசாதுரியமான செயல் என்றாலும், இரண்டாவது தடவையாக சகீர்கானை பிழையான தருணத்தில் அழைக்கப்பட்டபோது அவர்கள் இருவரும் தங்களை நன்கு வலுப்படுத்திக்கொண்டு எந்தப் பந்துவீச்சையும் எதிர்கொள்ளும் நிலையில் இருந்தார்கள். எல்லாப் பந்துகளையும் அவர்கள் எல்லைக் கோட்டுக்கு அப்பால் அனுப்பவே துடித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பது தெரிந்தும். கொஞ்சமும் தந்திரமாய் பந்துவீசாமல் குறி பார்த்து மட்டைக்கே வீசிக் கொண்டிருந்தார்கள் இந்திய வீரர்கள். 40 ஓவர்களில் 250 ஓட்டங்களைப் பெற்ற பின் தலைக்கு மேலே வெள்ளம் போன பின் சாண் என்ன முழம் என்ன என்ற கணக்கில் தாறுமாறாய் பந்துவீசும் போது, மித வேகப் பந்துவீச்சாளர்களைப் பயன்படுத்தியிருந்தால் 360 இலக்கு சில வேளைகளில் 320 ஆகவோ, 330 ஆகவோ மாறியிருக்கவும் கூடும்.

அழுத்தத்துடனான ஆரம்பத் துடுப்பாட்டத்திற்கும், அழுத்தமில்லாத ஆரம்பத் துடுப்பாட்டத்திற்குமிடையிலான வேறுபாட்டை சச்சினின் துடுப்பாட்டம் தெளிவாய்க் கோடு காட்டியது. 360 என்ற பாரிய இலக்குடன் களமிறங்கும்போது எந்த ஓர் அபார துடுப்பாட்ட வீரரும் தமது துடுப்பு மட்டையோடு, அழுத்தத்தையும் தூக்கிக்கொண்டே களம் விரைவர். அதிலும், பொதுவாகவே அணியினைத் தன் தோள்களில் தாங்குபவர் என வர்ணிக்கப்படும் சச்சினுக்கு இது எல்லை மீறிய அழுத்தம். இருந்தும், 360 என்று இலக்கைப் பார்ப்பதை விடுத்து, ஒரு ஓவருக்கு 7 ஓட்டங்கள் என இலக்கை இலகுவாக எடுத்துக் கொண்டு ஆட முற்படும்போது நம்பிக்கை கொஞ்சம் அதிகமாய்த் தெரியும். இதில் முக்கியம் என்னவெனில் விக்கட்டுகள் வீழாதிருக்க வேண்டும். ஆனால் பரிதாபமாக முதல் ஓவரிலேயே சச்சின் ஆட்டமிழந்தது கனவுக் கோட்டைக்குள் வெடிகுண்டு விழுந்தது போலானது. சச்சின் குறைந்தது 50 ஓட்டங்களையாவது எடுத்திருந்தால், ஷேவாக்கின் அன்றைய அபார ஆட்டத்தின் மூலம் சிலவேளை அதிசயம் நிகழ்ந்திருக்கக்கூடும். சச்சின் வீழ்ந்த பின்னும், கங்குலியும், சேவாக்கும் அதிரடியால் ஆடிய அந்த இணைப்பாட்டம் குறைந்தது 150 ஓட்டங்கள் வரையாவது சென்றிருந்தாலும் கூட வெற்றி சாத்தியப்பட்டிருக்கும், கென்யாவிற்கெதிராய் ஆடியது போன்று கங்குலி தன் வாழ்வில் சிறந்ததொரு இன்னிங்ஸாக இப்போட்டியை மாற்றுவதற்கு போதுமான வாய்ப்பிருந்து கை நழுவ விட்டார் என்றே சொல்லலாம். ஓட்டம் எதுவும் பெறாமல் கைப் முக்கிய கட்டத்தில் காலை வாரி விட்டதும். நிலைமைக்குத் தகுந்தது போல் ஆடுவதை விடுத்து எப்போதும் போல் ஒற்றை ஓட்டத்தைப் பெறுவதிலேயே குறியாய் இருந்த ட்றாவிட்டும், அதிரடியாய் ஓட்டங்களைக் குவிக்கும் யுவராஜ் வழமைக்கு மாறாகப் பந்துகளை வீணடித்ததும் தோல்வியின் முக்கிய காரணங்கள். அணியில் தன் இருத்தலை நியாப்படுத்தக் கிடைத்த வலுவான ஒரு வாய்ப்பை மொங்கியாவும் தவறவிட்டுக் தனது இருப்பை கேள்விக்குள்ளாகிக் கொண்டார்.

யாவற்றுக்கும் மேலாக, இந்த இலக்கையும் இவர்கள் துரத்திப் பிடிக்கும் வல்லமை கொண்டவர்கள் என இரசிகர்கள் நம்பும் அளவிற்குத் தனது அதிரடியைத் தொடர்ந்து கொண்டிருந்த ஷேவாக்கின் "ரன் அவுட்" தான் இந்தியாவின் வெற்றியின் மீதான நம்பிக்கை கலைந்து போன கடைசித் தருணம் எனலாம். ஓட்டங்களை ஓடிப் பெறுவதில் ஷேவாக் தனது வேகத்தை இன்னும் விரைவுபடுத்த வேண்டியது அவசியமாகின்றது.

இந்தியாவின் சரிவிற்கு மேலே கூறிய காரணங்கள் எல்லாவற்றையும் விட மிக மிக முக்கியமான காரணம் ஒன்று இருக்கின்றது அதுதான், "அவுஸ்திரேலிய வீரர்கள் சகல துறைகளிலும் நம்ப முடியாத அளவு அபார திறமையை வெளிக்காட்டினார்கள்" என்பது.











ஈராக் போர்க்களம்

# ஆறுமனமே ஆறு!

## வட்டி.... - 01

சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டை அகதிகள் முகாமிலிருந்து கிளியக்கா என்பவர் வந்திருந்திருந்தார். கிளியக்காவை வரவேற்று ஆற்றுப்படுத்தல் மையத்தில் அமரும்படி கேட்டுக் கொண்டேன். கிளியக்கா அறைக்குள் வரும்போதே அழுது கொண்டே தான் வந்தார்.

கதிரையில் அமர்ந்த கிளியக்காவின் அழுகை மேலும் கூடியது.

ஒரு கிளாசில் தண்ணீரை மேசையில் வைத்துக் கொண்டு கிளியக்கா அழுது முடியும்வரை பொறுமையாக இருந்தேன்.

கிளியக்காவின் அழுகை கொஞ்சம் கொஞ்சமாக குறைந்தது.

"அக்கா இந்த தண்ணியை குடித்துவிட்டு முகத்தை கழுவிவிட்டுவாருங்கள்" என்று கேட்டுக் கொண்டேன்.

கிளியக்கா வெளியில் சென்று முகம் கழுவிவிட்டு தன் சேலைத் தலைப்பால் துடைத்தபடி வந்தார்.

"இருங்கள் அக்கா!" என்று அன்பாக அழைத்து என் முன்னாலிருந்த கதிரையைக் காட்டினேன்.

"அக்கா! நீங்கள் என்ன பிரச்சனையுடன் வந்தீர்கள் என்று எனக்கு தெரியாது. ஆனாலும் எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் தீர்வு ஒன்று உள்ளது என்பதை மட்டும் நீங்கள் நம்ப வேண்டும். உங்கள் பிரச்சனை எதுவாக இருந்தாலும் நாம் இருவரும் சேர்ந்து ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்துவிடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. சரி. அக்கா! நீங்கள் என்ன விடயமாக என்னிடம் வந்தீர்கள், சொல்லுங்கள்"

"ஐயா, எனது சொந்த இடம் மன்னார் மாவட்டத்தில பண்டிவிரிச்சான் என்ற கிராமம்.

1994ம் ஆண்டு எங்க ஊரில இருக்க முடியாம எனது பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு பேசாலை வழியாக இந்தியா வந்து சேர்ந்தேன். 1990ம் ஆண்டு சித்திரை மாதம் எனது கணவர் காட்டுக்குள் வைத்து இனம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அன்றிலிருந்து நான் பட்ட கஸ்ரங்களுக்கு அளவே இல்லை."

"சரி, அக்கா, உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்"

"நான்கு பிள்ளைகள். முத்தது மூன்றும் பெண்கள், கடைசி பிள்ளை பொடியன்."

"நல்லது. உங்கள் பிரச்சனையை கூறுங்கள்."

"ஐயா உங்களுக்குத் தெரியும் தானே, முகாமில் கொடுக்கும் ரேசன் சமானும் பதினைந்து நாளைக்கு ஒருதரம் கொடுக்கப்படும் உதவிப்பணமும் எமது குடும்பத்திற்கு 10 நாட்களுக்குத்தான் போதும். மற்ற 20 நாட்களை எப்படிச் சமாளிப்பது? பிள்ளைகளை எப்படிப் படிப்பிப்பது? நான் சிற்றாள் வேலைக்குச் சென்று 50 ரூபா நாட்கூலிக்கு வேலை செய்தாலும் அந்த வருமானமும் பற்றாக் குறையாகவே உள்ளது. இதனால் ஐயா எமது முகாமிலுள்ள ராஜா மாஸ்டர் என்பவரிடம் எனது மூத்த மகளின் பூப்புனித நீராட்டு விழாவிற்காக 15000 ரூபா வட்டிக்கு வாங்கினேன். விழா முடிந்தவுடன் 10,000 ரூபாவை திருப்பிக் கொடுத்துவிட்டேன்.

அந்த 10.000 ரூபாவிற்கும் 7 நாளைக்கு ஒரு மாத வட்டியையும் கொடுத்தேன். மிகுதி 5000 ரூபாவையும் வட்டியையும் என்னால் கொடுக்க முடியவில்லை. இம் மாதத்துடன் ஆறு மாதமாகிவிட்டது. அந்த 5000 ரூபாவுக்கு ஆறுமாத வட்டி 4500 ரூபா வந்துவிட்டது.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை" என்ற கிளியக்காவின் கண்கள் கலங்கின.

### எஸ்.பி.லெம்பட் வங்காலை

"அக்கா! ராஜா மாஸ்டர் எத்தனை வீதம் வட்டி வாங்குகிறார்?"

"100 ரூபாவுக்கு மாதம் 15 ரூபா வட்டி. முதல் 10,000 ரூபாவுக்கு 7 நாளைக்கு ஒரு மாத வட்டி போட்டு 1500 ரூபா கொடுத்தேன்."

"இது அநியாயமான வட்டி. ஏன் இப்படி அநியாயமான வட்டிக்கு பணம் வாங்கினீர்கள்?"

"என்ன செய்வது, அவசரத்திற்குப் பணம் தேவை என்றால் வட்டியைப் பார்க்க முடியாது தானே!" என்று கிளியக்கா சொன்னார்.

தொடர்ந்து வரும்....

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

*-காதில பூ கந்தசாமி-*

சண்டை துடங்கிட்டுது. நீங்கள் இப்பதான் கிரிக்கெட் டென்சனில டீவியோடயே குடியிருந்திட்டுத் திரும்பியிருக்கிறியள்.

கிரிக்கெட்டில நீங்கள் எந்தப் பக்கமோ தெரியாது. ஒவ்வொரு மெட்சுக்கும் ஒவ்வொரு பக்கம் நிண்டிருப்பியள். இலங்கை ஸீனால கழரும்வரை பிறந்த தோசத்துக்காவது இலங்கையின்ர பக்கம்தான் நிண்டிருப்பியளெண்டு நம்பிறன்.

எந்தப் பக்கத்தோட நிண்டியளோ அந்தப் பக்கம் அடிக்கிற றண்களுக்குக் கை தட்டியிருப்பியள். வெளுத்த பவுன்றி ஸிக்ஸர்களுக்குத் துள்ளிக் குதிச்சிருப்பியள். அவுட்டானால் தலையில அடிச்சிருப்பியள். விக்கற் வீழுத்தினால் விசிலடிச்சிருப்பியள். எத்தின பேர் கொடியுடுத்துக்கொண்டு நடுரோட்டில ஆட்டம் போட்டிருப்பியளோ....? அது ஒரு விளையாட்டுப் பிரியருக்கு ஆனந்தமான விசயம். ஆரோக்கியமானதெண்டும் பாராட்டலாம்.

ஆனால் பாருங்கோ, இப்ப மெட்சை ஒரு பக்கம் தள்ளிப்போட்டு சண்டை துடங்கியிருக்கு. பீ.பீ.ஸி. இருபத்திநாலு மணத்தியாலக் கடைவிரிச்சு ரீவியப் பிடிச்சு வைச்சுக் கொண்டு றண்ணிங் கொமன்ரி குடுக்குது. நாங்களும் வியப்பு ஒரு பக்கம் திகைப்பு ஒரு பக்கமெண்டு நடக்கிறத வேடிக்கை பாக்கிறம்.

கனபேருக்கு அமெரிக்கன் இந்தமுறை என்ன புதுப்புது ஆயுதங்களப் பாவிக்கப் போறான், என்ன குண்டுகள் வீசப் போறான், என்னென்ன பிளேனுகளப் பறக்கவிடப் போறான், எந்தக் கப்பலிலயிருந்து எப்பிடியெப்பிடிப் பிளேனுகள் எழும்பிப் பறக்கப் போகுது, எண்டு பெரிய திறில்லாக் கிடக்கும்.

ஒரு பக்கம் குருஸ் ஏவுகணைகள் வந்து விழ மற்றப் பக்கம் ஸ்கட் பாய அதப் பற்றியொட் வானத்திலயே மறிச்சடிக்க,....

எல்லாம் எங்கட புராண காலத்து மாபாரத, ராமாயணச் சண்டைகளில வாற அஸ்திரங்கள் மாதிரி...

ஒரு பக்கம் அக்கினியாஸ்திரம் பாய மற்றப் பக்கத்தால வர்ணாஸ்திரம் அதை முறிக்க...,

திறில்லோ திறில்தான். புராணச் சண்டைய நேரில பாத்த மாதிரி..., அப்பிடியே அரோகராவெண்டு சொல்லிக் கன்னத்தில போட்டுக்கொண்டு சாஷ்டாங்கமா டீவிக்கு முன்னால விழுந்து கும்பிட்டால் என்ன எண்ட மாதிரி ஒரு பக்திப் புளகாங்கிதம்...

ஆனால்ப் பாருங்கோ, றண் எண்ணுற மாதிரி செத்து விழுகிற உடல்கள எண்ணுறதுக்கும், போல் எண்ணிற மாதிரி வீசின குண்டுகள எண்ணுறதுக்கும் யுத்தம் ஒண்டும் ஒரு கிரிக்கெட் மெட்ச்சில்லை.

இது உயிர்ப் பிரச்சினை பாருங்கோ. உங்கள எங்களப் போல இந்த உலகத்தில ஏதோ உழைச்சுச் சாப்பிட்டுக் குடும்பம் குட்டியெண்டு சந்தோசத்தக் காணுறதுக்கு வாழ்க்கைய நடத்திற அப்பாவிச் சனங்களுக்கு மேல, என்ன, ஏதெண்டு கேள்வி நியாயமில்லாத யுத்தத்தப் பிரகடனப்படுத்தி, பட்டப் பகிரங்கமா அவையின்ர வாழ்க்கையச் சின்னாபின்னமாச் சிதறடிச்சு, எழுந்தமானமாக் கொன்று குவிச்சு, மிச்சம் மீதிப் பேரை அகதியாக்கிற விளையாட்டுக்கு நாங்கள் யுத்தம் எண்டொரு அழகான பெயரை வைச்சு அதை ஒரு வீரச் செயலெண்டு மெச்சுவமெண்டால், பாவம் புண்ணியம் நீதி நியாயமெண்ட சொற்களுக்கெல்லாம் அகராதியில மட்டும்தான் அர்த்தம் மிஞ்சும்.

யுத்தத்தை ரசிக்கவும் ரெத்தத்த ருசிக்கவும் பழகிட்டமெண்டால் எங்கட மனிதம் மரத்துப் போட்டுதெண்டுதான் அர்த்தம்.

ஆனால் இந்த யுத்தம் அநியாயத்துக்கு நடக்குதெண்டு மனசாட்சி படைச்ச எல்லாருக்கும் நல்லாத் தெரியும்.

சமாதானமாத் தீர்க்கிற எல்லா வழிகளையும் கதவடைச்சுச் சாத்திப்போட்டு, ஐக்கிய நாடுகள் சபை வேண்டாமெண்டு மன்றாடினதையும் மதிக்காமல், மற்ற நாடுகள், -வீட்டோ நாடுகள்கூட எதிர்ப்புத் தெரிவிக்கக்கேயும் இந்தா வாறன் சண்டைக்கெண்டு கிளம்பியிருக்குது அமெரிக்கா.

அதுக்குப் பின்னால இழுபடுகுது சனநாயகம் பேசிற பிருட்டன்.

ஈராக் ஆயுதப் பரிசோதகர்கள உள்ள விட்டதுதானே? அப்பிடியேதும் ஏடாகூடமாக் கண்டதா அவைகூட இதுவரை ஒண்டும் சொல்லேல்லை. ஈராக் முழுசா ஒத்துழைக்குதெண்டுதானே அவையும் சொல்லியிருக்கினம்.

அதுவுமில்லாமல் ஈராக் தன்னட்ட இருந்த அல்மொரா ஏவுகணைகளையும் அழிக்க ஒத்துக்கொண்டு அழிக்கவும் தொடங்கினதுதானே?

கடைசியாப் பாத்தால் ஓநாயும் ஆட்டுக்குட்டியும் கதைதான் நடக்குது. ஆறொண்டில ஓநாயும் ஆட்டுக்குட்டியும் தண்ணி குடிச்சினமாம்.

"ஆத்துத் தண்ணிய எச்சில் படுத்திட்டாய்" எண்டு ஆட்டுக்குட்டியப் பாத்துக் குற்றம் சாட்டிச்சுதாம் ஓநாய்.

"நான் பள்ளத்தில நிக்கிறன். நீங்கள் உசரத்தில, என்ர எச்சில் உங்களுக்கு வராது" எண்டு ஆட்டுக்குட்டி பதில் சொல்ல,

"நீ ஆறுமாதத்துக்கு முன்னம் என்னைத் திட்டினியாமே" எண்டுதாம் ஓநாய்.

"ஐயோ, நான் பிறந்தே நாலு மாதம் தான்" எண்டுதாம் ஆட்டுக்குட்டி.

"அப்ப உன்ர அண்ணன் திட்டியிருக்கிறான்" எண்டுதாம் ஓநாய்.

"எனக்கு அண்ணனே இல்லையே" எண்டுதாம் ஆட்டுக் குட்டி.

"ஏடேய், உன்ர பரம்பரையில யாரெண்டாலும் ஒருத்தர் திட்டியிருப்பினம்" எண்டிட்டு ஆட்டுக்குட் டிக்கு மேல பாய்ஞ்சு கடிச்சுத் திண்டுதாம் ஓநாய்.

இங்க யார் ஓநாய்...?

யாவும் கலப்படமற்ற கற்பனை

# நினைத்து, நினைத்து சிரிக்க

தலிபான் தலைவர் முல்லா முகமது ஹஸன், புஷ் இருவரும் காபூலில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். புஷ் உட்காரும்போது கவனித்தார், முகமது ஹஸனின் மேஜைக் கைப்பிடியில் மூன்று பட்டன்கள் இருந்தன.

பேச்சுவார்த்தை ஆரம்பித்தது. முஹமது பேசிக் கொண்டே ஒரு பட்டனை அழுத்தினார். மேஜையில் இருந்து ஒரு குத்துச்சண்டை கையுறை கிளம்பிவந்து புஷ்ஷின் முகத்தில் குத்தியது. திகைத்த புஷ்ஷைப் பார்த்து சிரித்தார் முஹமது ஹஸன். தொடர்ந்து பேசினார்கள்.

கொஞ்ச நேரம் கழித்து இன்னொரு பட்டனை அழுத்தினார் முஹமது ஹஸன். மேஜையில் இருந்து ஒரு பொம்மைக் கால் கிளம்பி வந்து புஷ்ஷை உதைத்தது. திடுக்கிட்டு புஷ்ஷைப் பார்த்துச் சிரித்தார் முஹமது ஹஸன். பேச்சுவார்த்தை தொடர்ந்தது.

ஐந்து நிமிடம் கழித்து மூன்றாவது பட்டனைத் தட்டினார் முஹமது ஹஸன். மேஜையில் இருந்து ஒரு குச்சி கிளம்பி வந்து புஷ்ஷின் மண்டையில் அடித்தது. அதற்கு மேலும் பொறுமை காக்க முடியாத புஷ், "சரி நாம் நமது அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையை வாஷிங்டனில் வைத்துக்கொள்வோம்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டார். பதினைந்து நாட்களுக்குப் பிறகு வாஷிங்டனில் இருவரும் சந்தித்துக்கொண்டார்கள்.

ஜார்ஜ் புஷ்ஷின் மேஜை மீது மூன்று பட்டன்கள் இருந்ததை முகமது ஹஸன் கவனித்தார். பேச்சு நடந்து கொண்டிருந்தபோது புஷ் முதல் பட்டனை அழுத்தினார். இதை எதிர்பார்த்திருந்த முஹமது ஹஸன் சட்டென்று தலையைத் திருப்பிக் கொண்டார். ஆனால் ஏதும் நடக்கவில்லை.

கொஞ்ச நேரம் கழித்து மீண்டும் இன்னொரு பட்டனை அழுத்தினார் புஷ். நாற்காலியிலிருந்து எவ்விக் குதித்தார் முகமது ஹஸன். இந்தத் தடவையும் எதுவும் நடக்கவில்லை. புஷ் புன்னகைத்துக்கொண்டார். புஷ் மூன்றாவது பட்டனை அழுத்தியபோது நாற்காலியிலிருந்து குதித்து தரையிலேயே விழுந்துவிட்டார் முகமது ஹஸன். புஷ் பெருஞ்சிரிப்புச் சிரித்தார். "இனிமேலும் என்னால் தாங்க முடியாது, நான் ஆப்கானிஸ்தானுக்குப் போகிறேன்" என்று எழுந்தார்.

சிரித்தபடி சொன்னார் புஷ்: "எந்த ஆப்கானிஸ்தான்?"

# இந்தவாரம் உங்கள் பலன்

30.03.2003 தொடங்கி 05.04.2003 வரை

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

மீனம்- சூரியன், மேடம்-புதன், இடபம்- சனி, இராகு, கர்க்கடகம்- வியாழன், விருட்சிகம்- கேது, தனு- செவ்வாய், கும்பம்- வெள்ளி. சந்திரன் விருட்சிகம், தனு, மகரம், கும்பம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்:**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை, முதற்கால்) தொழில் நிலை சிறப்பு, பணவரவு, குடும்ப மகிழ்ச்சி, உறவினர் உதவி, வெளியிடவாசம், உத்தியோகக் கஷ்டம், வீண்குறை கேட்டல், மாணவர் கல்வி மேன்மை, பரீட்சைகளில் சித்தி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்: 06.

**இடபம்:**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில்நிலை மந்தம், வீண் செலவு, அன்னியர் சகவாசம், கௌரவக் குறைவு, பிரயாண மிகுதி, உத்தியோக நிலை மாற்றம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வியில் மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்: புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்: 07.

**மிதுனம்:**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழில் கஷ்டம், பணவரவு குன்றும், தூர இடப் பயணம், அன்னியர் உதவி, உத்தியோக நன்மை, கடின உழைப்பு, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்: திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்: 02.

**கர்க்கடகம்:**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்,) தொழில் நிலை சிக்கல், பணக் கஷ்டம், வீண். குறை கேட்டல், பெரியோர் உதவி, இனசன நன்மை, உத்தியோக சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை. மாணவர் கல்வி மந்தம். விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்: 05.

**சிங்கம்:**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) செய்தொழில் நன்மை, காரியானுகூலம், பணவரவு, பெரியோர் நட்பு, உயர்ந்த நிலை, உத்தியோகக் கஷ்டம், மறைமுக எதிர்ப்பு, மாணவர் கல்வி மேன்மை, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்: செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்: 04.

**கன்னி:**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம்,சித்திரையின் முன்னரை) தொழில் பிரச்சனை, ஊழியர்கள் கஷ்டம், பணவரவில் தாமதம், வீண் பிரயாணம், தேகசுகம் பாதிப்பு, உத்தியோக முயற்சி, புதிய ஸ்தானம் கிடைத்தல், மாணவர் கல்வி பேறு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்: திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்: 01.

**துலாம்:**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்,) தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் உதவி, பணக் கஷ்டம் தீரும். உத்தியோகச் சிறப்பு, திடீர்ப் பிரயாணம், மாணவர் கல்வி மாற்றம், பரீட்சைகளில் சித்தி; விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்: புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்: 03.

**விருட்சிகம்:**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை,) குடும்ப நன்மை, இனசன உதவி, தொழில் பேறு, உயர்ந்த நிலை, பணச் செலவு, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்: வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்: 04.

**தனு:**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்,) தொழில் கஷ்டம், பணவரவு தடை, அன்னியரால் கெடுதி, மனக் கலக்கம், உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், பரீட்சைகளில் சித்தி, விவசாயிகள், வியாபாரிகள் முதலீட்டு இலாபம்.
அதிர்ஷ்ட நாள்: செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்: 01.

**மகரம்:**
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) செய்தொழில் விருத்தி, காரியானுகூலம், உயர்ந்த நிலை, உறவினர் கெடுதி, உத்தியோக சிக்கல், வீண் முயற்சி, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் கூடிய இலாபம்.
அதிர்ஷ்ட நாள்: திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்: 02.

**கும்பம்:**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) மனக்குறை நீங்கும், காரிய சித்தி, புதிய முயற்சி, உயர்ந்த நிலை, பணக் கஷ்டம், உத்தியோக மாற்றம், மாணவர் கல்வியில் மந்தம், மனக் கவலை. விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிர்ஷ்ட நாள்: புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்: 03.

**மீனம்:**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி,) முயற்சிகள் பலிதம், மன மகிழ்ச்சி, பெரியோர் உதவி, வெளியிடப் பயணம், உத்தியோகச் சிறப்பு, புதிய பதவி கிடைத்தல், மாணவர் கல்வி மேன்மை, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்: செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்: 01.



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண் முகம் மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

3236657


ஆகியோர் 'வீக்'கான நிலையில் இருக்கும் அணியை மீண்டும் நிலைநிறுத்தி 'போட்டிக்குள்' கொண்டு செல்லும் ஆற்றல் உள்ளவர்கள்.

ராகுல் ட்ராவிட் துடுப்பாட்டக்காரராக அணியில் இணைந்து தற்காலிகமாக விக்கெட் கீப்பர் பணி செய்யப் போய், அதுவே பின்னர் நிரந்தரமாகி இப்போது இந்திய அணியில் உள்ள பலமான தூண்களில் ஒன்றாக கருதப்படக் கூடியவர்கள்.

உலகக் கிண்ணப் போட்டியில் நியூஸிலாந்துக்கு எதிரான முதல் சுற்று ஆட்டத்தில் கைஃபும் ட்ராவிட்டும் இணைந்து அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றார்கள்.

ட்ராவிட்டுக்கு இரசிகர்களை விட இரசிகைகள்தான் அதிகம் என்பது போனஸ் செய்தி.


கடந்த காலங்களில் கங்குலியைப் போலவே இவரும் பல காதல் சமாச்சாரங்களில் சிக்கியிருந்தவர். இந்தியப் பத்திரிகைகளில் பரவலாக ட்ராவிட் பற்றிய கிசுகிசுகள் ஒரு காலத்தில் வெளிவந்துகொண்டிருந்தன. இந்திய திரைப்பட நடிகைகள் பலருடன் ட்ராவிட்டுக்கு நட்பு இருந்ததாகக் கூறப்படுகிறது.

இவரது ஆட்டத்தைக் காண்பதற்கென்றே விமானமேறி வெளிநாடுகளுக்குச் செல்லும் ஹிந்தி நடிகைகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். இம்முறை உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தைக் காண்பதற்காகவும் பல முன்னணி சினிமா நட்சத்திரங்கள் தென்னாபிரிக்காவுக்குப் பறந்தனர்.

இதுவரையில் நடைபெற்ற அநேகமான போட்டிகளில் சிறப்பாக ஆடிய இந்திய வீரர்கள் ஜோஹன்னஸ்பேர்க்கில் ஹிந்தி நடிகைகள் போய்ச் சேர்ந்ததும் கிரிக்கெட்டை விட்டு வேறு விடயங்களில் கவனம் செலுத்தத் தொடங்கிவிடுவார்களோ என்று இந்திய விளையாட்டு சஞ்சிகை ஒன்று கிண்டல் செய்திருந்தது.

⬇ அணியின் நடுத்தர வரிசைத் துடுப்பாட்டக்காரர்கள் இந்திய கிரிக்கெட்டின் மிகப் பெரும் பலம். தப்பித் தவறி சச்சினும், கங்குலியும் ஆரம்ப ஓவர்களிலேயே பெவிலியனுக்குத் திரும்பிவிட்டால் திடுதிடுவென ஒருவர் பின் ஒருவராக ஆடுகளத்துக்குச் செல்லும் நிலை இப்போது இந்திய அணியில் குறைந்துவிட்டது.

நடுத்தர வரிசை ஆட்டக்காரர்களான முகமட் கைஃப், ராகுல் ட்ராவிட், யுவராஜ்சிங்





# என்ன சொல்றாங்க...




அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

Website: www.lapis.com/arul

436331


# நாயகர்கள்





⬅ ஸ்டீவ் டிகோலே, கென்ய அணியின் தலை வரும் (படத்தில்) அவ்வணியின் சிறப்பு துடுப்பாட்டக்காரரும் இவர்தான். மிகவும் நிதானமாக விளையாடுகிறார். துடுப்பாட்டத்தில் ஆட்ட நுணுக்கங்களைப் போலவே பொறுப்புணர்வையும் காண முடிகிறது. தனது அணி அரையிறுதி ஆட்டத்திற்குத் தெரிவானது குறித்து ஏனையவர்கள் வெளிக்காட்டும் அதிர்ச்சி டிகோலேயிடம் இல்லை. இதற்குத் தாங்கள் தகுதியானவர்கள்தான் என்று அவர் கூறுகிறார். கென்யாவின் விளையாட்டுத்துறை அமைச்சு அந்த நாட்டில் இதுவரை காலமும் கிரிக்கெட்டுக்குப் பெரிய அளவில் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஆனால் இந்தக் கிண்ணப் போட்டியோடு கிரிக்கெட் அணியின் முன்னேற்றத்திற்காக விழித்தடித்துக் கொண்டு நிதி வழங்க முன்வந்திருக்கிறது. வீரர்களுக்குத் தனிப்பட்ட ஸ்பொன்ஸர்களும் கிடைக்க ஆரம்பித்துள்ளன.

➡ யாரும் எதிர்பார்க்கவில்லை. எந்த கிரிக்கெட் வல்லுநரும் முன்கூட்டியே எதிர்வு கூறவில்லை கென்ய வீரர்கள் உலகக் கிண்ணப் போட்டிகளின் அரையிறுதி ஆட்டம் வரை முன்னேறுவார்கள் என்று.

தன்னம்பிக்கை, ஒற்றுமை, நாம் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்ற மனோதிடம் எல்லாமாகச் சேர்ந்து கிரிக்கெட் வரலாற்றில் ஒரு சாதனை அணியாகத் தன்னை அடையாளம் காட்டியது கென்யா. டெஸ்ட் அந்தஸ்துப் பெறாமலேயே உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் அரையிறுதி ஆட்டம் வரை வந்த அணி கென்யா மட்டும்தான்.

இலங்கை அணியைப் போல அதிர்ஷ்டம் கைகொடுத்தது. இன்னொரு அணியின் தோல்வியை எதிர்பார்த்திருந்து அரையிறுதி ஆட்டத்திற்குத் தெரிவாகவில்லை கென்யா. இவர்கள் இலங்கை அணியையும், சிம்பாப்வே அணியையும் முதல் சுற்றில் மோசமாகத் தோற்கடித்தார்கள்.

அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவிடம் கென்யா தோற்றபோதும் அவ்வணி நன்றாகத்தான் விளையாடியது. முதல் அரையிறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவிடம் படுதோல்வியடைந்த இலங்கை அணியை விட கென்ய வீரர்களின் பந்துவீச்சு, களத்தடுப்பு என்பன உயர்ந்த தரத்தில் காணப்பட்டது. கென்யாவிடம் 'மின் ஃபீல்ட்' அம்சத்தை அரிதாகத்தான் காண முடியும். கென்யாவின் ஆரம்பப் பந்துவீச்சாளர்கள் ஏனைய சர்வதேச அணிகளின் தரத்துக்குப் பந்துவீசுகிறார்கள்.

துடுப்பாட்டத் துறையில் கென்யா இன்னும் பல படிகள் முன்னேற வேண்டி இருப்பதாகச் சுட்டிக்காட்டும் விமர்சகர்கள் முறையான பயிற்சியும் போதியளவு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டால் கென்யா அணி முதல்தர கிரிக்கெட் அணியாக விரைவிலேயே தேறி விடும் என்று கூறுகின்றனர்.

## ஆம் பிறந்த நாள் வாழ்த்து 28.03.2003

### செல்வி துளிரினி



நல்லூர் வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த திரு. திருமதி திருநாவுக்கரசு-லிங்கேஸ்வரி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வி துளிரினி தனது ஆறாவது பிறந்த நாளை 28-03-2003ல் கனடாவில் வசிக்கும் ஆரிய மாநகரில் அமைந்துள்ள தனதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அக்கா, லாவண்யா, கனடாவிலுள்ள சித்தப்பா-சித்தி, அண்ணன்மார்களான பிரவீன், பிரேம், மோகனன்-மஞ்சு குடும்பம், தம்பி மாதுஷன், ராஜா மாமா குடும்பம், நந்தகோபன் மாமா குடும்பம், காந்தன் மாமா குடும்பம், ஆனந்தன் மாமா குடும்பம், செல்வா மாமா குடும்பம், சிவச்செல்வம் மாமா குடும்பம், ஜூலியன் மாமா, நேசன் மாமா, தாஸ் மாமா குடும்பம், சதீஸ மாமா, லண்டனிலுள்ள அண்ணன்மார் வித்தன், சிதம்பரநாதன், குகன் மாமா குடும்பத்தினர், சந்திரன் மாமா குடும்பம், டொரன்டோவிலுள்ள குகன் சித்தப்பா, குமண சித்தப்பா, ஜேர்மனி சிவாஜினி பெரியம்மா குடும்பம், மட்டு-துறைநீலாவணை ஆசைத்தம்பி குடும்பம், யாழ்ப்பாணத்திலுள்ள பெரியத்தை சின்னத்தம்பி புவனேஸ்வரி, சின்னத்தை சின்னராசா மல்லிகாதேவி குடும்பத்தினர், அப்பப்பா மருதடி, பெரியம்மாமார்களான விக்கினேஸ்வரி, நாகேஸ்வரி குடும்பத்தினர், பேராதனையிலுள்ள சிந்துஜா அக்கா மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.


BRAND NEW 4 WHEEL TRACTORS





Rs. 230,000/=upwards

2 YEARS GUARANTEE & 5 FREE SERVICES

15HP-20HP-30HP-45HP

FREE Colour TV (21") TV WHEN YOU BUY A TRACTOR

GUDWIL

FREE COLOUR TV [14"] WHEN YOU BUY ON OUR INTEREST FREE EASY PAYMENT TERMS

Contact Us now to Reserve your tractor

55, Dutugemunu Street, Pamankade, Dehiwela

Tel: 818415, 074-208101/2, 0777-35 1695, Fax: 818416




இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் மார்ச் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.